Volume-14
Issue-8

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

ஆகஸ்ட்- 2021 (முஹர்ரம்-1443)

விலை ரூ. 20/-



## இந்தியாவின் விடுதலை நாள் விழாக்கள் செங்கோட்டையில் ஏன்..?

ஜியாவுத்தீன் @
சுபாஷ் சந்திரபோஸ்
பத்தான் உடையில்

ஷா நவாஸ்

பகதூர்ஷா ஜாஃபர்

- மகளிர் மன்றம்
- மருத்துவம்



## அன்புத் தந்தை ஸ்டான் சுவாமி மரணம் யாரால்..?

“

முஃமின்களே!
ஃபாஸிக் (தீயவன்)
எவனும் உங்களிடம்
ஒரு செய்தியைக் கொண்டு
வந்தால், அதைத் தீர்க்க
விசாரித்துக் கொள்ளுங்கள்;
(இல்லையேல்)
அறியாமையினால்
(குற்ற மற்ற)
ஒரு சமூகத்தாருக்கு
நீங்கள் தீங்கு செய்து
விடலாம்; பின்னர் நீங்கள்
செய்தவை பற்றி நீங்களே
கைசேதப் படுபவர்களாக
(கவலைப்படுபவர்களாக)
ஆவீர்கள்.

(அல்குர்ஆன் 49 : 6)

”


இந்தியாவின் விடுதலைநாள் விழாக்கள் செங்கோட்டையில் ஏன்..? - 4
செங்கோட்டையில் நடந்த இரண்டாவது வழக்கு... - 10
விடுதலைப்போரில் ஆடுதுறை அப்துல் அஜீஸ் (ரஹ்) - 13
உண்மையில் இந்தியா யாருடையது..? – 14
Fr. ஸ்டான் சுவாமி மரணமும்.... BK-16 வழக்கும் - 16
அன்புத் தந்தை ஸ்டான் சுவாமி மரணம் யாரால்..? - 18
ஏக்தின் காஸ்ஹ்தான் வெளியிட்டதோர், தோல் நாணயம் - 23
உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் - 25
இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) - 28
நூல் அரங்கம் - 31
சிலுவைப்போர்கள் 2.0 - 35
பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் – 38
மகளிர் மன்றம் - 42
ஐரோப்பாவில் குளித்தால் தெய்வக் குற்றம் - 45
மருத்துவம் - 46
கஷ்மீர் முதல் அனைத்து முனைகளிலும் தோற்ற மோடி - 50
கேரள கம்யூனிஸ்ட் கட்சி கோரத்தை வெளிக் கொண்டு வந்த மாலிக் - 52
இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள் - 55
ஒரு நிமிடம்... - 59
இங்கிலாந்தில் உருவாகும் மாற்றம் - 60
தலையங்கம் - 62
அவர்கள் தயாராகி விட்டார்கள்..? - 64



ஆகஸ்ட்-2021 **வைகறை வெளிச்சம்** முஹரம்-1443

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A., Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.

**கொள்கை வழியில் :**
செய்தி மடல், விடியல் வெள்ளி, ஆகியவற்றின் தொடர்ச்சி

http:/www.facebook.com/vaigarivelicham

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# இந்தியாவின் விடுதலை நாள் விழாக்கள்

# செங்கோட்டையில் ஏன்..?

விடுதலை சுதந்திர திருநாள், என்றாலே செங்கோட்டையில் கொடியேற்றம்! கொண்டாட்டம், கோலாகலம். அதாவது முகலாய மன்னர் ஷாஜஹானின் கோட்டையில் குதூகலம், ஆரவாரம்.

இந்த செங்கோட்டை பல அதிசயமான வழக்குகளுக்கு விசாரணை மன்றமாக அமைந் திருக்கின்றது. அவை இந்திய விடுதலைப் போரோடு சம்மந்தப்பட்டவை.

ஒன்று, முதல் விடுதலைப் போர் என்றழைக் கப்படும். 1857–இல் நடந்த ஜிஹாத். அதற்கு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தலைமை தாங்கிய முகலாய மாமன்னர் பகதூர்ஷா ஜாஃபர் அவர்களின் வழக்கு விசாரணை! பலருக்கு தூக்குத் தண்டனை, தலைவெட்டும் தண்டனை.

இன்னொன்று சுபாஷ் சந்திரபோஸ் அவர் களின் தலைமையில் விடுதலைக்காகப் போர் புரிந்த இந்திய தேசியப் படையின் Indian National Army (INA) தளபதிகளின் விசாரணை. அதில் கடைசிவரை தளகர்த்தராக இருந்த முதன்மைத் தளபதி "ஷா நவாஸ்" அவர்களும் அவர்களின் தலைமையின் கீழ் அணிவகுத்து நின்ற இந்திய

முகமன்

இந்த ஆகஸ்ட்டு திங்கள் 15ஆம் நாள் 75ஆம் விடுதலை விழா நடைபெறுகின்றது. இந்திய விடுதலைக்கு வித்திட்டவர்களும் அதனை நிறைவடையச் செய்தவர்களும் முஸ்லிம்களும் இந்துக்களும் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினருமாவர்.

அதனால், இன்ஷா அல்லாஹ் வைகறை யில் தொடர்ச்சியாகக் கட்டுரைகளை வெளியிட தீர்மானித்துள்ளோம். அந்த வகையில், முதல் கட்டுரையாக இந்த அட்டைப்படக் கட்டுரையை எடுத்துக் கொள்ளவும்.

"அல்ஹம்துலில்லாஹ்"



தேசியப் படையின், மழவர்களும். இவர்களின் வழக்கு விசாரணை தண்டனை.

இந்த வழக்குகளுக்கு அப்பால், இந்திய விடுதலைப் போருக்கு பல்வேறு தளங்களிலும் தலைமை தாங்கிய ஆலிம்கள், இமாம்கள். இவர்கள் மீது நடத்தப்பெற்ற விசாரணையும், வழங்கப்பட்ட தண்டனைகளும், தலை வெட்டு களும், நாடு கடத்தலும், அந்தமான் கார கிருகங் களுக்கு அனுப்புதலும், இப்படி எண்ணிறைந்த, விடுதலைப் போர் தியாகத் தளபதிகளின் விசாரணை மையமாக அமைந்ததுதான் செங்கோட்டை.

## செங்கோட்டை

*1638ஆம் ஆண்டு மே,12 ஆம் நாள் மாமன்னர் ஷாஜஹான் அவருடைய, ஷாஜகான் பூருக்குத் தலைநகராக கட்டப்பட்டதுதான் இந்த செங்கோட்டை. 10 ஆண்டுகளாக இதன் பணிகள் நடைபெற்றன. 1648–இல் நிறைவுற்றன.*

இதனைக் கட்டியவர் தாஜ்மகாலைக் கட்ட மைத்துக் காட்டிய உஸ்தாத் அஹமத் லாகூரி என்பவர்தான்.

இந்த செங்கோட்டையைக் கட்டி முடித்த பின்தான், ஆக்ராவில் முகலாய மாமன்னர்களின் தலைநகராக இருந்த ஆக்ரா சுற்றுலாப் பயணி களின் காட்சிப் பொருள். அதன்பிறகு இந்தியா வின் தலைநகராக டெல்லியும் செங்கோட்டை யும் வரலாறு படைக்கின்றன.

இன்று வரைக்கும், அது நீடிக்கின்றது. இன்ஷாஅல்லாஹ் எதிர்வரும் நாட்களிலும், அதுவே நீடிக்கும்.

இந்த ஷாஜஹானின் கோட்டையில் நின்று தான் முதல் சுதந்திர நாள் விழாவை, பண்டித நேரு அவர்கள் உரையாற்றித் தொடங்கி வைத்தார்கள்.

இந்தக் கோட்டை சர்வதேச நுண் கலை பொருள் வளையத்திற்குள் 2007இல் கொண்டு வரப்பட்டது. UNESCO'S World Heritage Centre அந்த நிலைதான் இன்றும் தொடருகின்றது.

முகலாய மாமன்னர் ஷாஜஹானின் செங்கோட்டையில்தான் அன்று கடைசி முகலாய மாமன்னர் பகதூர்ஷா ஜாஃபர் அவர்கள் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டார்கள் ஆங்கிலேயர்களால்.

ஷாஜஹானின் செங்கோட்டை, எத்தனையோ வரலாற்று நிகழ்வுகளின் சாட்சி. இன்றும் உலக மக்கள் அனைவருக்கும் காட்சிக்கு வைக்கப் பட்டு, காண வருவோரிடம் தினமும் லட்சக் கணக்கான பணம் கட்டணமாக வசூலிக்கப் பெற்று வருகின்றது. ஒரு பெரும் வருவாயையும் ஈட்டி வருகின்றது.

ஷாஜஹானின் மற்றொரு மாமஹால், தாஜ்மஹால் (1631) ஈட்டும் பொருளுக்கு அள வில்லை. உலக அதிசயங்கள் என்ற பட்டியலில் நாங்களும் உண்டு என நம் நாடு பெருமைப் பட்டுக்கொள்ள வேறேதும் இல்லையே! இந்த வகையில் இந்தியாவின் மானம் காத்த மாமன்னர் கள் முகலாய ஆட்சியாளர்கள்.

இந்தியாவின் முதல் குடியரசு தலைவர் – முதல் குடிமகன் (CAA-இல் அவர் வருவார்) வீற் றிற்கு முகலாய தோட்டம் கட்டித் தந்து, தோர ணம் அமைத்தவர்களும் அதே முகலாயர்கள் தாம்.



பகதூர்ஷா ஜாஃபர்

அங்கேதான் ஜனவரி 27, 1858இல் பகதூர்ஷளா ஜாஃபர் அவர்கள் ஆங்கிலே யர்களுக்கெதிராக மக்களை அணிதிரட் டிப் போர் புரிந்தார் என்பதற்காக விசாரணைக்கு நிறுத்தப்பட்டி ருந்தார். 84 வயது அவருக்கு.

## குற்றச்சாட்டுகள்

அவர்மீது குற்றச்சாட்டுகள், ஒவ்வொன்றாகப் படித்து காட்டப்பட்டன அவை ;

1) சிப்பாய் கலவரத்திற்கு உந்துதலாக இருந்தீர், அதனை வளர்த்தீர்.

2). ஆங்கில அரசிற்கு எதிராக, பல்வேறு குழுக்களையும், ஒன்று திரட்டி (பிரிட்டீஷ் அரசுக்கு) ஆங்கில அரசுக்கு எதிராக போர் புரியத் தூண்டினீர்.

3) ஹிந்துஸ்தானின், ஆட்சியையும், ஆளுமையையும் கையில் எடுத்துக் கொண்டீர்.




*4)* கிறிஸ்தவர்களைக் கொலை செய்தவற்குக் காரணமாகவும், துணையாகவுமிருந்தீர்.

இன்று இந்தியாவின் மீது போர்த்தொடுத் தீர்கள் என்ற பொய்க் குற்றச்சாட்டும், தேசத் துரோகக் குற்றச்சாட்டும் மிகச் சர்வ சாதாரண மாக அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் மீது சுமத்தப்படுகின்றன இன்றைய பாசிஸ்ட்டுகளால்.

இதே குற்றச்சாட்டுகளைத்தான் அன்று ஆங்கில அரசு நமது விடுதலைப் போர்வீரர்கள் மீது சுமத்தியது.

அன்றைய நாள்களில், அதாவது விடுதலைப் போரின் நாள்களில், இவர்கள் ஆங்கிலேயர்களின் கைக்கூலிகளாகவும், ஆங்கில அரசுக்கு எதிராக போராடிய விடுதலைப் போர் வீரர்களைக் காட்டிக் கொடுப்பவர்களாகவுமிருந்தனர். (பார்க்க வைகறை வெளிச்சம். ஆகஸ்ட்–2018 விரிவான கட்டுரை)

இதை நீட்டி முழக்காமல் சொன்னால், 70 ஆண்டுக்குள் இந்தியா இன்னொரு அடிமைத் தளைக்குள் சிக்கிக்கொண்டது. பலநூறு வருடங்களாக நாம் போர் செய்து பெற்ற உரிமைகளை இவர்கள் ஒவ்வொன்றாகப் பிடுங்கி வருகின்றார்கள்.

## வேறுபாடுகள்

இந்த பாசிஸ்ட்டுகளின் கொலைகளுக்கும் அன்றைய ஆங்கிலேய காலனியாதிக்கக் கொலைகளுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், அது காலனி ஆதிக்கம். இது பச்சையான பாசிசம்.

காலனி ஆதிக்கம், அன்னிய நாடுகளையும் அந்திய நாட்டு மக்களையும் அடிமைப்படுத்தும் சுரண்டும் காலனி ஆதிக்கத்தை எதிர்ப்பவர்களைக் கண்ணை மூடிக்கொண்டு குரூரமாகக் கொலை செய்யும்.

அப்படிப்பட்ட கொலைகளுள் ஒன்றுதான் ஜாலியன் வாலாபாத் கொலைகள். *13*–ஏப்பிரல் ***1919.*** மக்கள் எந்தப் பக்கமும் தப்பித்துச் சென்றிட வழி விடாமல், எல்லா வாயில்களையும் அடைத்து வைத்து விட்டுத்தான் துப்பாக்கிச் சூடுகளை நடத்தியுள்ளார்கள். எல்லாக் கொடுமைகளும் அவர்கள் ஆக்கிரமித்து, அடக்குமுறை மூலம் ஆட்சி செய்யும் அவர்கள், அன்னிய நாட்டு மக்கள் இந்தியர்கள் மீதுதான்.

ஆமாம், பாசிஸ்ட்டுகள் தங்கள் சொந்த நாட்டு மக்களையே கொலை செய்வார்கள். (உதாரணம் : *2002* குஜராத் கலவரம்)

ஆனால், இன்றைய இந்துத்துவ பாசிஸ்ட்டுகள், தங்களது சொந்த நாட்டு மக்களையே கொலை செய்வார்கள், மும்பை, பாகல்பூர், குஜராத், முசாப்பர் நகர், டெல்லி, இவையெல்லாம் மிகச் சில எடுத்துக்காட்டுகள். பல பொய்களின் மூலம் பழியை முஸ்லிம்கள் மீதே போடுவார்கள்.

*1857*இல் நடைபெற்ற சிப்பாயக் கலவரத்திற்குப் பின், ஆங்கிலேயர்களால் முஸ்லிம்களும் இந்துக்களும் கொலை செய்யப்பட்டார்கள். *2020*இல் டெல்லியில் பாசிஸ்ட்டுகள் முஸ்லிம்களைக் கொலை செய்தது போலிருந்தது.

*1857*இல் கொலைகளை நடத்தியவர்கள் காலனி ஆதிக்க ஆட்சியாளர்கள் என்பதால் அவர்கள் மொத்த இந்தியர்களையும் கொலை செய்தார்கள். டெல்லி படுகொலையை நடத்தியவர்கள் பாசிஸ்ட்டுகள் என்பதால் நாட்டு முஸ்லிம்களையே கொலை செய்தார்கள்.

## வரலாற்றுத் திரிபுகள்

இந்த வழக்கு விசாரணைக்குள் இறங்குவதற்கு முன் சில முக்கிய வரலாற்றுத் திரிபுகளை இங்கே சுட்டிக் காட்டுவது தலையாயது.

''சிப்பாய்க் கலகம்'' என்றும், *1857*இல்

நடந்ததுதான் "முதல் விடுதலை போர்" என்றும் பேசுவதும் ஓர் வரலாற்றுச் சதி!

அதற்கு முன், அதாவது வெள்ளைக்கார கும்பல் இந்திய மண்ணில் காலெடுத்து வைத்த நாள் முதலே அதனை எதிர்த்துப் போர்கள் – விடுதலைக்கான போர்கள் 1700களிலேயே நடைபெற்றன.

பிளாசி போர் 1757இல் இந்திய விடுதலைப் போரின் முத்தாய்ப்பான ஓர் வரலாற்றுச் சான்று. அது சிப்பாய் கலகம் நடப்பதற்கு 100 ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அன்று முதல் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போர்கள் – ஓர் ஒப்பற்ற விடுதலை வேட்கையுடன் தொடர்ந்து நடந்துக் கொண்டேதான் இருந்தது. இந்திய நிலபரப்பின் குடிமக்கள் லட்சக்கணக்கில் உயிரைத் தந்தார்கள்.

1799இல் மே 4ஆம் நாளில் திப்புசுல்தான் ஷஹீத் – வீர மரணமடையும் வரை தொடர்ந்த மைசூர் போர்கள். திப்புவை வீழ்த்திய பின்னர் தான் இந்தியா நமக்கு என்றார்கள்.

1806இல் வேலூரில், திப்புசுல்தானின் மனைவிமார்களும், பிள்ளைகளும், பக்கீர்களும், சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் நடத்திய புரட்சிகள், போர்கள்.

ஜான்சிராணி, ஹசிரத் மஹ்ல் போன்ற ஆயிரமாயிரம் வீராங்கனைகள் நடத்திய போர்கள், இவையெல்லாம் விடுதலை போர்களில்லையாம், இந்த வரலாற்று திரிபை முன்னின்று செய்யும் மாதோன் மத்தர்கள் பார்வையில்!

அதேபோல் 1857ல் நடைபெற்றது வெறும் சிப்பாய்களின் கலகமல்ல. அது முழுமையான தோர் விடுதலைப் போர். அதில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நம் நாட்டு சிப்பாய்களும் கலந்துகொண்டார்கள்.

அதனை சிப்பாய்க்கலகம் எனக் குறைத்து கூறுவது, அதில் கலந்துகொண்டு உயிரைத் தந்த ஆயிரமாயிரம் இந்தியர்களின் தியாகத்தை ஒட்டு மொத்தமாக வரலாற்றுத் தடத்திலிருந்து அழிப்பதாகும்.

அத்தியாகத்தால் பெற்ற விடுதலை. அந்த விடுதலையின் சுவையை எல்லா வித்திலும் அனுபவிப்பவர்கள், செய்யும் மிகப்பெரிய வரலாற்றுத் துரோகமிது.

## "செங்கோட்டை விசாரணையிலும் திரிபுகள்"

இந்த விசாரணையிலும் பல்வேறு வரலாற்றுத் திரிபுகள் சிலர். பகதூர் ஷா ஜாஃபர் அவர்கள் மூன்றே குற்றங்களுக்காக விசாரிக்கப்பட்டார் என்கின்றார்கள். அவை,

1) ஆங்கிலேயர்களுக்கெதிரான கிளர்ச்சி.
2) நம்பிக்கைத் துரோகம்
3) கொலைகள்

இதில் நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். அது, ஆங்கிலேய ஆட்சியை அல்லது கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியை பகதூர்ஷா ஜாஃபர் அவர்களோ, அவர்களுக்குக் கீழ் விடுதலைப் போரில் கலந்துகொண்டவர்களோ எந்த நிலையிலும் ஆங்கிலேயர்களின் ஆட்சியை ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் கிளர்ச்சி என்ற சொல்லுக்கே இடமில்லை. அடுத்து நம்பிக்கைத் துரோகம்.

இதைச் செய்தது வெள்ளைக்கார கொக்குகளே அல்லாமல் இந்த நாட்டை அந்த அன்னியர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பாடுபட்ட – உயிரைத் தந்து போர்ப் புரிந்த மக்களல்ல. "The Last Mughals" - by William Dalrymple

வியாபாரம் என்ற பெயரில் வந்த வெள்ளையர்கள், இந்த நாட்டையே அபகரித்து அதன் சொந்த மக்களின் பிணங்களின் மேல் அதன் வளங்களை அபகரித்தவர்களே துரோகிகள்.

## அடுத்து கொலைகள்

ஒரு முழுப்போரின் போது அதுவும் தங்களை ஆக்கிரமித்து அவமானப்படுத்தி, அழிக்க வந்த ஒரு கொலைகார கும்பலை எதிர்த்து எழுச்சியோடு போர் செய்தவர்கள் எதிரிகளை முகந்து முத்தம்கொடுத்துக்கொண்டிருக்கமாட்டார்கள், கொலைகளைத்தான் செய்வார்கள்.

வரலாற்றில் இங்கேயும் ஓர் திரிபு நடந்திருக்கின்றது. அது ஆங்கிலேயர்களின் ஆவணங்களில் குற்றங்கள்இப்படிவரிசைப்படுத்தப்படவில்லை. என்னென்ன குற்றங்களுக்கான விசாரணை என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டோம். அதில்

நான்காவதாக கூறப்பட்ட குற்றம். அதாவது, பகதூர் ஷா ஜாஃபர் அவர்கள்

கிருஸ்தவர்களைக் கொலை செய்வதற்குக் காரணமாக இருந்தது, துணையாக இருந்தது.

## சிந்திக்க

1857இல் நடந்தது இந்திய விடுதலைப் போரின் ஓர் திருப்பு முனை, அதிலிருந்து 90 ஆண்டுகளில் இந்தியா விடுதலை அடைகின்றது.

அது, ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர். இன்றைய சொல்லாட்சியில், இந்துக் களும், முஸ்லிம்களும் இந்துக்களும் ஏனைய சமுதாயத்தவர்களும் ஒன்றாய் நின்று நடத்திய போர்.

அங்கே ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு ஆதர வாக நின்ற அத்தனை பேரும் எதிரிகள். அப்படி இருக்க கிருஸ்தவர்களைக் கொன்தாகக் கொலை குற்றத்தைச் சுமத்துவானேன்.

இந்தக் கேள்வியை முன் வைத்து ஓர் பெரும் மறைக்கப்பட்ட வரலாற்று உண்மையை நாம், இங்கே வெளிச்சத்திற்குக் கொண்டு வருகின் றோம்.

## மறைக்கப்பட்ட வரலாறு

உலக அரங்கில் முஸ்லிம்களின் வெற்றி வரலாற்றில் முக்கியத்தடம் 1453இல் கான்ஸ் டாண்டி நோபிள், வெற்றி; கொள்ளப்பட்டது.

இது இறைவனின் இறுதித்தூதர் பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு வாக்களித்த வெற்றிகளுள் ஒன்று.

இந்த கான்ஸ்டாண்டி நோபிள்தான் இன்றைய இஸ்தான்புல், (துருக்கி)

முஸ்லிம் உலகம், இந்த வெற்றியைக் கொண் டாடிக் கொண்டிருந்த வேளையில் அவர்களுக்கு எதிராக ஒரு பெரும் எதிர்ப்பு அணி திரண்டு கொண்டிருந்தது. அதனை அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

கான்ஸ்டாண்டி நோபிள் என்பது கிறிஸ்தவ உலகத்தின் தலையாய வரலாற்றுத் தடம். The Great Symbol of Chiristian Power அது பறிபோனதை கிருஸ்தவ உலகத்தால் தாங்கிட இயலவில்லை. அத்தோடு கிலாபத் என்ற இஸ்லாமிய உலகத் தலைமையை அவர்கள் மீண்டும் கொண்டு வந்ததையும் அவர்களால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை., ஆகவே அவர்கள் உலகெங்கும் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த இடங்களை குறி வைத்தனர்.

முஸ்லிம்கள் ஆட்சி நடத்தி வந்த சாம்ராஜ் யங்களை சிதைக்கவும், முஸ்லிம்களைச் சின்னா பின்னப்படுத்தவும் திட்டங்களைத் தீட்டவும் தலைப்பட்டார்கள்.

உண்மையில் அவர்கள், இன்னொரு சிலுவைப் போருக்குத் தயாரானார்கள். போர்த்துகீசிய நாட்டின் போப், உலகக் கிருஸ்தவர்களின் தலைவர், கிழக்குத் திசையை நோக்கி அவர்களை ஏவிவிட்டார். இதனை வரலாறு இப்படித் தன் பக்கங்களில் பதிவு செய்கின்றது. இதற்கான ஆணையாகிய பாப்பேல் புல் Papal Bull-ஐ வழங்கினார்.

Papal Bull Gave Authority to catholic Portugal to go on a holy crausade Eastwards, to hunt in india for wealth and allies against the ottaman "Saracens".

இதன் பொருள் :

பாப்பேல் புல் என்ற போப்பின் ஆணை ஒன்று கத்தோலிக்கப் போர்த்து கீசியர்களுக்கு கிழக்கு நோக்கிச் சென்று இந்தியாவில் ஓர் புனித சிலுவைப் போரைத் தொடங்குவதற்கு அதிகாரம் வழங்கியது. இந்தியாவில் செல்வத்தை யும், ஆதரவையும் திரட்டி இஸ்லாத்தின் ஆட்சியை மீண்டும் கொண்டு வந்த உதுமானிய சாம்ராஜ்யத்தை எதிர்கொள்ள தயராகும்படி அந்த ஆணை கூறிற்று.

போர்த்துக் கீசிரியர்களால் எதுவும் பெரிதா கச் செய்திட இயலவில்லை. அவர்கள் கல்கத்தா வில் சற்றே வியாபாரம் செய்து சம்பாதித்தார்கள். இராணுவ ரீதியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவியலாது. காரணம் இன்னும் முஸ்லிம்கள் அதிகப் பலத்துடனேதான் இருக்கின்றார்கள் என போர்த்துகீசிர்கள் தங்கள் போப் கூறிவிட் டார்கள்.

– ஆதாரம் Jihad and the conflict between Island and Christianity of the shade of Swords. by M.J.Akbar.

## மறைக்கப்பட்ட இன்னொரு வரலாறு

ஆங்கிலேயர்களின் இந்திய வருகை, இந்தியா வில் நிலைகொண்டிருந்த முகலாய சாம்ராஜ் யத்தை தகர்க்கவும், முஸ்லிம்களின் பிடியைத்

தளர்த்திடவுமே!

ஆனால், பொதுவாக மக்களிடம், ஆங்கிலேயர்கள் இங்கே வியாபாரம் செய்யத்தான் வந்தார்கள், என்ற எண்ணமே நிலை கொண்டுள்ளது. ஏனெனில் ஆங்கிலேயர்கள் வரைந்த வரலாறுகளில் இப்படித்தான் திரித்து எழுதி வைத்துள்ளார்கள். இதற்கும் பதில் சொல்லுகின்றார் எம்.ஜே.அக்பர், நாம் மேலே குறிப்பிட்ட நூலில்.


போர்த்துகீசியர்களால் கோவாவைத் தாண்டிட இயலவில்லை. இதனால் கத்தோலிக்க கிருஸ்தவத்தை எதிர்த்த ஆங்கிலேயே நாடாகிய பிரிட்டன் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அந்தப் பொறுப்பு, மெல்ல, மெல்ல முஸ்லிம்களின் முகலாய ஆட்சியை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் ஆங்கிலேயர்களை ஆட்சியில் அமர்த்துவது. இதற்கு ஆங்கில நாடாகிய பிரிட்டன் தேர்ந்தெடுத்த மொழி வியாபாரம் என்பதாகும். அல்லாமல் சிலுவைப் போர் என்பதல்ல. ஆனால், முஸ்லிம்களின் பதில் (பேச்சு வார்த்தையானாலும் சரி, போர் ஆனாலும் சரி) ஜிஹாத் என்ற அடிப்படையிலிருந்து வந்தது. அவர்கள் ஜிஹாத் என்ற கொள்கையால் தொடர்ந்து உணர்வூட்டப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்.

Portugeeses created a foothold in Goa it was left to the anti Catholic Britain to Gradually Displace and then replace the Mughal Empire. Britain Generally Preferred the language of commerce rather than that of the crusades, but the muslim response, whether in dialectics or war drew constant inspiration from the ever - present concept of jihadi. (The shade of swords. - M.J.Akbar)

ஆக, 1453இல் ஏற்பட்ட கான்ஸ்டாண்டிநோபிள் தோல்வியால் துவண்டுபோன கிருஸ்தவ உலகம் முஸ்லிம் இந்தியாவை – முகலாய இந்தியாவை வெற்றிகொள்ள வந்த உத்தியே வியாபாரம்.

அதனால்தான் செங்கோட்டையில் இந்திய விடுதலைப் போர் வீரர், பகதூர்ஷா ஜாஃபர் அவர்கள் மேல் சாப்பட்டபெற்ற குற்றச்சாட்டு கிருஸ்தவர்களை கொலை செய்ய காரணமாகவும், துணையாகவுமிருந்தது என்று அமைந்தது.

இந்த இஸ்லாமிய வெறுப்பு, வெறியை 1857இல் நடந்த விடுதலைப் போருக்குப் பின்




ஓர் ஆங்கிலேயே தளபதி இப்படிக் கூறினான்.

“நான் ஒவ்வொரு முஸ்லிமையும் ஓர், கிளர்ச்சியாளனாகவே பார்ப்பேன். நான் பார்க்கின்ற ஒவ்வொரு நபரையும் அவர் இந்துவா? முஸ்லிமா? என அறிந்துகொள்ள முயற்சிப்பேன். அவர் முஸ்லிம் எனத் தெரிந்தால் அவரை அந்த இடத்திலேயே சுட்டு விடுவேன்” (Source : Role of Muslims in the struggle for Freedom - by Abul Hassan Ali Nadwee)

1857 புரட்சிக்குப் பின் கிருஸ்தவர்களைக் கொலை செய்ததாக பழி கூறி முஸ்லிம்களை ஆயிரக்கணக்கில் கொலை செய்தார்கள் பாசிஸ்ட்டுகள்.

84 வயது பகதூர்ஷா ஜாஃபர் – நாடு கடத்தப்பட்டு, பின்னர் சாகடிக்கப்பட்டார். அதாவது மெல்ல மெல்ல கொன்றார்கள்.

இன்று சுதந்திர இந்தியாவில் பழங்குடி மக்களின் நல்வாழ்வுக்காக உழைத்த மனித உரிமை ஆர்வலர் ஸ்டான் சுவாமி–ஐ இப்படித்தான் மெல்ல, மெல்ல கொன்றார்கள்.

ஆங்கிலேயர்களிடம் பெற்ற விடுதலையை இந்திய பாசிஸ்ட்டுகளிடம் இழந்தோம். ●

# செங்கோட்டையில் நடந்த இரண்டாவது வழக்கு!

ஆனால், அன்று ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவை மீட்டிட சுபாஷ் சந்திரபோஸ் முற்றிலும் வேறொரு வழிமுறையை வகுத்திருந் தார். அது ஒரு பெரும் படையைத் திரட்டி, ஆங்கிலேயர்களுடன் நேரடியாக போர் செய்து, அவர்களை விரட்டி அடிக்க வேண்டும். ஆனால் அவருடைய திட்டத்தைச் செய்லபடுத் திட எப்படி ஆங்கிலேயர்கள் அனுமதிக்கவில் லையோ, அதேபோல் இந்தியாவில் விடுதலைப் போரின் தளகர்த்தர்களாக நின்ற காந்திஜியும் நேரும் விரும்பவில்லை. அதனால் அனுமதிக்க வில்லை.



ஜியாவுத்தீன் @
சுபாஷ் சந்திரபோஸ்
பத்தான் உடையில்

அவர்கள் அத்தோடு நிற்கவில்லை. நேதாஜி யின் ஒவ்வொரு அசைவையும் வேவு பார்த்தார் கள். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நோய் வாய்ப் பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டிருந்தார். அங்கேயும் தீவிரமான கண்காணிப்பு.

மருத்துவ மனையிலிருந்து வீட்டுக்கு வந்தார். அங்கேயும் தீவிரமான கண்காணிப்பு. ஆங்கிலே யர்கள் "CID" உளவாளிகள் மூலம் வீட்டைச் சுற்றி 24x7 என்ற அடிப்படையில் கண்காணிப்புகளைத் தீவிரப்படுத்தி இருந்தார்கள்.

இந்நிலையில்தான் சுபாஷ் சந்திரபோஸ் முழுமையானதொரு முஸ்லிம்—ஐ போல் வேடம் பூண்டார். 'ஜீயாவுத்தீன்' எனப் பெயரை மாற்றிக் கொண்டார். ஜனவரி *17, 1941* இரவு இரண்டு மணிக்கு தன்னுடைய இல்லத்திலிருந்து புறப் பட்டார். யாரும் கண்டுபிடிக்க இயலவில்லை. சற்றே நடந்தும் ஊர்ந்தும் வந்து, தயாராக நின்ற காரில் ஏறினார்.

அவருடைய உறவினர் சிசிர் குமார் போஸ் காரை ஓட்டினார். நேரே கல்கத்தா ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகலாம் என்றால், அங்கேயும் உளவுத்துறையினர் உறங்காமல் உளவுப் பார்த் துக் கொண்டிருப்பார்கள். அதனால் *300* கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள கோமாக் ரெயில் நிலையம் சென்று பெஷாவர் (இது இப்போது பாகிஸ்தானில் இருக்கின்றது) சென்றார் ஜியாவுத்தீன் @ சுபாஷ் சந்திரபோஸ்.

ஆப்கானிஸ்தானுக்குள் நுழைய ஜியாவுத்தீன் பெயரும் பத்தான் உடையும் நன்றாகவே பயன் பட்டது. அவருடைய நண்பர் ஆபத்கான், ஜியா வுத்தீன் ஊமை, செவிடு எனச் சொல்லி ஆப்கா னிஸ்தானுக்குள் அழைத்து சென்றார். அங்கிருந்து ரஷ்யா, ஜெர்மனி, மலேசியா என உலகெங்கும் ஆங்கிலேயர்களுக்கெதிராக அணி திரண்டு

கொண்டிருந்த நாடுகள், அதாவது இரண்டாவது உலகப்போரில் அணி திரண்டு கொண்டிருந்த நாடுகளில், இந்திய தேசிய படைக்கு ஆள் சேர்த்தார். அயராது உழைத்தார்.

இடையறாது அவர் மேற்கொண்ட முயற்சி கள் பலன் தரவில்லை. இறுதியில் 17,000 இந்திய தேசிய இராணுவத்தினரும், அவர்களுடைய தளபதிகளும் ஆங்கிலேயர்களிடம் போர்க் கைதி களாயினர்.

வீரமகன் சுபாஷ் சந்திரபோஸ் மர்மான முறை யில் இறைந்து போனார் என்ற செய்தி பரவியது.

போர்க் கைதிகளான 17,000 பேரும் இந்தியா கொண்டு வரப்பட்டார்கள். அவர்களில் பெரும் பாலோர், செங்கோட்டையில் அடைக்கப்பட் டார்கள். எஞ்சியோர் அன்றைய காபுல் தொகுப்பு வீடுகளில் அடைக்கப்பட்டார்கள்.

சந்தடி இல்லமல் இதில் 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இப்படி 6 பேரை சுட்டுக் கொன்றது, ஏனையோரை அச்சுறுத்தத்தான். ஆனால், சுபாஷ் சந்திரபோஸ்–இன் இந்திய தேசியப் படையில் அங்கம் வகித்த முஸ்லிம் களும், இதர சமுதாத்தவர்களும் இதையெல்லாம் கண்டு சற்றும் சலனப்படவில்லை. அவர்கள் விடுதலை அல்லது வீர மரணம் என்ற உறுதி யோடுதான் அந்தப் படையில் தங்களை இணைத்திருந்தார்கள்.

இப்போது விசாரணையை எதிர்கொள்ளும் பொறுப்பு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் தலையாய தளபதி ஷா நவாஸ் அவர்களைச் சார்ந்தது. அதில் மூன்று பேர் INA என்ற இந்திய தேசியப் படையின் தனகர்த்தர்கள். அவர்கள் குற்றம் சாட்டப்பட்ட வரிசையின்படி :–

1) ஷா நவாஸ் : முதன்மை தளபதி (முதல் குற்றவாளி)

2) சீகால் – அடுத்த தளபதி (அ) துணை தளபதி (இரண்டாவது குற்றவாளி)

3) தில்லான் – மேலே இரண்டு பேருக்கும் அடுத்த தளபதி (மூன்றாவதாகக் குற்றம் சாட்டப் பெற்றவர்)

இவர்கள் மீது பொதுவான பல குற்றச் சாட்டுகளும், தனிப்பட்ட முறையில் சில குற்றச் சாட்டுகளும் சுமத்தப்பட்டன.

முதன்மை குற்றச்சாட்டு ஆங்கிலேய அரசுக்கு எதிராகப் போர்த் தொடுத்தது. - Waging War Against the King. நாம் ஏற்கெனவே சுட்டிக் காட்டியதைப்போல் இன்று பொய் வழக்குகளில் புனையப்படும் அல்லது சிக்க வைக்கப்படும் முஸ்லிம் இளைஞர்கள் மீது மோடி அரசு சுமத்தும் குற்றச்சாட்டு!

தன்மீது சுமத்தப்பட்ட அரசுக்கு எதிராக போர்த் தொடுத்த குற்றச்சாட்டுக்கு இந்திய தேசிய படையின் முதன்மை தளபதி ; ஷா நவாஸ் இப்படிப் பதில் சொன்னார் :


ஷா நவாஸ்

“நான் கீர்த்தியும் கித்தாபும் நிறைந்த தொரு குடும்பத்தில் பிறந்தபோது, எனக்கு ஆங்கில அதிகாரி களின் வழியாகத்தான் இந்தியாவைத் தெரியும். நான் நேத் தாஜியை சந்தித் தேன். அவருடைய உரைகளைத் தொடர்ந்து கேட்டு வந்தேன். அப்போதுதான் இந்தியாவை ஒரு இந்தியனின் பார்வையில் பார்த்தேன். நேத்தாஜி யிடம் நான் ஓர் நல்ல தலைமையைப் பார்த்தேன். ஆகவே அவரையே பின்பற்றுவது என முடிவு செய்தேன். என் முன்னே இருந்த கேள்வி என்ன வெனில் என் நாடா? ஆங்கிலேயே அரசா? நான் என்னுடைய நாட்டுக்கே என்னைத் தருவது என முடிவு செய்தேன். நான் நேதாஜியுடன் இணைந்து இந்தியாவை விடுதலையடையச் செய்வது, நாட்டின் விடுதலைக்காக என் உயிரை தியாகம் செய்வது என முடிவு செய்தேன்.”

(ஆதாரம் : The Story of INA - by S.A. IYER, Published by National Book Trust)

இதைப்போலவே மற்ற இருவரும் அழுந்தந் திருத்தமாக ஆங்கில அரசை எடுத்தெறிந்து பேசினார்கள்.

ஆங்கிலேயர்கள் இவர்களின் பதிலை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த செங்கோட்டை விசாரணை நவம்பர்–5, 1945இல் தொடங்கி டிசம்பர்–31, 1945 வரை



நடந்தது.

இந்நிலையில் இந்தியாவை விட்டு வெளியேறுவது என்றும் இந்தியாவை ஒரு சுதந்திர நாடாக அறிவித்து விடுவது என்றும், ஆங்கிலேயர்கள் முடிவு செய்திருந்தார்கள்.

அதனால் என்ன தண்டனையைத் தந்தாலும் அதை அவர்களால் நிறைவேற்றிட இயலுமா? என்ற வினா எழுந்தது. அத்தோடு நாட்டு மக்கள், அனைவரும் இந்திய தேசியப்படை வீரர்களுக்கு ஏதேனும் நடந்தால், ஆங்கிலேயர்களுக்கெதிராக கிளர்ந்தெழுவோம் எனப் பிரகடனப்படுத்தினார்கள்.

ஆங்கிலேயர்கள், ஜனவரி 3ஆம் நாள் 1946இல், மூன்று தளபதிகளும் ஆங்கிலேய அரசுக்கு எதிராகப் போர்த் தொடுத்தார்கள் என்ற குற்றம் நிரூபிக்கப்பட்டுவிட்டது என பிரகடனப் படுத்தினார்கள்.

தண்டனையை அவர்கள் வாழும் காலம் வரை நாடு கடத்துவது என அறிவித்தார்கள்.

ஆனால் இறுதியாக தீர்ப்பாய்த் தந்த ஆங்கிலேய அதிகாரிகள் மேலே உள்ள இராணுவ அதிகாரி அவர்களின் தண்டனைகளை ரத்து செய்து அன்றே அவர்களை விடுதலை செய்தார்.

பிறகு, 18 மாதங்கள் கழித்து இந்தியா விடுதலை அடைந்தது.

விடுதலை அடைந்த இந்தியாவில் நாங்கள் இந்திய இராணுவமாக மாறுகின்றோம் எனப் பிரகடனப்படுத்தினார்கள் இந்திய தேசிய இராணுவத்தினர்.

சுதந்திர இந்தியாவின் முதல் அமைச்சரவையில் இடம் பெற்ற சர்தார் வல்லபாய் பட்டேல். அவர்கள் இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் எனப் பிரகடனப்படுத்தினார். ஆனால், வழக்கம் போல் ஏமாற்றினார். பயங்கரமான எதிர்ப்புகள் கிளர்ந்தன. பின்னர்,

வேண்டுமானால் அவர்கள் இராணுவத்தில் சேர ஏனைய மக்களைப் போல் இராணுவத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்றார்கள்.

நீண்ட காலப் போருக்குப் பின் இந்திய தேசியப் படையினர் சில வேலை வாய்ப்புகளையும், சில நிதி உதவிகளையும் பெற்றார்கள்.

## செங்கோட்டையில்.... ஏன்?

மேற்கூறிய இரண்டு விசாரணைகளாலும் தான் செங்கோட்டை கொடியேற்றம்.

வரலாற்றில் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் சபதங்களுள் ஒன்று "ஆங்கிலேயர்களை விரட்டி அடித்துவிட்டு ஆங்கில அதிகாரப் பீடமான விக்டோரியா மாளிகையில் இந்தியாவின் தேசியக் கொடியை ஏற்றுவேன். செங்கோட்டையில் இராணுவ அணிவகுப்பை நடத்துவேன்" என்பதாகும். இந்த சபதமும் இணைந்தே நிறைவேறுகின்றது, செங்கோட்டையில் ஆகஸ்ட் 15 தோறும் நடக்கும் நிகழ்வுகளால்.

இப்படி முகலாய வெற்றி வீரர் ஷாஜஹானின் செங்கோட்டையின் காலமெல்லாம் சுதந்திர இந்தியாவின் திருவிழாக்கள் நின்று நிலவுகின்றன.

- MGM





# விடுதலைப்போரில் ஆடுதுறை அப்துல் அஜீஸ் (ரஹ்)



விடுதலைப்போரில் ஆடுதுறை அப்துல் அஜீஸ் (ரஹ்)

தஞ்சை மாவட்டம் ஆடுதுறையை பூர்வீகமாக கொண்ட அப்துல் அஜீஸ் அவர்கள் 1940களில் வேலை நிமித்தம் சிங்கப்பூரில் தங்கியிருந்த காலத்தில் இந்திய சுதந்திர வேட்கை காரணமாக நேதாஜி அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு இந்திய தேசிய ராணுவத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்தார்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு தாய்நாடு திரும்பி தான் 2002இல் மரணிக்கும் வரை முழுக்க முழுக்க சமூக பணிகளில் தன்னை இணைத்துக்கொண்டார் அப்துல் அஜீஸ் அவர்கள். இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கு பெற்றதை பாராட்டித் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் தாமிர பட்டயம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஆடுதுறை அப்துல் அஜீஸ் அவர்கள் தான் மரணிக்கும் வரையில் இந்திய தேசிய காங்கிரசில் தன்னை இணைத்துக்கொண்டு பெற்ற சுதந்திரத்தை பேணி காக்கும் வகையில் சுதந்திர மற்றும் குடியரசுதின கொடியேற்றங்களில் பங்கெடுத்து சிறப்பித்தார்.

1997இல் இந்திய சுதந்திர பொன்விழா ஆண்டு முதல் இன்றளவும் அவரது குடும்பத்தினர் ஒவ்வோர் வருடமும் சுதந்திரப் போராட்ட வீரர் அப்துல் அஜீஸ் அவர்களின் தியாகத்தை பறைசாற்றும் வகையில் சுதந்திர தின மற்றும் குடியரசு தின விழாக்களை ஆடுதுறை மற்றும் சென்னையில் கொண்டாடி வருகின்றார்கள். இந்திய முஸ்லிம்களின் தியாகத்தை உலகறியச் செய்வதாக உள்ளது.

அதில் குறிப்பிடத் தக்க அம்சமாக 2017ம் ஆண்டு தமிழ் நாடு அரசின் அன்றைய சட்டமன்ற உறுப்பினரும் இன்றைய இந்து அறநிலையத் துறை அமைச்சருமான திரு. பி.கே. சேகர்பாபு அவர்களும் 2021 குடியரசு தின நிகழ்வில் தமிழ்நாடு அரசின் இன்றைய தலைமைக் கொறடா திரு. கோவி செழியன் அவர்களும் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றிவைத்து சிறப்பித்தனர்.

மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜ்குமார் உள்பட பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்களும் மற்றும் சமுதாய தலைவர்களும் தொடர்ந்து கலந்துகொண்டு சிறப்பித்து வருகிறார்கள். நிகழ்ச்சியின் போது ஏற்றி வைப்பதுடன் ஏழை மாணவ மாணவி களுக்கு அப்துல் அஜீஸ் மும்தாஜ் கல்வி அறக் கட்டளை சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

**மேற்கண்ட நிகழ்ச்சிகளை அறக்கட்டளையின் பொறுப்பாளர்கள் வழக்கறிகஞர் முகமது இக்பால் மற்றும் அப்துல் ரகுமான் ஆகியோர் சிறப்பாக செய்து வருகிறார்கள்.**

– நமது நிருபர்.



# உண்மையில் இந்தியா யாருடையது?

## விரைவான வரலாறு

இறுதி வரை வாசிப்பது மதிப்பு

### கோரி பேரரசு முதல் தற்போதைய இந்திய பிரதமர் நரேந்திர மோடி வரை

**கோரி இராச்சியம்**

*1 = 1193* முகமது கோரி
*2 = 1206* குத்புதீன் ஐபக்
*3 = 1210* ஒய்வு ஷா
*4 = 1211*
*5 = 1236* ராகினுதீன் ஃபெரோஸ் ஷா
*6 = 1236* ராசா சுல்தான்
*7 = 1240* மொசாதீன் பஹ்ராம் ஷா
*8 = 1242* அல்–தின் மசூத் ஷா
*9 = 1246* நசிருதீன் மஹ்மூத்
*10 = 1266* கியாசுதீன் பால்பின்
*11 = 1286* வண்ண மங்கல்
மசூதியின் *12 = 1287* கபடான்
*13 = 1290* சம்சுதீன் காமர்ஸ்
பெரும் பேரரசின் முடிவு
(மொத்தம் *97* ஆண்டுகள் தோராயமாக.)

**பேரரசின் பேரரசு**

*1 = 1290* ஜலாலுதீன் ஃபெரோஸ் கில்ஜி
*2 = 1292* தெய்வீக மதம்
*4 = 1316* ஷாஹாபுதீன் உமர் ஷா
*5 = 1316* குத்புதீன் முபாரக் ஷா
*6 = 1320* நசிருதீன் குஸ்ரோ ஷா
கல்ஜி பேரரசின் முடிவு
(மொத்தம் *30* ஆண்டுகள் தோராயமாக.)

**துக்ளக் பேரரசு**

*1 = 1320* கியாசுதீன் துக்ளக் (முதல்)
*2 = 1325* முகமது இப்னு துக்ளக் (ஐஐ)
*3 = 1351* ஃபெரோஸ் ஷா துக்ளக்
*4 = 1388* கியாசுதீன் துக்ளக் (ஐஐ)
*5 = 1389* அபூபக்கர் ஷா
*6 = 1389* முகமது துக்ளக் (சோம்)
*7 = 1394* அலெக்சாண்டர் கிங் (நான்)
*8 = 1394* நசிருதீன் ஷா (ஐஐ)
*9 = 1395* நுஸ்ரத் ஷா
*10 = 1399* நசிருதீன் முகமது ஷா (ஐஐ)
*11 = 1413* அரசு
துக்ளக் பேரரசின் முடிவு
(மொத்தம் *94* ஆண்டுகள் தோராயமாக.)

**சயீத் வம்சம்**

*1 = 1414* பனை கான்
*2 = 1421* முய்சுதீன் முபாரக் ஷா (ஐஐ)
*3 = 1434* முஹம்மது ஷா (ஐய)
*4 = 1445* அல்லாஹ் ஆலம் ஷா
சையத் இராச்சியத்தின் முடிவு
(மொத்தம் *37* ஆண்டுகள் தோராயமாக.)

**லோதி பேரரசு**

*1 = 1451* பஹ்லோல் லோதி
*2 = 1489* அலெக்சாண்டர் லோதி (ஐஐ)
*3 = 1517* ஆபிரகாம் லோதி
லோதி பேரரசின் முடிவு
(மொத்தம் *75* ஆண்டுகள் தோராயமாக)

**முகலாய பேரரசு**

*1 = 1526* ஜாஹிருதீன் பாபர்
*2 = 1530* ஹுமாயூன்
முகலாய பேரரசின் முடிவு
(மொத்தம் *4* ஆண்டுகள் தோராயமாக)

**சூரியன் பேரரசு**

*1 = 1539* ஷேர் ஷா சூரி
*2 = 1545* இஸ்லாம் ஷா சூரி
*3 = 1552* மஹ்மூத் ஷா சூரி

*4 = 1553* ஆபிரகாம் சூரி
*5 = 1554* பெர்வைஸ் ஷா சூரி
*6 = 1554* முபாரக் கான் சூரி
*7 = 1555* அலெக்சாண்டர் சர்ரே
சிரிய பேரரசின் முடிவு
(மொத்தம் 16 ஆண்டுகள் தோராயமாக)

## மீண்டும் முகலாய பேரரசு

*1 = 1555* ஹுமாயூன் (மீண்டும்)
*2 = 1556* ஜலாலுதீன் அக்பர்
*3 = 1605* ஜஹாங்கிர் ஸ்லாம்
*4 = 1628* ஷாஜகான்
*5 = 1659* அவுரங்கசீப்
*6 = 1707* ஷா ஆலம் (முதல்)
*7 = 1712* பகதூர் ஷா
*8 = 1713* ஃபர்குவார்ஷயர்
*9 = 1719* ரிபாத் ராஜத்
*10 = 1719* ரேபிட்ஸ்
*11 = 1719* நேஷனல்
*12 = 1719* மஹ்மூத் ஷா
*13 = 1748* அகமது ஷா
*14 = 1754* உலகளாவியது
*15 = 1759* ஷா ஆலம்
*16 = 1806* அக்பர் ஷா
*17 = 1837* துணிச்சலான மன்னர் ஜாபர்
முகலாய பேரரசின் முடிவு
(மொத்தம் 315 ஆண்டுகள் தோராயமாக.)

## பிரிட்டிஷ் ராஜ்

*1 = 1858* லார்ட் கிங்
*2 = 1862* லார்ட் ஜேம்ஸ் புரூஸ் எல்ஜின்
*3 = 1864* லார்ட் ஜே. லாரன்ஸ்
*4 = 1869* லார்ட் ரிச்சர்ட் மாயோ
*5 = 1872* லார்ட் நார்தாப்க்
*6 = 1876* லார்ட் எட்வர்ட் லத்தீன்
*7 = 1880* லார்ட் ஜார்ஜ் ரிப்பன்
*8 = 1884* லார்ட் டஃபெரின்
*9 = 1888* லார்ட் ஹனி லெஸ்டன்
*10 = 1894* லார்ட் விக்டர் புரூஸ் எல்ஜின்
*11 = 1899* லார்ட் ஜார்ஜ் கோர்ஜியன்
*12 = 1905* லார்ட் கில்பர்ட் மிண்டோ
*13 = 1910* லார்ட் சார்லஸ் ஹார்ட்ஜ்
*14=1916*லார்ட்ஃபிரடெரிக்முதல்கருவூலம்வரை
*15 = 1921* லார்ட் ருக்ஸ் அஜாக் ரிடிக்
*16 = 1926* லார்ட் எட்வர்ட் இர்வின்
*17 = 1931* லார்ட் ஃபெர்மன் வெல்டன்
*18 = 1936* லார்ட் அலெஜாண்ட்ரா லின்லித்கோ
*19 = 1943* லார்ட் ஆர்க்கிபால்ட் வீல்
*20 = 1947* லார்ட் மவுண்ட் பேடன்
பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முடிவு
(மொத்தம் 89 ஆண்டுகள் தோராயமாக)

## இந்தியா (சுதந்திரம் பெற்றதிலிருந்து)

*1 = 1947* ஜவஹர்லால் நேரு
*2 = 1964* கோல்சரிலால் நந்தா
*3 = 1964* லால் பகதூர் சாஸ்திரி
*4 = 1966* கோல்சரிலால் நந்தா
*5 = 1966* இந்திரா காந்தி
*6 = 1977* மொரார்ஜி தேசாய்
*7 = 1979* சரண் சிங்
*8 = 1980* இந்திரா காந்தி
*9 = 1984* ராஜீவ் காந்தி
*10 = 1989* வி.பி.சிங்
*11 = 1990* சந்திரசேகர்
*12 = 1991* பி.வி. நரசிமா ராவ்
*13 = 1992* அடல் பிஹாரி வாஜ்பாய்
*14 = 1996* தேவேகவுடா
*15=1997*ஐ.கே.குஜ்ரால்
*16 = 1998* அடல் பிஹாரி வாஜ்பாய்
*17 = 2004* மன்மோகன் சிங்
*18 = 2014* நரேந்திர மோடி

இந்தியா 764 ஆண்டுகளாக முஸ்லீம் இராஜ்சியமாக இருந்தபோதிலும், இந்துக்கள் இந்தியாவில் நிம்மதியாக வாழ்ந்தனர். முஸ்லீம் ஆட்சியாளர்கள் அவர்களை ஒருபோதும் நியாய மற்ற முறையில் நடத்தவில்லை.

ஏறக்குறைய 89 ஆண்டுகள் பிரிட்டிஷ் கிறிஸ்தவ ஆட்சியில் கூட இந்துக்கள் நிம்மதியாக இருந்தனர். எந்த இந்துவையும் கட்டாயப்படுத்தி மதம் மாற்றவில்லை.

ஐந்தாண்டுகள் முழு காலத்தை ஒரு முறை மட்டுமே நிறைவு செய்த பாஜக, முஸ்லிம்களை ஒழிப்பது, கிறிஸ்தவ ஆலயங்களை நொறுக்கி, அடிப்பது, கொடுமை படுத்துவது, அவர்களை குறிவைத்து அவர்களின் தேசபக்தியை கேள்விக் குள்ளாக்குவது பற்றி பேசுங்கள்!

இந்த தகவல்கள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும், மேலும் அனைவருடனும் பகிரப்பட வேண்டும். ஏனென்றால் பெரும்பாலானவர்களுக்கு இந்திய வரலாறு பற்றி தெரியாது.–

# Fr. ஸ்டான் சுவாமி மரணமும் BK-16 வழக்கும்

Fr. ஸ்டான் சுவாமி எதற்காக UAPA-வில் கைது செய்யப்பட்டார் என்பதை புரிந்து கொள்ள சற்று பின்னோக்கிப் போக வேண்டும்.

மராட்டிய பேஷ்வா படைகளை, ஆங்கிலேயர்களுடன் இணைந்து தலித் படைவீரர்கள் வெற்றிகொண்ட இடம், மகாராஷ்டிரா மாநிலம் பீமா கொரேகான். இவ்விடத்தில் அம்பேத்கர் சென்று அஞ்சலி செலுத்தியதன் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதமாக இங்கு 2017−ம் ஆண்டு எல்கார் பரிசத் (Elgar Parishad) என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி மாவோயிஸ்ட் சார்புடையவர்களால் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறி, ஓராண்டு கழித்து 2018 ஜூன் மாதத்தில், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களை UAPA சட்டப்பிரிவில் கைது செய்யத் தொடங்கினார்கள்.

சுரேந்திர காட்லிங், ரோனா வில்சன், சுதிர் தவாலே, மகேஷ் ராவத், சோமா சென் ஆகிய ஐந்து பேர் முதலில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் இந்தியாவின் மதிப்புமிக்க சமூக செயற்பாட்டாளர்கள். இவர்களுடன் இணைத்து, அந்த எல்கர் பரிசத் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட 'கபீர் கலா மஞ்ச்' கலைக்குழுவைச் சேர்ந்த சாகர் கோர்கே, ரமேஷ் கைச்சார், ஜோதி ஜாக்டாப் ஆகிய மூவரும் UAPA-வில் கைது செய்யப்பட்டனர். மொத்தம் எட்டு பேர்.



பின்னர், இவர்களின் கைதை கண்டித்த, மனித உரிமை வழக்குரைஞர் சுதா பரத்வாஜ் இதே UAPA சட்டப்பிரிவில் கைது செய்யப்பட்டார். இவர் சர்வதேச அளவில் புகழ்பெற்றவர். இவருடன் சேர்த்து, கவிஞர் வரவரராவ், வெர்னன் கல்சால்வெஸ், கௌதம் நவ்லக்கா, அருண்ஃபெரைராபோன்றோரும்கைதுசெய்யப்பட்டனர். இதில் கௌதம் நவ்லக்கா EPW-ன் ஆசிரியராக இருந்தவர். இந்த ஐந்து பேரும் 2018 ஆகஸ்டில் கைது செய்யப்பட்டனர்.

மொத்தமாக இவர்களுக்கு 'Urban Naxals' என்ற புனைப்பெயரை வழங்கியது அரசு.

இத்தோடு முடியவில்லை. 2019 பிப்ரவரியில் பேராசிரியர் ஆனந்த் டெல்டும்டே, பீமா கொரோகான் வழக்கில் 14−வது நபராக கைது செய்யப்பட்டார். ஓர் அதிகாலையில் வீடுபுகுந்து பயங்கரவாதியைப் போல சித்தரித்து அழைத்துச் சென்றது NIA.

இத்தோடும் நிற்கவில்லை. Urban Naxal வேட்டை தொடர்ந்தது. 2020 மே மாதத்தில் Fr. ஸ்டான் சுவாமி அவரது 83 வயதில், ராஞ்சியில் வைத்து கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இது BK (Bhima Koregaon) வழக்கில் 15−வது கைது.

ஏற்கெனவே பலவித நோய்களுடன் இருந்த ஊழ் ஸ்டான் சுவாமி, இந்த கொரோனா கடுங்காலத்தில் 10 மாத காலம் சிறையில் இருந்தார். அவரையும் கொரோனா பாதித்தது. மீண்டு வந்த போதிலும், அதன் விளைவுகள் மிச்சம் இருந்தன. பார்க்கின்ஸன் நோய் காரணமாக தண்ணீரையோ, உணவையோ கையால் எடுத்து சாப்பிட முடியாத நிலைமை. ஒரு ஸ்ட்ரா வழங்க கூட மறுத்துள்ளனர். மருத்துவ சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்படுவதற்கே பத்து நாட்கள் நீதிமன்றத்தில் போராட வேண்டியிருந்தது. இறுதியில் Fr.ஸ்டான் சுவாமி மரணம் அடைந்துவிட்டார்..

திருச்சியில் பிறந்தவர். பிலிப்பைன்ஸில் இறையியலும், சமூகவியலும் படித்தவர். பிலிப்பைன்ஸில் பல மாணவர் போராட்டங்களில்

பங்கெடுத்தவர். இந்தியா திரும்பி, ஒரு வழக்க மான கிறிஸ்தவ பாதிரியாராக தன்னை சுருக்கிக் கொள்ளாமல் உண்மையான மக்கள் பணியின் பால் தன் வாழ்வை அமைத்துக்கொண்டவர். முக்கியமாக, 'மாவோயிஸ்ட்' குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஆதிவாசி மக்களுக்காக இடையறாது போராடினார்.

Urban Naxal கைது ஸ்டான் சுவாமியுடனும் நிற்கவில்லை. 2020 ஜூலை மாதத்தில் டெல்லி யுனிவர்சிட்டி ஆங்கிலத்துறை பேராசிரியர் ஹனி பாபு BK வழக்கில் 16-வது நபராக கைது செய் யப்பட்டார். தற்போதைய நிலையில் இதுவே இவ்வழக்கின் கடைசி கைது. சுருக்கமாக இதை 'BK-16 வழக்கு' என்று அழைக்கின்றனர்.

மேலே சொல்லப்பட்ட இந்த 16 பேர் தவிர, இதற்கு முன்பே, மாவோயிஸ்ட் குற்றச்சாட்டில் UAPA-வில் அடைக்கப்பட்டிருக்கிறார் டெல்லி பல்கலைக்கழக ஆங்கிலத்துறை பேராசிரியர் சாய்பாபா. மிகச்சிறந்த அறிவுஜீவி. பல நூல்களை எழுதியவர். விவசாயக் குடும்பத்தில் பிறந்து, துப்புரவு பணியாளர்கள் சூழ்ந்த குடியிருப்பில் வளர்ந்து, Elite bias in English writing in India என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வு செய்தவர்.

மத்திய இந்தியாவில் 'சல்வா ஜூடும்' என்ற பெயரில் அரச கூலிப்படைகள் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடும் வன்முறைகளை அம்பலப் படுத்தி எழுதியவர் சாய்பாபா. இப்போது வரை இவருக்கு பிணை வழங்க கூட மறுத்து வருகிறது இந்த அரசு. போலியோவால் 90 சதவிகித உடல் திறன் பாதிக்கப்பட்ட இவருக்கு சிறையில் அடிப் படை தேவைகள் கூட மறுக்கப்படுவதாகவும், மிகவும் மோசமான உடல்நிலையுடன் சாய்பாபா இருப்பதாகவும் பலமுறை தெரிவித்துவிட்டார் இவரது மனைவி.

இவர்கள் யாரும் அதிகாரத் தாழ்வாரங்களில் தங்கள் அறிவை அடகு வைக்கவில்லை. தங்கள் அறிவை, உழைப்பை மக்களின் நலன்களுக்காக செலவிட்டனர். அதனாலேயே கொடுஞ் சிறை யில் வாடுகின்றனர். ஆனால், மக்களின் நலன் களுக்காக உழைத்த இந்த அறிவுத்துறையினரின் கைதோ, சிறைவாசமோ பொது சமூகத்தில் எவ் வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது அஞ்சத்தக்கதாக இருக்கிறது. இந்த அமைதி உடைக்கப்பட வேண்டும். மீதமிருப்போரை யேனும் காப்பாற்ற வேண்டும். அவர்களை சிறையில் இருந்து விடுவிக்க வேண்டும்.

இதற்கு சர்வதேச அளவில் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஐ.நா. வரையிலும் வலி யுறுத்தி வருகின்ற போதிலும், இந்த நிமிடம் வரை மோடி அரசு இதற்கு செவி சாய்க்கவில்லை. கோரிக்கை மனுக்களுக்கு அப்பால் வீதிகளில் போராட்டங்கள் நிகழ்ந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

எங்கோ, வட இந்திய பிரச்னை என்று இதை ஒதுக்கித் தள்ள முடியாது. ஏனெனில், UAPA பிரிவில் அதிக கைதுகள் நிகழ்ந்த மாநிலம் மணிப்பூர் (306) என்றால், தமிழ்நாட்டுக்கு இரண்டாவது இடம். 270 வழக்குகள். ஜம்மு காஷ்மீரே நமக்கு பின்னால்தான். ஆகவே, இந்த அபாயம் நமக்கு வெகுதூரத்தில் இருப்பதாக கருத வேண்டாம்.

கார்ப்பரேட் பாசிஸசமும், இந்து பாசிஸமும் இணைந்த கலவையாக இன்று பாரதிய ஜனதா கட்சி எழுந்து நிற்கிறது. ரிசர்வ் வங்கி, உயர் கல்வி நிறுவனங்கள், நீதித்துறை, ஊடகம் உள்ளிட்ட அனைத்து நிர்வாக அமைப்புகளிலும் தனக்கு இசைவான நபர்களை அமர வைத்துவிட்டு தன் ஆட்டத்தை தடையின்றி நடத்தி வருகிறது.

பெரும்பான்மை மக்களின் நலன் கருதாத ஒரு சிறு கூட்டத்தின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படும் தன்மையில் இந்துத்துவ பாசிஸம் என்பது கார்ப்பரேட் பாசிஸத்தின் முன் னோடி. பெரும்பான்மை உழைக்கும் மக்களை சுரண்டி கொழுத்து அக்ரஹார உப்பரிகைகளில் உயிர்வாழும் இந்துத்துவ பாசிஸம், கார்ப்பரேட் பாசிஸத்தின் இந்திய நகல். சமத்துவ மறுப்பு, ஜன நாயக மறுப்பு, கருத்துரிமை மறுப்பு, உழைப்புச் சுரண்டல் என அனைத்து அம்சங்களிலும் இரண் டும் ஒத்த தன்மைகளை கொண்டிருக்கின்றன.

கார்ப்பரேட் பாசிஸம், 'அனைத்தையும் சந்தை தீர்மானிக்கும்' என்கிறது. இந்துத்துவ பாசிஸம், அனைத்தும் பிறப்பின் அடிப்படை யிலேயே தீர்மானிக்கப்படுவதாக சொல்கிறது. இவ்வாறாக, எல்லா வகையிலும் ஒத்த தன்மை கொண்டிருக்கும் இவ்விரண்டு பாசிஸ நிகழ்ச்சி நிரல்களையும் தமது இரு கைகளில் ஏந்தி நிற்கிறது பாரதிய ஜனதா கட்சி.

ஆகவே, இந்த உண்மைகளை ஒரு பரந்த வரையறையில் புரிந்துகொள்வோம். சிறையிலி ருக்கும் அறிவுத்துறையினரை விடுவிக்க இணைந்து குரல்கொடுப்போம்.

– பாரதி தம்பி



# அன்புத் தந்தை ஸ்டான் சுவாமி மரணம் யாரால்?

## விதைபோல் வீழ்ந்தவர்

அன்புத் தந்தை ஸ்டான் சுவாமி அவருடைய மரணம், யாரால்? எதனால் என்பதை பொதுவான பத்திரிகைகள் இப்படிக் கூறின...

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம், என்ற அடிப்படையில் பின்வரும் (DC) தலையங் கத்தைக் குறிப்பிடுகின்றோம்.

"ஃபாதர் அன்புத் தந்தை ஸ்டான் சுவாமியின் மரணம், NIA என்ற National Investigation Agency - தேசியப் புலனாய்வு முகமையின் செயல் முறை களையும், மனநிலைகளையும் மிகப்பெரிய கேள்விகளுக்கு உள்ளாக்குகின்றது. தேசிய புலனாய்வு முகமை "NIA" தேசிய ஒன்றிய அரசின் நிறுவனங்களோடு இணைந்து, ஆளும் கட்சியின் ஓர் அரசியல் காவல்துறையைப் போலவே செயல்படுகின்றது.

தேசிய புலனாய்வு முகமை, தீவிரவாதம் சம்மந்தப்பட்ட குற்றங்களைக் கண்டுபிடிப்பதற் காகத்தான் உருவாக்கப்பட்டது. ஆனால், அது அடிக்கடி அப்பாவிகளைத்தான் தீவிரவாதி களாக நிறுத்துகின்றது.

இதில் கீழே உள்ள நீதிமன்றத்தின் பங்களிப் பைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

ஆக, அன்புத் தந்தை ஸ்டான்சுவாமியின் மரணத்திற்கு "NIA" என்ற தேசிய புலனாய்வு முகமையும், நீதித்துறையும் காரணம் என்பது டெக்கான் கிரானிக்கல் –இன் முடிவு. (DC.7/7/2021 Editorial)

இத்தோடு நிற்கவில்லை டெக்கான் கிரானிக் கல்லின் வேதனையின் வெளிப்பாடு. அது மும்பை உயர்நீதி மன்றமும் இதில் நீதி வழங்கிட வில்லை என்கிறது. மொத்தமாக நீதித்துறை யும் தன் கடமையில் தொடர்ந்து சறுகி வருகின் றது எனக் கூறுகின்றது டெக்கான் கிரானிக்கல் தலையங்கம்.

இதுபோன்ற வேதனைகளிலிருந்து இன்றைய இந்தியாவை மீட்டிட குறைந்தபட்சம் ஸ்டான் சுவாமியின் கைது, மரணம் குறித்து ஓர் விசாரணை நடத்தப்பட வேண்டும். அதில் அவரது கைதுக்குக் காரணமான காட்டப்பட்ட அவருடைய கணினிக்குள் புகுத்தப்பட்ட பொய் தகவல்கள், அவருடைய கைதிலிருந்து அவருடைய மரணம் வரை தேசிய புலனாய்வு முகமை நடந்து கொண்ட விதம், அடிப்படை உரிமை மீறல்கள், கீழ் நீதிமன்றம், உயர் நீதிமன்றம் இவை இந்த வழக்கை நடத்திய விதம் அனைத்தும் விவாதத்திற்கும், விசாரணைக்கும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இப்படி ஓர் அழுத்தமான கோரிக்கையை, நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் உள்பட எல்லா அமைப்புகளும் வைக்கின்றன. ஐரோப்பாவைச் சேர்ந்த பல அமைப்புகளும் வைக்கின்றன.

ஆனால், டெக்கான் கிரானிக்கல் மிகவும்

முக்கியமான ஒரு ஐய்யத்தை அடுத்து கிளப்பு கின்றது. அது இப்போது எந்த நிறுவனத்தை நம்பி? யாரை நம்பி? இப்படி ஒரு விசாரணையை ஒப்படைப்பது.

எல்லா நிறுவனங்களும், அதிகார வர்க்கத்தின் கிடுக்கிப் பிடிக்குள் சிக்கிக்கொண்டுள்ளனவே என்கின்றது.

விசாரணை கண் துடைப்பாக முடியும். அல்லது இந்தப் பாசிஸ்ட்டுகளின் ஆட்சியில் கொலையை நியாயப்படுத்தும்.

ஆமாம்! அன்புத் தந்தை ஸ்டான்சுவாமியின் மரணம், மனித உரிமை ஆர்வலர்கள், மனித உரிமை அமைப்புகள், இயக்கங்கள் ஆகியவற்றி னிடையே ஓர் அதிர்ச்சியை மட்டுமல்ல, கூடவே சுவாமியின் மரணம் அனைவரையும் வருடிற்று.

இதற்குமேல் இன்றைய இந்தியாவில் செய்திட இயன்றது எதுவுமில்லை என்றே நினைக்கின்றனர். விரக்தியின் விளிம்பிற்கே எல்லோரும் வந்துவிட்டார்கள்.

## எதிர்ப்புகள்

எனினும் 'PUCL' போன்ற அமைப்புகள் – சகோதர அமைப்புகளுடன் இணைந்து (2021) ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 28, (2021) வரை உபா சட்டத்தையும் (UAPA) சட்டத்திற்குப் புறம்பான செயல்பாடுகளின் தடைச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றை உடனேயே அகற்றிட வேண்டும் என மக்கள் இயக்கத்தை நடத்தி வருகின்றது.



ஓர் விரக்தியையும், ஏற்படுத்தி இருக்கின்றது.

அன்புத்தந்தை ஸ்டான்சுவாமியின் வழக் கிலும், அதேபோல் இன்னும் அதேபோல் சிறையில் வாழும் ஆயிரமாயிரம் அப்பாவிகளின் வழக்கிலும் முன்னிணியில் நின்று போராடியவர், மனித உரிமை ஆர்வலர் ஹென்டிரி டிபேஃன் அவர்கள்.

ஜூலை–5, 2021 மதியம் இரண்டு மணி முதல் பல்வேறு ஊடகங்களுக்கும் தந்த பேட்டி களில் கண்ணீர் விட்டு அழுதார். தொலைக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களும் கண்ணீர் வடித்தனர். அந்த அளவுக்கு ஸ்டான்

ஆனால், இவற்றைப்போல் அல்லது இவற்றை விட கொடுமை நிறைந்த சட்டங்கள் இன்னும்பல இருக்கின்றன. அவற்றையும் அகற்றிட வேண்டும் என்ற இயக்கங்கள் தொடங்கப்பட வேண்டும். இப்போது தொடங்கப்பட்டுள்ள இயக்கங்கள், தங்கள் செயல்திட்டத்தில் இணைத்திட வேண்டும்.

அவை, "124A" என்ற தேசத்துரோக சட்டப் பிரிவு, இஃது இன்று மிகவும் சர்வ சாதாரணமாக அப்பாவிகள் மீது பாய்ச்சப்படுகின்றது. அரசு தனது எதிரியாக நினைக்கும் முஸ்லிம்கள், அரசின் ஆதிக்கத்தை எதிர்ப்பவர்கள். இப்படி எல்லோரும் இலக்கு.

## தி இந்து (ஆங்கிலம்) தலையங்கம்

*அன்பார்ந்த சகோதரர்களே!*

இந்து பத்திரிகை சாதாரணமாக அவ்வளவு ஆக்ரோஷமாக தலையங்களைத் தீட்டுவதில்லை. மிகவும் குறைவான நேரங்களிலேயே வேதனையோடும் கோபத் தோடும் தலையங்களைத் தீட்டும்.

அப்படி சற்றே கோபமாக எழுதிய தலையங்கங்களுள் ஒன்றுதான் ஸ்டான் சுவாமியின் மரணம் குறித்து எழுதிய தலையங்கம். அதன் முக்கியப் பகுதிகளை இங்கே தருகின்றோம்.

## முன்னறிவிப்பு செய்யப்பட்ட மரணம்

நிறுவனங்களின் அடக்குமுறையில் ஒரு தெளிவான சதி தெரிகின்றது.

அவருடைய நலனில் அக்கறை உள்ளவர்கள் அது நடக்கும் என்ற அச்சத்தில் இருந்தனர்.

அன்புத் தந்தை ஸ்டான்சுவாமி–84, என்பவர் தன்னுடைய சேவைக்காகவும், துடிப்பான செயல்பாடு களுக்காகவும் நன்றாக அறியப்பட்டவர்.

ஆதிவாசிகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். ஒன்பது மாதங்களாக சிறையில் செத்துக் கொண்டேதான் இருந்தார். அவர் எந்த அடிப்படையும் இல்லாமல்தான் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்.

அவர் மரணிக்கட்டும் (என வேண்டுமென்றே) விட்டுவிட்டார்கள். (A death allowd to happen) சிறையில் தேய்ந்துகொண்டே இருந்த அவருடைய உடல்நலம் மரணத்தைமுன்னறிவிப்புசெய்துகொண்டேதானிருந்தது. அவரது மரணம் காலமெல்லாம் நாட்டு மக்களின் கூட்டு மனசாட்சியை உலுக்கிக் கொண்டே இருக்கும்.

Much of the balame and accountability for his death should be on the NIA which perversely. opposed his release. and the court which could have granted interim bail weeks earlier.

(ஸ்டான் சுவாமி) மரணத்திற்கான பழியும், பொறுப்பும் பதில் சொல்லிட வேண்டிய கடமையும் NIA என்ற தேசிய புலனாய்வு முகமைக்கே ! (ஏனெனில்) அதுதான் அவருடைய பிணையை தொடர்ந்து ஆக்ரோஷமாக எதிர்த்து வந்தது. (அதே பொறுப்பு) நீதிமன்றத்திற்கும் உண்டு. காரணம், அதுபல வாரங்களுக்கு முன்னால், பிணை கொடுத்திருக்க முடியும்.

- The Hindu, Editorial, 7-7-2021

- MGM

தேசிய புலனாய்வு முகமை சட்டம் (NIA) (Act 2008) வந்தபின் இந்தப் பிரிவு குழந்தைகள் மீது கூடப் பாய்ச்சப்படுகின்றது. எடுத்துக்காட்டாக 2019ஆம் ஆண்டில் கர்நாடகா மாநிலத்தில் 11 வயது, பதினோரு வயதே ஆன பிடார் பகுதியைச் சார்ந்த பெண் குழந்தை மீது இந்தச் சட்டம் (தேசத்துரோகச் சட்டம்) பாய்ச்சப்பட்டது.

காரணம், இந்துத்துவ, பாசிஸ்ட்டுகள் கொண்டு வந்த குடியுரிமை திருத்தச் சட்டத் திற்கெதிரான ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு பங்காற்றியதாம்.

பல எழுத்தாளர்கள் (உ.ம். அருந்ததிராய்) பத்திரிகையாளர்கள் – (உ.ம். காப்பன், வினோத் துவா கிஷோர் சந்திரவாக்மேன் இன்னும் பலர்)

மனித உரிமை போராளிகள், ஆனந்த் டெல் டும்டே, வரராவ். சுதாபரத்வாஜ், இப்படி நீளுகின்றது பட்டியல். அவர்களில் பலர் அறிவு ஜீவிகள், முஸ்லிம் இளைஞர்கள், அவர்கள் முஸ்லிம்கள் என்பதாலேயே இந்த 124-A பிரிவும், உபா சட்டமும் பாய்ச்சப்படுகின்றது. அவர்களில் பெரும்பாலோர் படிப்பறிவு இல்லா தவர்கள். இப்படியெல்லாம் சட்டங்கள் இருக் கின்றன என்பதை அறியாதவர்கள்.

ஏதோ சாதாரண 75 பிரிவு வழக்கு (நியூசென்ஸ்) வழக்கு நினைத்துக்கொண்டு சிறையில் வாடுகின்றார்கள்.

சட்டத்தின் இந்தப் பிரிவை (124A தேசத் துரோகம்) தேசிய புலனாய்வு முகமை NIAதான் அதிகமாகப் பயன்படுத்துகின்றது. இந்த முகமை மிகச்சில வழக்கில்தான் இந்த பிரிவை நியாயம் என நிரூபித்திருக்கின்றது. ஆனால், மிகப் பெரும் பான்மையான வழக்குகளில் தோற்றுத்தான் போய் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. ஆதாரம் : (THe Week, Aug-8, 2021. Cover Story)

இப்போது நாடெங்கும் இது விவாதிக்கப் படுகின்றது. உச்ச நீதிமன்றமும் இதன் கோரத்தை உணர்ந்துவிட்டது.

உபா சட்டம் 1967ஆம் ஆண்டில் வந்தது. நாம் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், இந்த உபா (UAPA) 2008இல் திருத்தப்பட்டபோதே அதனை எதிர்த்தோம். அதுகுறித்த நீண்ட விளக்கம் ஒன்றை 2008 ஆம் ஆண்டே வைகறை வெளிச்சத்தில் வெளியிட்டோம். தொடர்ந்து நாம் நடத்திய கூட்டங்களிலும் இதனை எதிர்த்

துப் பேசினோம். மக்கள் கருத்தை உருவாக்கி னோம். ஆனால், பெரும்பாலோர் இதைக்கண்டு கொள்ளவில்லை. இப்போது பாதிக்கப்பட்ட பின்தான் எதிர்க்கின்றார்கள்.

முஸ்லிம்களிடம், இப்படி விளக்கினோம். இந்தச் சட்டம், கடைசியில் அப்பாவி முஸ்லிம்கள் மீதே அதிகமாகப் பாய்ச்சப்படும், காரணம் இதற்கு முன்னால் இதுபோன்ற சட்டங்கள் பல்வேறு காரணங்களால் கொண்டுவரப்பட் டன. ஆனால், அவை அப்பாவி முஸ்லிம்கள் மீதே அதிகமாகப் பாய்ச்சப்பட்டன. (அவர்கள் முஸ்லிமாக இருப்பதே காரணம்)

## இன்னொரு சட்டம்

அப்சா (AFSPA) என்ற ஆயுதம் தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம். Armed Forces Speical Powers Act.

இது மணிப்பூர் மாநிலத்தைக் காரணங்காட் டிக் கொண்டுவரப்பட்டது. ஆனால் கஷ்மீரில் பல ஆயிரம் அப்பாவி முஸ்லிம் இளைஞர்களின் உயிரைப் பறிக்கும் பாதுகாப்புப் படையினரைப் பாதுகாக்கவே பயன்பட்டது.

**தடா :** அதேபோல் Tada (எ) தீவிரவாதத் தடுப்புச்சட்டம் – காலிஸ்தான் தீவிரவாதிகளைக் காரணங்காட்டிக் கொண்டுவரப்பட்டது. ஆனால் முஸ்லிம்கள் மீதே அதிகமாக பாய்ச்சப் பட்டது.

அதேபோல்தான் “பொடா” – இப்போது UAPA இதையெல்லாம் அதிக விளக்கங்கள் அதிக புள்ளி விபரங்கள் ஆகியவற்றோடு நாம் நமது வைகறை வெளிச்சம் விரித்துரைத்துள்ளோம்.

ஆகவே தேசிய பாதுகாப்புச் சட்டம் NSA உபாவுடன் இணைத்து, 124A, அப்சா சட்டங் களுக்கெதிராகவும் நமது மக்கள் இயக்கங்கள் தொடர்ந்திட வேண்டும்.

NIA Act. 2008 தேசிய புலனாய்வு முகமை சட்டம் 2008

இவற்றையெல்லாம் விட பாரதீய ஜனதா கட்சியின் கைத்தடியாகச் செயல்படும் 'NIA' அதனை செயலில் கொண்டு வந்த NIA Act. 2008, அதனைத் தொடர்ந்து வந்த (Amendments) திருத்தங்கள், அனைத்தும் ஒட்டுமொத்தமாக அகற்றப்பட வேண்டும்.

காரணம் இந்தச் சட்டமும், அந்த முகமையும் 2014ஆம் ஆண்டுக்குப் பின் தவறாகப் பயன் படுத்தப்படுகின்றது. மாநில அரசுகளின் அதிகாரமும் பறிபோகின்றது.

அன்புத் தந்தை ஸ்டான்சுவாமி அவர்கள் மரணத்த பின்பும் மனித உரிமைகளுக்காகப் போர்ச் செய்கின்றார். உபா (UAP) NIA Act போன்றவற்றிற்கு எதிராக மக்கள் இயக்கங்களை முடுக்கி விட்டிருக்கின்றார்.

இந்த வகையில் அவர் விதைபோல் வீழ்ந்துள்ளார்.

## மத்திய உளவுத்துறை

'IB' INTELLIGENCE BUREAU

நம் நாட்டில் – சுதந்திர இந்தியாவில் ஓர் அரசு அதிகார அமைப்புச் செயல்பட வேண்டும் என்றால், அதற்கு இரண்டே வழிகள்தாம் உண்டு.

ஒன்று – அது அந்த அமைப்பு அல்லது நிறுவனம் நமது அரசியல் சாசன சட்டத்தால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். (உ.ம். தேர்தல் ஆணையம் இதனை Creation of the Constitution என்பார்கள்.)

இரண்டு – நமது நாடாளுமன்றம், ஒரு சட்டத்தை இயற்றி அதன்மூலம் அந்த அமைப்பை அல்லது நிறுவனத்தைச் செயலில் கொண்டுவந்திட வேண்டும். (உ.ம். NIA என்ற தேசியப் புலனாய்வு முகமை : இஃதோர் சட்டத் தின் வழியாக உருவாக்கப்பட்டது. இதை அகற்ற இன்னொரு சட்டம் இயற்றப்பட வேண்டும். ஆனால் இந்த இரண்டு முறைமைகளுக்கும் அப்பால் இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் அமைப்பே IB மத்திய உளவுத்துறை ஆங்கிலே யர்களால் (1829) அன்று இந்தியர்களை வேவு பார்த்திட ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. குறிப் பாக விடுதலைப் போரில் கலந்துகொள்ளும் அரசு ஊழியர்கள், அலுவலர்கள் ஆகியோரைக் கண்காணிக்க.

இன்று அரசியல் சாசன அங்கீகாரமோ, நாடாளுமன்ற சட்ட அங்கீகாரமோ இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த 'IB' என்ற மத்திய உளவுத்துறை.

நாட்டின் அனைத்து துறைகளையும், நிறுவனங்களையும் மிரட்டி ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. இதனை அகற்ற வேண்டும் என நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்கு

களில் இன்றளவும் தீர்ப்புகள் வரவில்லை.

கடைசியாக பெங்களூர் நீதிமன்றத்தில் குர்கர்னி என்பவர் ஓர் வழக்கைத் தொடுத்தார். அதிலும் தீர்ப்பு வரவில்லை. ஆனால் நீதிபதி அவர்கள் நீதி மன்றத்தில் இப்படிக் கூறினார்.

"நீங்கள் அங்கீகாரமில்லாத ஓர் அமைப்பு. ஆனால் நீங்கள் எல்லா அமைப்புகளையும் கட்டுப்படுத்தி வருகின்றீர்கள்" ஆனாலும், நீதிமன்றம் அறுதி தீர்ப்பை வழங்கிடவில்லை.?

IB-இன் அநியாயங்களை அறிய படியுங்கள். "கர்கரேயைக் கொலை செய்தது யார்? 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?"

இந்த அமைப்பை முற்றாக அகற்றாவிட்டா லும், இந்த அமைப்பு ஏதேனும் ஒரு கூட்டுக் குழுவுக்கு (JPC) அதாவது Joint Parliamentary Committee. நாடாளுமன்ற கூட்டுக்குழு போன்ற வற்றிற்கு தனது செயல்களுக்குப் பதில் சொல்லி டும் அமைப்பாக மாற்றப்பட வேண்டும். ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இந்த அமைப்பு முஸ்லிம்களின் பெயரால் குண்டுகளை வைக்கின்றது என Canada - கேனடா நாட்டைச் சார்ந்தவர்கள் கூறிய பின்பும் இந்த அமைப்பு தங்கு தடையின்றி செயல்படுகின்றது.

இந்த அமைப்பு அகற்றிட வேண்டும் அல்லது அதன் செயல்பாடுகளும் செலவுகளும் தணிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டும்.

இவை அனைத்திற்கும் மக்கள் இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும்.

## நண்பகலில் இருட்டு!

இதுதான் இப்போது இந்தியாவில் நீதி. NIA என்ற தேசிய புலனாய்வு முகவாண்மை, அதற்குத் தாளம் வாசித்த நீதித்துறை இவை இரண்டுமேதான் ஃபாதர் ஸ்டான் சுவாமியின் மரணத்திற்குக் காரணம். – முன்னாள் நீதிபதி அஜித் பிரகாஷ் ஷா. - The Hindu, July-8, 2021

"ஸ்டான்சுவாமி அவர்களால், தண்ணீரை குவளையில் எடுத்து கையில் வைத்து குடித்திட முடியாது. ஏனெனில் அவரது கை நடுங்கிக் கொண்டே இருக்கும். அவர் நீதிமன்றத்தில் தண்ணீர் தரும்போது ஓர் உறிஞ்சு குழாயையும் Straw வையும் தந்திட வேண்டும் எனக் கேட்டிருக்கின்றார்.

சிறை விதிகளுக்கு உட்பட்ட ஓர் உரிமை தான் இது. ஆனால் இதற்கும் நமது மெல்ல கொல்லும், NIA தேசிய முகவாண்மை மறுப்புத் தெரிவித்தது. நீதித்துறையும் அதற்குத் தாளம் போட்டது. அரசுக்கு ஓர் தாக்கீதை அனுப்பியது. அவர் தண்ணீர் குடிப்பதற்கு ஓர் உறிஞ்சு குழா யைக் கொடுக்கலாமா? கூடாதா? எனக் கேட்டு. அதற்கு 20 நாட்களுக்குள் பதில் சொல்லிட வேண்டும், எனவும் கேட்டுக் கொண்டது. என்னே நீதி?

இந்த அளவுக்கு குரூரமாக நடந்துகொள்வ தற்கு அவர் அப்படி என்ன தவறு செய்துவிட்டார்.

ஆதிவாசிகள், அதாவது நாட்டில் யாருமே கண்டுகொள்ளாத ஒரு கூட்டம் மக்கள். இவர் களுக்காகப் பாடுபட்டார். மிகவும் எளிமையாக வாழ்ந்தார். ஓர் அறைதான் அவருடைய இல்லம்.

அந்த மக்களின் நல்வாழ்வுக்காக அடிக்கடி நீதிமன்றங்களை அணுகி இருக்கின்றார். இறுதியில் அந்த நீதிமன்றமே அவருக்குத் தொடர்ந்து பிணையை மறுத்து கொலையும் செய்துவிட்டது.

இவற்றையெல்லாம் பட்டியல் போட்ட, நீதிபதி ஏ.பி.ஷா அவர்கள் இப்படிக் கூறுகிறார்கள் :

அவர் ஆதிவாசி மக்களின் உரிமைகளை பெற்றுத் தந்திட அடிக்கடி நீதிமன்றங்களை அணுகினார். அவர் எந்த நீதிமன்றங்களை நம்பினாரோ அந்த நீதிமன்றமே அவரைப் பலி கொடுத்துவிட்டது. TH. July-8, 2021.

மற்றொரு நீதிபதி லோகூர் (lokur) அவர்கள் இப்படிக் கூறினார்கள் :

"நான் நீதிமன்றங்களால் ஏமாற்றப்பட்டு நிற்கின்றேன். அதனை வழக்கை தொடுத்தவர்கள் மீதும் 'NIA' நம்பிக்கை இழந்து நிற்கின்றேன்." TH. July-6, 2021.

**"ஃபாதர் ஸ்டான் சுவாமி நீண்ட நாள் களாக, விசாரணை கைதிகளுக்காகப்பாடு பட்டார். ஆனால், அவரே விசாரணை கைதியாக, மரணித்தார்" வழக்கறிஞர் பீட்டர் மார்ட்டின்! இந்த வழக்கறிஞர் பீட்டர் மார்ட்டீன், ஸ்டான் சுவாமியின் சார்பில் பல விசாரணைக் கைதிகளுக்காக பல வழக்குகளைத் தொடுத்தவர்.**

# ஏக்தின் காஸூல் தான் வெளியிட்டதோர் தோல் நாணயம்





ஹாஜி. பி.எம். அப்துல் கரீம், குளச்சல்

பாபர் காலமானபின் அவர் மகன் ஹுமாயூன் 24 வயதில் டெல்லியில் பட்டத்திலமர்ந்தார். ஹுமாயூனுக்கு மிர்ஜாகம்ரான், மிர்ஜாஹிந்தால், மிர்ஜா அஸ்கரி என்ற மூன்று சகோதரர்கள் உண்டு. தந்தை சொல்படி மூன்று பேருக்கும் நாட்டின் பகுதிகளை ஹுமாயூன் பிரித்து கொடுத்து ஆட்சி செய்தார்.

ஹுமாயூன் வங்காளத்தில் இருந்ததால் ஆக்ராவை கைப்பற்ற சகோதரர்கள் முயற்சித்தனர். ஹுமாயூன் பல தடைகளை கடந்து கங்கை நதியோரம் வந்து சேர்ந்தார். சேர்கான் படை ஹுமாயூன் படையோடு மோதியதால் ஹுமாயூன் படை நிலை குலைந்தது.

ஹுமாயூன் மன உறுதியோடு குதிரையோடு ஆற்றில் குதித்தார். தண்ணீர் அதிகமாக வந்ததால் குதிரை தடுமாறி ஹுமாயூன் நதியில் விழுந்து தத்தளித்தார். தண்ணீரில் அவர் மூழ்கி இறக்க இருக்கும் சந்தர்ப்பத்தில் அவரது படையிலிருந்து ஒருவன் காற்று நிரப்பிய தோல்பையோடு நீரில் குதித்து ஹுமாயூன் அருகே வந்து அவரைக் காப்பாற்றினான்.



ஹுமாயூன் அப்போர் வீரனை பார்த்து உனது பெயர் என்ன? என்று கேட்டார், என் பெயர் நிஜாம், என்னை "ஸக்கா" என்றும் அழைப்பார்கள் என்றான் அவன். நீ செய்த உதவியானது உன்னை நிஜாமுத்தீன் ஔலியாவாக நான் பார்க்கிறேன் என்றார் ஹுமாயூன். நான் நலமாக ஆக்ரா சென்று சிம்மாசனத்தில் அமர்ந்தால் உன்னை என் சிம்மாசனத்தில் ஒருநாள் அமர்த்துவேன். (நிர்வாகம் நடத்த) இந்த அற்புத நிகழ்வு நடந்தது. ஹிஜ்ரி 946 ஸபர் மாதம் 9–ம் தேதி கி.பி. 1539. ஜுன் மாதம் 27–ம் தேதி. ஹுமாயூன் அவர் உயிரைக் காப்பாற்றிய "ஸக்கா" என்கிற நிஜாம் ஹுமாயூனைப் பார்க்க அரண்மனைக்கு வந்தார். ஹுமாயூன் தன் வாக்குறுதிப்படி அவனுக்கு ஒருநாள் ஆட்சி செய்ய சந்தர்ப்பமளித்தார். சிம்மாசனத்தில் அமர்ந்ததும் அவனது உறவினர்களை வரவழைத்து அவர்களுக்கு

ஏராளமான பரிசுகள் வழங்கினான். மேலும் ஒரு நாள் மன்னன் தன் ஞாபகார்த்தமாக தோலின ாலான நாணயங்களை வெளியிட்டான்.

இம்மாதிரி ஒருநாள் ஆட்சி செய்ய சந்தர்ப் பம் ஹுமாயூன் கொடுத்தது அரசு அதிகாரி களுக்கும் சகோதரர்களுக்கும் பிடிக்கவில்லை.

உலக சரித்திரத்திலேயே சாதாரண போர் வீரன் அரசு கட்டிலில் ஒருநாள் ஆட்சி செய்த நிகழ்வே காண முடியாது. ஒருநாள் ஆட்சியில் இருந்து இந்தியாவில் தோல் நாணயம் புழக் கத்தில் விட்டது வேறு யாருமல்ல. ஏக்தீன்கா சுல்தானாகும்.

நான் நாடியவருக்கு ஆட்சியை நல்குவேன். நாடியவருக்கு பொருளாதாரத்தை விசால மாக்குகிறேன் என்ற திருமறை வாசகம் அல்லாஹ் நாடினால் மனிதனில் யாரையும் ஆட்சியாளனாகவும், வசதி வாய்ப்புடைய வனாகவும் ஆக்குவானென்பதை நாம் அறிய வேண்டும்.

பேரரசர் ஹுமாயூன் தன் உயிரைக் காப்பாற்றிய சாதாரண போர் வீரனுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியத வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக் கப்பட வேண்டிய நிகழ்வாகும். இறைவன் சாதாரண போர் வீரனை இந்திய ஆட்சியாள னாக ஒருநாள் ஆக்கியது சிந்திப்போருக்கு பலப் படிப்பினைகள் உண்டு. ●




உலகப் புகழ்பெற்ற பேரறிஞர் மௌலானா அபுல் ஹசன் அலீ நத்வீ (ரஹ்) அவர்களின் புகழ்மிக்க நூல்களுள் ஒன்றான "இந்தியாவில் முஸ்லிம்கள்" எனும் நூலை நமது வைகறை வெளிச்சம் இதழில் தொடராக எழுதவிருக்கிறார் மௌலவி நியாசுத்தீன் புகாரி நத்வீ.

கோயமுத்தூர் இவரது சொந்த ஊர். ஈரோடு இக்ரா பெண்கள் அரபுக் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

சென்னை வண்டலூரில் அமைந்துள்ள புகாரிய்யா அரபுக் கல்லூரியில் பயின்ற போது இவரின் ஆசிரியர்களுள் இருவர் அலீமியான் (ரஹ்)வின் மாணவர்கள். இவர்களிருவரும் தம்முடைய மாணவர்களுக்கு பாடம் நடத்தும் போது அலீமியான் (ரஹ்) குறித்து அன்னாரின் சாதனை களை குறித்து கிலாசித்துப் பேச, அன்னார் மீது நியாசுத்தீனு; புகாரிக்கு பெருமதிப்பும் மரியாதையும் ஏற்பட்டிருக்கிறது.

ஆலிம் பட்டம் பெற்ற பிறகு அலீமியான் (ரஹ்) மீது கொண்ட பாசத்தால் லக்னோவி லுள்ள 'நத்வத்துல் உலமா' கலாசாலைக்குப் பயிலச் சென்றார். இது அலீமியான் (ரஹ்) அவர்கள் முதல்வராக இருந்து நடத்தி வந்த கல்லூரி.

அங்கே சென்று அலீமியான் (ரஹ்) அவர் களின் மானசீக மாணவரானார். அன்னாரின் நூல்களை தேடி தேடி யாசித்தார். தேனுண்ட வண்டானார். அன்னாரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டார்.

அரபு மொழியில் ஆழ்ந்த புலமை உள்ள வர்களால் மட்டுமே அன்னாரின் நூல்களோடு இலக்கியத் தன்மை மிக்கவை அவை.

நவீன அரபியும் கற்றவரான நம் இளம் எழுத்தாளர் சகோதரர் நியாசுத்தீன் புகாரி அவர்கள் அலீமியான் (ரஹ்)மின் எழுத்துக் களால் ஈர்க்கப்பட்டதில் ஆச்சரியமில்லை.

வாசிப்பில் இன்பம் கண்டு வரும் இவர் பல்வேறு வரலாற்று நூல்களையும் வாசித்து துணுக்குகள் பலவற்றையும் எழுதி வந்தார். 'வைகறை வெளிச்சம்' ஆசிரியர் குழுவின் விருப்பத்தின் பேரில் எழுத்தாளராக ஏற்றம் பெற்றுள்ளார்.

இந்த எழுத்தாளரை சமுதாயத்துக்கு அறிமுகம் செய்வதில் 'வைகறை வெளிச்சம்' மகிழ்ச்சி அடைகிறது. இனிவரும் இதழ்களில் அலீமியான் (ரஹ்) அவர்களின் 'இந்தியாவின் முஸ்லிம்கள்' எனும் நூலை வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு 'தன் எளிய, இனிய நடையில் தொடராகத் தருவார்' இன்ஷா அல்லாஹ்.

– ஆசிரியர் குழு

# உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்-8

தொடர்

## மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் உச்ச நீதிமன்றத்தில் சொன்னதென்ன?

அன்பார்ந்த வாசகர்களே!

இந்தத் தொடர் நாட்டில் நடந்த பல அரிய, அதிசய நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுகின்றது. முற்றாக மக்கள் மன்றத்திலிருந்து மறைக்கப்பட்டவை. நம் நீதித்துறையும் இதரத் துறைகளும், எத்தகைய அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளன என்பதை இத்தொடர் சுட்டிக்காட்டும்.

எந்த பத்திரிகையும் தமிழோ ஆங்கிலமோ இதர மொழி இதழ்களோ சுட்டிக்காட்டாதவை.

படியுங்கள், பரப்புங்கள். பாரதத்தை இந்த பாசிஸ்ட்டுகளின் பிடியிலிருந்து மீட்க ஒன்றிணைவோம்.

*கருத்து மாறுபடுபவர்களின் குரல்வளையை நசுக்கிடுவது, அதையும் உச்ச நீதிமன்றத்தின் நேரடிப் பார்வையின் கீழ் செய்வது போன்ற கருப்பு நடவடிக்கைகளை இதே உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதிகளும், இந்நாள் நீதிபதிகளும் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள். இந்த நீதிபதிகள், அதாவது இந்நாள் நீதிபதிகள் எனப்படுவோர் கடந்த நான்கு, தலைமை நீதிபதிகளின் பதவிக் காலத்தைத்தான் குறிக்கும். நீதிபதி Dy சந்திரசூட், பிப்ரவரி 15,2020இல் குஜராத் நீதிமன்ற வளாகத்தில் 15ஆம் நாள் P.D. தேசாய் நினைவு உரையில் இப்படிக் குறிப்பிட்டார்.*

*‘‘நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தின் விழுமியங்களைப் பாதுகாப்பது என்பது, நாம் எடுத்துக் கொண்ட உறுதிமொழியாகும். அதற்கு மிகவும் முக்கியமானது. வாத, பிரதிவாதங்கள் அடங்கிய ஜனநாயகமாகும்.’’*

*மக்கள் குடியுரிமைச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு இவற்றுக்கெதிரான எதிர்ப்புகள் வலுப் பெற்றுக் கொண்டிருக்கும்போது அந்தக் காலக்கட்டங்களில் அவர் இப்படிப் பேசினார்.*

**“அரசு இயந்திரங்களைப் பயன்படுத்தி அரசை எதிர்க்கும் குரல்களை நசுக்குவது, ஓர் இனம் புரியாத அச்சத்தை ஏற்படுத்துகின்றது.**

**பேச்சு சுதந்திரத்தைச் சுற்றி ஓர் குரூரமான சூழலை ஏற்படுத்துகின்றது. இது சட்டத்தின் ஆட்சியைக் கேள்விக்குறியாக்குகின்றது. பன் முகத்தன்மை கொண்ட ஓர் சமுதாயம் என்ற அரசியல் சாசனத்தின் பார்வையை சீர்குலைக்கின்றது.”**

*அறிவார்ந்த வாதங்களையும் அறிவுடைமையையும் ஒடுக்குவதற்கெதிராக கடுமையான சொற்களைப் பயன்படுத்துகின்றார்கள் நீதிபதி சந்திசூட் அவர்கள்.*

*அறிவுடைமையை ஒடுக்குவது என்பது தேசத்தின் மனசாட்சியை ஒடுக்குவது என்கின்றார்கள்.*

*இருந்தாலும் ஒரு வாரம் கழிந்த பின் டெல்லியில் கலவரம். காவல்துறையினர் முஸ்லிம்களைக் கொலை செய்வதற்கு உதவி செய்கின்றார்கள். கவலரம் செய்யும் (சங்கிகளை)*



காப்பாற்றிட சிசிடிவி என்ற கண்காணிப்பு கேமராக்களை உடைத்தெறிகின்றார்கள். காவலர்கள் கற்களைக் கொண்டு தாக்குகின்றார்கள். துப்பாக்கிச் சூடுகளை வரைமுறை இல்லாமல் நடத்துகின்றார்கள். பிணங்களைக் குவிக்கின்றார்கள். காயம்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்ற வாகனங்களை வழிமறிக்கின்றார்கள். அவர்களுக்கு உரிய நேரத்தில் மருத்துவம் கிடைக்காமல் தடுக்கின்றார்கள். டெல்லி எரிந்து கொண்டிருந்தது, உச்ச நீதிமன்றம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

15ஆவது, பி.டி.தேசாய் நினைவு சொற்பொழிவில் நீதிபதி சந்திரசூட் அவர்கள் என்ன பேசினார்கள் என்பதற்கு சாட்சியமாக அவருடைய உரையின் பிரதி ஒன்றை இத்துடன் பிற்சேர்க்கையாக இணைத்துள்ளேன்.

இங்கே C2 பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது. C2 (141-165).

என்னுடைய கருத்தின் உண்மைத் தன்மையை பின்வரும் என்னுடைய சேவையிலிருந்து புரிந்திடலாம். நான் கடந்த 30 ஆண்டுகளாக உச்ச நீதிமன்றத்திலும் டெல்லி உயர் நீதிமன்றத்திலும் மூத்த வழக்கறிஞர் என்ற அடிப்படையில் பணியாற்றி வருகின்றேன், இந்த வகையில்பொதுநலன்கருதிபலவழக்குகளைநீதிமன்றம் எடுத்துச் சென்றுள்ளேன். இதில் நான் தொய்வில்லாமல் தொடர்ந்து பணியாற்றி உள்ளேன். அவை நமது ஜனநாயகத்தின் ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டவை. இன்னும் பல நமது நீதித்துறையின் செயல்பாடுகள் குறித்தவை.

நீதித்துறையின் செயல்பாடுகளுக்கு நீதிபதிகள் யாரிடமாவது பதில் சொல்லிடும் ஒரு நிலையை உருவாக்கிட வேண்டும் என்பதற்காக (Judicial Accountability) 1997 முதலே பணியாற்றி வருகின்றேன். இதற்காக நான் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றேன். அதற்காக இயக்கமே நடத்தி வருகின்றேன். இந்த இயக்கத்தின் நோக்கம், மக்கள் கருத்தை "Public Opinion" உருவாக்குவதாகும். அதன்வழி நீதித்துறையின் செயல்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடையவனாக அமைத்திடவும் அதன் செயல்பாடுகளை சீர்தூக்கிப் பார்த்திடவும் ஓர் அமைப்பை ஏற்படுத்திட வேண்டும் என்பதாகும்.

மக்கள் கருத்தை இந்தத் திசையில் ஏற்படுத்துவதற்காக, நான் கருத்தரங்கங்களை பல்வேறு தலைப்புகளிலும் நடத்தி உள்ளேன். அவற்றில் நீதித்துறையில் செய்திட வேண்டிய சீர் திருத்தங்கள் பற்றி பேசி மக்கள் கருத்தை உருவாக்கி வருகின்றேன். இவையெல்லாம், நான் இந்த நாட்டின் நீதிபரிபாலத்தின் மேல் கொண்டுள்ள அக்கறைகளைத் தெளிவாக எடுத்துக்காட்டும். என்னுடைய உண்மைத் தன்மையையும் எடுத்துக்காட்டும்.

ஜனநாயகம் மிகப்பெரிய ஆபத்தில் இருக்கின்றது. என்பதற்கான அறைகூவல், நமது உச்ச நீதிமன்ற மூத்த நீதிபதிகளிடமிருந்தே வந்தது. ஜனவரி திங்கள் 2018 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் நான்கு பேர் நீதிபதி செல்லமேஸ்வர் நீதிபதி குரியன் ஜோசப், நீதிபதி மதன் லோக்கூர் நீதிபதி ரஞ்சன் கோகாய் ஆகியோர் நாட்டின் குடிமக்களிடம் இப்படிக் கூறினார்கள்.

கடந்த சில மாதங்களாக விரும்பத்தகாத பல நிகழ்வுகள் உச்சநீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்றது. உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகள் என்ற அளவில் எங்களுக்கு நாட்டின் மீதும், அதன் நிறுவனத்தின் மீதும் (உச்சநீதிமன்றத்தின் மீதும்) சில பொறுப்புகள் இருக்கின்றன. நாங்கள் தலைமை நீதிபதி அவர்களிடம் பல விஷயங்கள் முறையாக இல்லை. அவற்றை ஒழுங்குபடுத்திட சில நடிவடிக்கைகளை எடுத்திட வேண்டும் என கேட்டுக் கொண்டோம். ஆனால், (அதனால் ஏற்பட்ட பயன் எதுவுமில்லை) எங்களுடைய முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. உச்ச நீதிமன்றம் தனது நடுவு நிலையை காத்துக்கொள்ள வேண்டும். நீதித்துறை நடுவுநிலையிலிருந்து நழுவினால் ஜன நாயகம் உயிர் பிழைக்காது.''

உச்ச நீதிமன்றத்தின் அங்கமாக இருந்த அமர்வு நீதிபதிகள் எந்த அளவுக்கு ஆதங்கப்பட்டார்கள் என்றால் அவர்கள் நீதித்துறையின் நெறிமுறைகளைப் புறக்கணித்துவிட்டு ஒரு பத்திரிகையாளர்கள் சந்திப்பை நடத்தினார்கள். அதன்மூலம் குடிமக்களை எச்சரித்தார்கள். அதன்மூலம் ஜனநாயகத்திற்கு ஆபத்து. காரணம், நீதித்துறை ஆபத்திலிருக்கின்றது என்றார்கள். அத்தனை உபாயங்களும்




அற்றுப் போனபின்தான், மக்களிடம் சொல்லி விடுவோம், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு, என்ற முடிவுக்கு வந்திருப்பார்கள் என நான் கருதுகின்றேன். அதனால்தான் அவர்கள் இப்படி சொன்னார்கள் .

" நாங்கள் இந்த நாட்டிற்காக நிறைவேற்றிட வேண்டிய கடமையை நிறைவேற்றுகின் றோம். நாட்டு மக்களிடம் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைச் சொல்லி"

இப்படிச் செய்ததன் மூலம், அவர்கள், நீதித் துறையிலிருந்த நெறிமுறைகளை மேலும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கின்றார்கள். எல்லா விவகாரங்களையும் முறைப்படுத்திட வேண்டி யவர்கள் தங்களையே முறைப்படுத்திட முடியா தவர்களாக இருக்கின்றார்கள். அதனால் நேர்மை யான மக்கள் மன்ற விமர்சனங்களே ஒரேத் தீர்வு என அவர்கள் நம்பினார்கள்.

The Wire தி வைர் என்ற பத்திரிகையில் 12−01−2018இல் வந்தச் செய்திக் குறிப்பை இத்துடன் பின் இணைப்பாக [C3 (166-170)] இணைத்துள்ளேன்.

இந்த நான்கு நீதிபதிகளுள் ஒருவரான நீதிபதி குரியன் ஜோசப் அவர்கள் 3−12−2018இல் இப்படிச் சொன்னார்கள், எல்லா எல்லைகளையும் கடந்து.

"உச்ச நீதிமன்றம் வெளியிலிருந்து வரும் ஆதிக்க சக்திகளின் அழுத்தங்களுக்கு ஆட்படும் நிகழ்வுகள் நிரம்பவே நடந்திருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தின் நித்திய செயல்பாடுகள் வழக்கு களை எந்த நீதிபதியின் அமர்வுக்கு மாற்றிட வேண்டும் என்பதிலிருந்து உச்ச நீதி மன்றத்திற் கும் உயர் நீதிமன்றத்திற்கும் நீதிபதிகளை நிய மிப்பது வரை ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் வெளி சக்திகளின் குறுக்கீடுகள் நிரம்பவே இருக் கின்றன. வெளியிலிருக்கும் யாரோ ஒருவர் தலைமை நீதிபதியைத் தன் கட்டுக்குள் வைத் திருக்கின்றார். இது நாங்கள் உணர்ந்தோம். நாங்கள் தலைமை நீதிபதியைச் சந்தித்தோம், அவருக்குக் கடிதங்களை எழுதினோம். உச்ச நீதிமன்றத்தின் உன்னதத்தையும் தன்னாட்சி யையும் காப்பாற்றுங்கள் என்றோம். இந்த எல்லா முயற்சிகளும் தோற்றுப்போன பின் பத்திரிகை யாளர்கள் சந்திப்பை நடத்துவது என முடிவு செய்தோம்."

வெளி சக்திகளின் ஆதிக்கம் என்பதை விளக்கிச் சொல்லுமாறு கேட்டபோது அவர் இப்படிப் பதில் சொன்னார்.

"பளிச்சென தெரியக்கூடிய சக்திகள்தாம் முக்கியமான வழக்குகளை, அரசியல் காழ்ப்பு ணர்ச்சி உள்ளவர்களின் அமர்வுக்கு மாற்றுவது."

இத்தனை உண்மைகளை நீதிபதி சொன்ன பின்பு குடிமக்கள்தாம் நீதித்துறையின் தனித் துவத்தையும் சுதந்திரத்தையும், காப்பாற்றிட வேண்டியவர்கள்.

நீதிபதி ஜான் குரியன் ஜோசப் அவர்கள் சொன்ன ஆதாரமாக டைம்ஸ் ஆஃப் இந்தியா வின் 3, டிசம்பர் 2018 இதழின் பிரதி ஒன்றை பின் இணைப்பாக இணைத்துள்ளேன். [C4 (171-172)]

செய்தியின் தலைப்பு, தலைமை நீதிபதியை வெளியிலிருந்து கட்டுப்படுத்துகின்றார்கள் என்பதை நாங்கள் உணர்ந்தோம். "We Feet that, the CJI was being remote controlled : Justice, Kurian Joseph" (TOI : 3/12/2018)

− இன்ஷா அல்லாஹ் தொடரும்

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)

## ஓர் அறிமுகம்



வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர் களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095-இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப் படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்க வில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர். சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளை யடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திற மையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப் படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர் களுக்குஇருந்தது.முதலாம்உலகப்போரின்போதுபிரெஞ்சுதளபதிஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து 'எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். இன்றைய தினம் பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது' என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே..

## அசதுதீன் மரணமடைந்தார்

இதன் பின்னர் வெற்றி பெற்ற அசதுதீனை அல்அதீத் அமைச்சர் அவையின் முதன்மை அமைச்சராக அறிவித்தார். அவருக்கு வேறு வழியும் கிடையாது. அசதுதீன் முதன்மை அமைச்சராக பொறுப்பேற்றார். ஷவாரின் வீடு தான் அமைச்சரவை. அசதுதீன் அங்கேயே தங்கிக் கொண்டார். அவருக்கு போட்டியாகவோ அவரை எதிர்க்கவோ யாரும் கிடையாது. அவர் தன்னுடன் எகிப்திற்கு போருக்கு வந்தவர்களுக்கு எகிப்தின் பகுதிகளில் அதிகாரம் செலுத்தும் பதவிகளில் பணியமர்த்தினார். ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் அசதுதீனின் நம்பிக்கையாளராக இருந்த காரணத்தால் அவர் எகிப்தில் தான் விரும்பியதை செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டார்.

அசதுதீன் எகிப்தின் முதன்மை அமைச்சராக இரண்டு மாதங்கள் ஐந்து நாட்களும் இருந்த நிலையில் திடீரென்று மரணமடைந்தார். அவர் இறந்ததன் காரணமாக அவருடைய மருமகன் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் அந்த பதவிக்கு வந்தார். இதற்கிடையே எகிப்தில் இருந்த நூருத்தீன் அவர்களின் படைத் தளபதிகளில் சிலரைக் கொண்டு எகிப்தின் அமைச்சரவையை கைப்பற்ற சிலர் திட்டமிட்டனர். ஆனால் அல்அதீத் அவர்கள் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களை எகிப்தின் மந்திரி சபையின் தலைவராக நியமித்து செய்தி அனுப்பினார். அல்அதீத் இவ்வாறு செய்ததற்கான காரணம் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களை குறைவாக மதிப்பிட்டது தான்.

தனக்கென்று சொந்த படைகள் இல்லாத ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களை மந்திரி சபையின் தலைவராக நியமித்தால் அவர் தனக்கு கட்டுப்பட்டு நடப்பார், தன் வார்த்தைகளை மீற மாட்டார் என்று அல்அதீத் நினைத்தார்.

மேலும் லெவான்தின் இராணுவத்திற்கு தலைவராக ஸலாஹுத்தீன் நியமிக்கப்படலாம். அவ்வாறு நியமிக்கப்பட்டால் எகிப்தில் உள்ள மற்ற சக்திகளை விரட்டிவிடலாம். எகிப்தை முழுமையாக தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம். அதுமட்டுமன்றி லெவான்தின் இராணுவவீரர்கள் நூருத்தீனுக்கு எதிராகவும் ஃபிரான்குகளுக்கு எதிராகவும் எகிப்தை பாதுகாப்பார்கள் என்றும் கருதினார்.

ஆனால் ஸலாஹுத்தீன் இவர் குறைத்து மதிப்பிட்டது போல் சாமானியர்களுக்கு கட்டுப்படுபவர் அல்லர். மாறாக உலகத்தை கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டவர். இதன் காரணமாக அல் அதீத் அவர்களின் திட்டங்கள் தவிடு பொடியாகிப்போனது. ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு கட்டுப்பட்டவராக அவரின் கட்டளைகளை நிறைவேற்றுபவராக இருந்தார். அவர் எகிப்தியர்களிடமும் நன்மதிப்பு பெற்றவராக இருந்தார். அசதுதீன் அவர்களால் வசூல் செய்யப்பட்டவற்றையும் எகிப்தியர்களுக்கு திருப்பி அளித்தார். அது மட்டுமன்றி அல்அதீத் அவர்களையும் எகிப்தின் மக்களுக்கு பல்வேறு நன்கொடைகளை வழங்கும்படி கேட்டுக்கொண்டார். அல்அதீத் அவர்களுக்கு இதனை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியுமில்லை. அதற்கான அதிகாரமும் இல்லை. ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் எகிப்தியர்களிடம் கூடிக்கொண்டே போனது. அல்அதீத் அவர்கள் பலவீனமடைந்து கொண்டே வந்தார்.

இந்த நிலையில் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் ஒரு கோரிக்கையை முன் வைத்து ஒரு செய்தியை அனுப்பினார். தன் சகோதரர்களை தன்னிடம் அனுப்பி வைக்குமாறு அந்த செய்தியில் கோரப்பட்டிருந்தது. ஆனால் நூருத்தீன் ஸங்கி அவர்கள் இந்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. ‘அவர்கள் உங்களுக்கு கட்டுப்படாமல் நடந்து கொள்ளக்கூடும். அதன் காரணமாக தற்போது எகிப்தில் உள்ள நிலைமை கெட்டுப்போகக் கூடும்‘ என்று பதில் அனுப்பினார்.

## ஸலாஹுத்தீன் சகோதரருக்கு நூருத்தீன் உபதேசம்

இதற்கிடையே எகிப்தை நோக்கி ஃபிரான்குகள் படையெடுக்க இருப்பதாக தகவல்கள் கிடைத்தன. இதன் காரணமாக நூருத்தீன் ஸங்கி அவர்கள் தன்னுடைய படை வீரர்களை எகிப்திற்கு ஸலாஹுத்தீனுக்கு உதவியாக அனுப்பி வைத்தார். அப்படி அனுப்பி வைத்தவர்களின் ஸலாஹுத்தீனின் மூத்த சகோதரர் ஷம்சுத்தவ்லா துரன்ஷா என்பவரும்

ஒருவர். அவர் எகிப்திற்கு தன்னுடைய தம்பிக்கு உதவியாக புறப்பட இருந்த நிலையில் நூருத்தீன் அவர்கள் அவரை அழைத்து பின்வருமாறு உபதேசங்களை வழங்கினார்.

'நமக்கு சேவகம் செய்த தம்பி தானே ஆட்சியில் இருக்கிறான் என்ற எண்ணத்தில் நீ எகிப்திற்கு செல்வதாக இருந்தால் இப்போதே அந்த எண்ணத்தை மாற்றிக்கொள். அவ்வாறு நீ செய்வது அந்த நாட்டில் உன் தம்பி உருவாக்கி வைத்துள்ள சூழ்நிலையை அழித்துவிடும். அவ்வாறு நடந்தால் நான் உன்னை கடுமையாக தண்டிப்பேன். தவிர ஸலாஹுத்தீன் எகிப்தின் ஆட்சியாளர் மற்றும் என்னுடைய உதவியாளர். என்னிடம் இங்கு நீ எப்படி பணியாற்றினாயோ அதுபோலவே ஸலாஹுத்தீனிடம் நடந்து கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் நீ ஒப்புக் கொண்டால் நீ எகிப்திற்கு சென்று ஸலாஹுத் தீனுடைய விஷயங்களில் அவருக்கு உதவியாக இருக்கலாம். அல்லது நீ அங்கு போகத் தேவையில்லை' என்று கூறிவிட்டார். இதற்கு பதிலளித்த ஷம்சுத்தவ்லா, 'நான் ஸலாஹுத்தீனுக்கு பணிந்து பணியாற்றுவேன். இறைவன் நாடினால் இது குறித்து நீங்கள் அறிந்து கொள்வீர்கள்' என்று கூறினார். அதன்படியே பிந்தைய நாட்களில் அவர் நடந்தும் கொண்டார்.

## ஃபிரான்குகளின் எகிப்து முற்றுகையும் நூருத்தீன் அவர்களின் தந்திரமும்

*ஹிஜ்ரி 565 கிபி 1170*

எகிப்து அசதுதீன் அவர்களின் கைகளின் வசம் வந்த பிறகு கரையோரப் பகுதிகளில் இருந்த சிலுவைப் படையினர் மிகுந்த பயம் கொள்ள லாயினர். எனவே அவர்கள் அந்தலூசியா, CLC போன்ற பகுதிகளில் இருந்த சிலுவை படையினரிடம் தங்களுக்கு படை அனுப்பி உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

எகிப்தில் தற்போது உள்ள நிலைமைகளை குறித்து அவர்களுக்கு விவரித்து செய்திகளை அனுப்பினர். எங்கே ஜெருசலேம் தங்கள் கை விட்டு போய் விடுமோ என்ற தங்களுடைய அச்சத்தையும் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். தங்கள் பகுதிகளில் உள்ள கிறித்தவ குருமார் களை பாதிரியார்களை ஒரு குழுவினராக அனுப்பி சிலுவை படையினரை போருக்கு உத்வேகப்படுத்த முயற்சித்தனர். அவர்களுக்கு பணத்தையும் ஆயுதங்களையும் வாரி வாரி வழங்கினர். இதன் காரணமாக மற்ற பகுதிகளில் இருந்த சிலுவைப் படையினர் டாமியட்டா என்ற பகுதிக்கு வந்து முகாமிட்டனர். இந்தப் பகுதிதான் எகிப்தின் எல்லா பகுதிகளுக்கும் செல்வதற்கான முக்கியமான பகுதி என்பதால் அவர்கள் டாமியட்டாவில் முகாமிட்டனர்.

அங்கு முகாமிட்டதோடு அல்லாமல் அந்த பகுதியை அவர்கள் முற்றுகையிட்டனர். அங்கு வாழும் மக்களை அவர்கள் உள்ளிருந்து வெளி வராத வண்ணம் சிறைபிடித்தனர். இதன் காரணமாக சலாஹுதீன் தன்னுடைய படைகளை நைல்நதியைத்தாண்டி அந்த இடத்திற்கு அனுப்பி வைத்தார். மேலும் அவர்களுக்கு தேவையான ஆயுதங்களையும் பொருட்களையும் தந்து அனுப்பினார். அதன் பின்னர் ஸலாஹுதீன் நூருத்தீன் அவர்களுக்கு அங்குள்ள நிலைமை குறித்து தகவல் அனுப்பினார். தன் படைகளை அனுப்பி சிலுவை படையினரை இப்போது தாக்கவில்லை என்றால் டாமியட்டா நம் கையை விட்டுப் போய்விடும். அவ்வாறு நிகழுமானால் எகிப்தியர்கள் தற்போது நமக்கு கட்டுப்பட்டு இருப்பது போல் இருக்க மாட்டார்கள். எகிப்தும் நம் கை விட்டுப் போய்விடும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

நிலைமைகளை நன்கு உணர்ந்து கொண்ட நூருத்தீன் அவர்கள் தன்னுடைய படைகளின் ஒரு பகுதியை ஸலாஹுதீன் அவர்களுக்கு உதவி செய்ய அனுப்பி வைத்தார். அத்துடன் நின்று விடாமல் அவர் ஒரு தந்திரம் செய்தார்.

– இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.

## வாசகர் வட்டம்

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)..

வைகறை வெளிச்சம், உலக முஸ்லிம்களுக்கு, குறிப்பாக தமிழக முஸ்லிம் சமுதாயத்திற்கு வெளிச்சம் தந்து கொண்டு வருகிறது என்பது மிகையல்ல.

பாலஸ்தீனர்களின் – காஸா பகுதியைப் பற்றி, இஸ்ரேல் வீழ்ந்தது எப்படி? என்பது குறித்த கட்டுரைகள் மிகச் சிறப்பாக வெளியிட்டுள்ளீர்கள்.

அவை மட்டுமல்லாது தெரிய வேண்டிய விஷயங் களைத் தெளிவாக விளக்கிவரும் ஓர் இதழ் 'வைகறை வெளிச்சம்'என்பது உண்மை!

– அஸாருத்தீன்

நான்காம் பதிப்பிற்கான முன்னுரை

# அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?




## புத்தகம் பிறந்த கதை!

*6–5–2012* காலை 10 மணி. “ராய் உமாநாத் பாலி அரங்கம்'' ஹைஸர்பாக், லக்னோவ் உத்திரப் பிரதேசத்தின் தலைநகர் லக்னோ! அங்கே அன்றைய நாளில் அண்ணல் அம்பேத் கர் பேசிய அதே மேடை. நிகழ்ச்சி ‘ஜாதிய வாத்கா அந்த்’ – ஜாதி ஒழிந்தது என்ற நூலின் இந்தி மொழிபெயர்ப்பு வெளியீட்டு விழா. நிகழ்ச்சிக்குப் பல நாட்களுக்கு முன்னரே, களப் பணிகளைத் தொடங்கிவிட்டோம் நானும் (MGM) லக்னோவைச் சேர்ந்த அன்பு நண்பர் ஹாலித் அவர்களும்

‘தலீத்’ தலைவர்களைச் சந்தித்து, நூல் களைத் தந்தோம். அத்தோடு, நிகழ்ச்சிக்கான அழைப்பி தழையும் தந்தோம்.

சிலர் இந்த நிகழ்ச்சிக்கு, “இந்த அரங்கம் எப்படிக் கிடைத்தது?” என்றார்கள் “ஏன் தர மாட்டார்கள்?” என்றேன். அது அரசின் கட்டுப் பாட்டுக்குள் இருக்கும் அரங்கம். “இப்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் அகிலேஷ் யாதவ், சமாஜ்வாடி கட்சி, ஜாதி ஒழிப்பிற்கு இஸ்லாம் தான் தீர்வு என்பதையெல்லாம் ஏற்றுக்கொள்ள மாட்டார்” எனப்பதில் சொன்னார்கள்.

எனது லக்னோவ் நண்பர் ஹாலித் அவர்கள் வழியாகத்தான் இந்த அரங்கிற்கு ஏற்பாடு செய்தேன். அவரும் அழைப்பிதழைத் தந்திடும்போது உடனிருந்தார். “அவர் எப்படி யும் வாங்கி விடுவோம்‘‘ என்றார்.

நான், நண்பர் ஹாலித் அவர்களிடம், ‘‘நாம் அரங்கத்தை உறுதி செய்துவிட்டு, அழைப்பி தழை அச்சடிக்கும் வேலைகளைத் தொடங்கி இருக்கலாமே” என்றேன்

என்னுடைய பாணி இப்படி அல்ல. அரங்கம், உரையாற்றுவோர், இவர்களை யெல்லாம் உறுதி செய்த பின்னர்தான், அழைப் பிதழை அச்சடிப் பேன். “வாருங்கள் போய் அரங்கத்தை உறுதி செய்வோம்” என்றேன்.

இதற்கு நண்பர் ஹாலித் அவர்கள், அரங்கம் இப்போது அரசாங்கத்தின் கைகளில் இருக்கின்றன. அவர்கள் உளவுத்துறை வழியாக ஓர் விசாரணையை நடத்தி விட்டுத் தான் தருவார்கள் என்றார்.

நான், ‘‘நான் பிறந்து, தவழ்ந்து, நடை பயின்ற நாள் முதலே உளவுத்துறை என் பின்னா லேயே இருக்கின்றது. ஏதேனும் காரணத்தைச் சொல்லி தட்டிக் கழிப்பார்கள்” என்றேன்.

என்ன செய்வது?

உடனேயே பாபரி மஸ்ஜித் வழக்கை நடத்திக் கொண்டிருந்த ஜாபர் யாப் ஜீலானி அவர்களிடம் செல்லலாம் என நினைத்தேன். ஜாபர் யாப் ஜீலானி அவர்கள்தாம் தொன்மைக் காலந்தொட்டே பாபரி மஸ்ஜித் வழக்கை நடத்திக் கொண்டிருந்தவர். ஆரம்ப நாள்களில் அவர் தன்னந்தனியாகவே, இந்த வழக்கை நடத்திக் கொண்டிருந்தார். யாரும் நிதி உதவி களைச் செய்திடவில்லை, அவரும் யாரிடமும் நிதி கேட்கவில்லை.

நாம்தான், நமது மனித நீதி பாசறையை

நிறுவிய நாளில் 2000ஆம் ஆண்டில், ஜாபர்யாப் ஜீலானி அவர்களை அழைத்து ரூ. 25,000—ஐ வழக்கு நிதியாக வழங்கினோம். பாபரி மஸ்ஜித் வழக்கு முதன் முதலில் நிதி வழங்கிய பெருமை நம்மையேச் சாரும் (அல்ஹம்துலில்லாஹ்) இதனை அவர் செல்லுமிடமெல்லாம் நன்றியோடு நினைவு கூருவார்.

ஜாதி ஒழிந்தது, 'ஜாதிய வாத்கா அந்த்' இந்தி மொழி பெயர்ப்பைப் பற்றி ஏற்கெனவே அவரிடமும் பேசி இருந்தோம். ஆகவே அவரை தொடர்புகொள்வது என முடிவு செய்தோம்.

நானும் ஹாலித் அவர்களும் அவரை அவருடைய இல்லத்தில் சந்தித்து விஷயத்தைச் சொன்னோம். அப்போது அவர் உத்திரப் பிரதேசத்தின் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப்படவிருந்தார்.

அவர் உடனேயே அதிகாரிகளை தொடர்பு கொண்டார். அனுமதியைப் பெற்றுத் தந்தார்.

மீண்டும் தலீத் தலைவர்களிடம் திரும்பினோம். நூலையும், அழைப்பிதழையும் தந்தோம்.

அடுத்து, தலித் மாணவர்கள், ஆராய்ச்சியார்கள் இவர்களிடம் சென்றோம். தலீத் மாணவர்கள், ஆராய்ச்சி படிப்பிற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம், ஒரே (ஹாஸ்டல்) — விடுதியில் தங்கி இருந்தார்கள். இஃது அழைப்பிதழ்களைத் தருவதற்கு எமக்கு மிகவும் வசதியாக இருந்தது.

அங்கே சென்றோம். (ஜாதி ஒழிந்தது) இந்தி மொழிப்பெயர்ப்பு நூலையும், அழைப்பிதழையும் அவர்களுக்குக் கொடுத்தோம். மாணவர்கள் தங்கும் அந்த விடுதியில் அங்கிங்கெனாதபடி எங்கும்புத்தர் படங்கள் பரவிக் கிடக்கக் கண்டோம். பௌவுத்தத்தை யாரோ ஓர் இயக்கமாக மக்களிடம் கொண்டு செல்லுகிறார்கள், குறிப்பாக தலீத் மாணவர்களிடம் என்பதை உணர்ந்தோம். அண்ணல் அம்பேத்கர் படமும் உடனிருந்தது.

எனினும் அழைப்பிதழைக் கொண்டு சென்ற என்னையும், சகோதரர் ஹாலித் அவர்களையும் அன்போடு வரவேற்றார்கள்.

நான் ஜாதி ஒழிந்தது, நூலின் சுருக்கத்தை ஆங்கிலத்தில் சொன்னேன். முழுமையான ஓர் விளக்கம் அரங்கத்தில் கிடைக்கும், அவசியம் வாருங்கள் என்றேன்.

வருவதாக வாக்களித்தார்கள் மாணவர்களும், ஆராய்ச்சி யாளர்களும். அதேபோல டாக்டர் அம்பேத்கர் பல்கலைக் கழகம் என்ற மத்திய பல்கலைக்கழகத்திற்குச் சென்றோம். அந்த மத்திய பல்லைக்கழகத்தின், அம்பேத்கர் ஆய்வு மைய்யத்தில் (Centre for Ambedkar Studies) அழைப்பிதழ் நூல் ஆகியவற்றைத் தந்தோம். அன்போடு வரவேற்றார்கள். நிகழ்ச்சிக்கும் வருவதாக வாக்களித் தார்கள்.

அழைப்பிழை ஏற்று அனைவரும் வந்திருந்தார்கள். அரங்கம் குறித்த நேரத்திற்கு முன்பே நிரம்பியது. இளம் தலைமுறையினர் ஏராளமாகக் கலந்துகொண்டனர். ஆராய்ச்சி மாணவர்களும் ஏராளமாகக் கலந்துகொண்டிருந்தனர்.

என்னுடைய வரவேற்புரையைத் தொடர்ந்து நூல் அறிமுகம் நடந்தது. டெல்லியைச் சார்ந்த மூத்த வழக்கறிஞர் R.S.ஆதில் அவர்கள்தாம் நூலை அறிமுகப்படுத்தி உரை நிகழ்த்தினார்கள்.

அவர் தன்னுடைய உரையில், டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவே தயாராக இருந்தார். டாக்டர் மூஞ்சே போன்றவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தான், அவர் இஸ்லாத்தை ஏற்றக்கொள்ளவில்லை. அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் சனாதன வெறியர்கள் அவரை கொலை செய்யவும், தயங்கி இருக்க மாட்டார்கள். ஆகவே அவர் அப்போதிருந்த சூழ்நிலையில் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இல்லையேல் இஸ்லாமே அண்ணல் அம்பேத்கர் தேர்வு செய்த மார்க்கம் என்றார்.

இந்நிலையில் மாணவர்கள் சிலரும், ஆராய்ச்சியாளர்கள் சிலரும் கிளர்ந்தெழுந்தார்கள். இதற்கு நாங்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்என்றார்கள். R.S. ஆதில் அவர்கள், என்னுடைய உரையை முழுமையாகக் கேளுங்கள், பின்னர் உங்கள் எதிர்ப்புகளைத் தெரிவியுங்கள் என்றார்.

நான் எல்லோரும் பேசிட இடமிருக்காது. ஆனால் ஒரு சிலரை இடைவேளைக்குப் பிறகுப் பேசிட அனுமதிக்கின்றேன். அதுவரை அமைதி காக்கவும் என்றேன். என் பதிலில் திருப்தி அடைந்தவர்களாக அவர்கள் அமர்ந் தார்கள்.

அதன்பிறகு R.S. ஆதில் அவர்கள் அண்ணல் அம்பேத்கர் அவர்களை இந்துத்துவ தீவிரவாதி டாக்டர் மூஞ்சே அவர்கள் சந்தித் ததைசொன்னார்கள். அடுத்தாற்போல் டாக்டர் மூஞ்சே இந்த சந்திப்புக் குறித்து இன்னொரு தலித் தலைவரான எம்.சி.இராஜா அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தின் உண்மை நகலை ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்கள்.

அரங்கத்தில் நடப்பவை அனைத்தையும் ஜாதி ஒழிந்தது நூலின் ஆசிரியர் டி.எம்.உமர் ஃபாரூக் அவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டி ருந்தார்கள். அவருக்கு நான் தமிழில் விளக்கிச் சொல்லிக் கொண்டே இருந்தேன்.

R.S. ஆதில் அவர்கள் கொடுத்த அந்த உண்மை நகலைப் படித்தபின் அரங்கம் அமைதி யானது. ஓரிரு மாணவர்களும் ஆராய்ச்சியாளர் களும் வந்து, இதுகுறித்து ஆராய்ச்சிகள் நடத்த வேண்டும் என்றனர்.

நிகழ்ச்சி முடிந்து நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு திரும்பியபின் கடிதத்தின் நகலை மொழிப்பெயர்த்து கேட்டார்கள். நான் மொழிப்பெயர்த்துக் கொடுத்தேன். பின்னர் 'அம்பேத்கரின் மத மாற்றத்தில் இவ்வளவு பெரிய பின்னணி இருந்திடும் போது நாம் ஏன் அதை ஒரு நூலாகக் கொண்டு வந்திடக்கூடாது எனக் கேட்டேன். நூலை எழுதும் பொறுப்பை ஜாதி ஒழிந்தது நூலாசிரியர் டி.எம். உமர் ஃ பாரூக் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

நூலை எழுதி என்னிடம் காட்டினார். நான் அதை சீர் செய்து அச்சிட்டேன். "வைகறை வெளிச்சம்" இதழிலும் வெளியிட்டேன்.

இப்படித்தான் இந்த நூல் பிறந்தது. இந்த நூலை இப்போது பல்லாயிரக்கணக்கானோர் படித்திருக்கின்றார்கள். பயனடைந் துள்ளனர்.

இந்துத்துவ சிந்தனையாளர், தீவிரவாதி டாக்டர் மூஞ்சே அவர்களின் ஆங்கில கடிதத்தை நூலின் பின் பகுதியில் தந்துள்ளோம். மொழி பெயர்ப்பு உள்ளே தரப்பட்டுள்ளது.

**டாக்டர் மூஞ்சே யார்?**

இவர் தசாத்த ரிக் வேதி பிராமணன் குடும்பத்தில் பிறந்தவர். இவர் 1920களிலேயே இந்துத்துவ சிந்தனையை வளர்த்தவர். ஹிட் லரையும், முசோலினியையும் சந்தித்துவிட்டு வந்து இந்தியாவில் இந்துத்துவ வன்முறையை வளர்த்தவர். அவர் ஹிட்லரையும், முசோலி னியையும் சந்தித்துவிட்டு வந்ததை நமது 'வைகறை வெளிச்சம்' பத்திரிகையில் விரிவாக வெளியிட்டிருந்தோம்.

இந்த சந்திப்பின் பின்தான் இவர் மராட்டிய மாநிலம் நாசிக்–இல் உள்ள போன்ஸாலா மிலிட்டரி ஸ்கூலை (இந்துத்துவா) இராணுவப் பள்ளியைத் தொடங்கினார், 1937இல். இன்ற ளவும் இந்துத்துவ தீவிரவாதிகளை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றது.

இந்த போன்ஸாலா மிலிட்டரி ஸ்கூல் பற்றியும் வைகறை வாசகர்களுக்கு நிரம்பவே செய்திகளைத் தந்திருக்கின்றோம்.

இந்த போன்ஸாலா மிலிட்டரி ஸ்கூல்–இல் தான் மலேகான்; நந்தேத், பார்பானி, ஹைதரா பாத் மக்கா மஸ்ஜித், அஜ்மீர் தர்கா, சம்சவ்தா எக்ஸ்பிரஸ் ரெயில், பானிபட் ஆகிய இடங்களி லும், இன்னும் பல இடங்களிலும் குண்டுகளை வைத்து, வெடிக்கச் செய்த தீவிரவாதிகள் உருவாக்கப்பட்டார்கள். 40 நாட்கள் குண்டுகள் செய்வது, அவற்றை முஸ்லிம்கள் அதிகமாக வசதியு மிடங்களிலும் கூடுமிடங்களிலும் வைப்பது, வெடிக்கச் செய்வது என்பனவற் றிற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில் உளவுத்துறையும் கைக்கோர்த்துக் கொண்டது. இந்தக் குண்டு வெடிப்புகளின் பழியை முஸ்லிம்களின் மேல் போட்டார்கள் – இந்துத்துவ வாதிகள் ஆட்சியைப் பிடித்துக் கொண்டார்கள்.

Source : Who Killed Karkare : The Real Face of Terrorism in india

## வழக்கறிஞர் R.S. ஆதில் அவர்கள்

லக்னோவில் 6–5–2012இல் நடந்த ஜாதி

ஒழிந்தது – ஜாதியா வாத்கா அந்த நூலின் வெளியீட்டு விழாவில், நூல் அறிமுக உரையை இவர்தான் நிகழ்த்தினார்; எனக் குறிப்பிட்டேன்.

இந்த R.S. ஆதில் டெல்லி உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக இருப்பவர். நாங்கள் டெல்லியில் 18–4–2010 அன்று ஜாதி ஒழிந்தது நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பை வெளியிட்டபோது சிறப்புரை ஆற்றினார். அந்த உரை அனைவரையும் கவர்ந்தது, அந்தப் பின்னணியில்தான் அவரை லக்னோவை நிகழ்ச்சிக்கு அழைத்தோம்.

இவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர். இந்து மதத்தை விட்டு வெளியேறிட வேண்டும் என்ற முனைப்பில், பௌத்தத்தை ஏற்றுக் கொண்டவர். ஏற்றுக்கொண்டதோடு, நிற்கவில்லை. பௌத்தத்தை ஆழமாகக் கற்றார். அத்தோடு புத்த பிட்சுகளை உருவாக்கிட வழக்கறிஞர்தொழிலைவிட்டுவிட்டுடெல்லியில் நிறுவப்பட்டுள்ள, பௌத்த விகாரில் முழுநேர ஆசிரியராகப் பணியாற்றியவர்.

பின்னர் பௌத்தம் – ஜாதியை ஒழிக்காது என்பதை கண்டறிந்து 1982இல் தன் குடும்பத்தைச் சார்ந்த 19 பேரோடு இஸ்லாத்தை ஏற்றவர்.

இஸ்லாத்தை ஏற்றபின், தனது வழக்கறிஞர் பணியைத் தொடர்ந்து கொண்டே, இஸ்லாத்தையும் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பவர். அவரைப்பற்றிய முழு கட்டுரை ஒன்றை வைகறை வெளிச்சம்–2012 ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கின்றோம்.

இவண்,

**மு. குலாம் முஹம்மத்**

ஆசிரியர் – வைகறை வெளிச்சம்.

காப்பாளர் – வேர்கள் பதிப்பகம்

நிறுவர் 'விடியல் வெள்ளி'

## இஸ்ரேலிய தூதரக குண்டுவெடிப்பில் சிக்க வைக்கப்பட்ட

# முஸ்லிம் இளைஞர்கள் விடுதலை

2021 ஜனவரி மாதம் டெல்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்திற்கு வெளியே கார்களில் குண்டுவெடிப்பு நடந்தது. இது பயங்கரவாத தாக்குதல் என்று ஊடகங்களில் சொன்னார்கள். அதை தொடர்ந்து வழக்கு தேசிய புலனாய்வு முகமைக்கு (NIA)க்கு மாற்றப்பட்டது.

குண்டுவெடிப்பில் தொடர்புடையவர்கள் என கூறி ஜூன் மாதத்தில் காஷ்மீரை சேர்ந்த நான்கு முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்றும் இந்தியாவின் மிக முக்கிய இடங்களில் குண்டு வைக்க திட்டம் போட்டிருந்தார்கள். இவர்களிடமிருந்து ஆபத்தான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது என்றும் NIA தரப்பில் ஊடகங்களுக்கு சொல்லப்பட்டது.

இந்நிலையில் ஜூலை 16ம் தேதி இளைஞர்களின் ஜாமீன் வழக்கை விசாரித்த நீதிமன்றம், இந்த இளைஞர்களிடம் இருந்து எந்த ஆபத்தான பொருட்களும் பறிமுதல் செய்யப்படவில்லை. காவல்துறையினர் முன் வைக்கும் குற்றச்சாட்டுக்கும் போதுமான ஆதாரங்கள் இல்லையென்று கூறி நான்கு மாணவர்களுக்கும் ஜாமீன் வழங்கியிருக்கிறது.


முஸ்லிம் இளைஞர்கள், தொடர்ச்சியாக தீவிரவாத வழக்கில் கைது செய்யப்பட்டு பல வருட சிறைவாழ்க்கைக்கு பிறகு விடுதலையாகும் நிகழ்வுகள் இந்தியாவில் தினந்தோறும் தொடர்கிறது. இதுவும் அதிலொன்று தான் என சமூக ஆர்வலர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சமீபத்தில் கூட மஹாராஷ்டிராவில் அம்பானி வீட்டின் முன்னால் காரில் வெடிகுண்டு பறிமுதல் செய்யப்படும் போது ஒரு முஸ்லிம் அமைப்பின் பெயரே தொடக்கத்தில் சொல்லப்பட்டது. ஆனால், மஹாராஷ்ராவில் சிவசேனா–பிஜேபி குழப்பத்தின் காரணமாக உண்மையில் குண்டு வைத்தது மஹாராஷ்டிராவின் பெரிய அதிகாரியான சச்சின் வாஸெ என்று தெரிய வந்தது.

இதுபோல் பல சம்பவங்கள் கடந்த காலங்களில் நடந்திருக்கிறது. ஆனாலும், முஸ்லிம் இளைஞர்கள் மீதான அதிகார தாக்குதல் தொடர்கிறது.

– அபூ சித்திக்.

சிலுவைப் போர்கள் 2.0




தொடர்

# இஸ்லாமிசம்

"இஸ்லாமிசம்" பேசும் இஸ்லாமியவாதிகள், உலக அரசியலிலும், தங்கள் உள்நாட்டு அரசியலிலும், இஸ்லாம் தலையிட நிரம்பவே இடமிருக்கின்றது என நம்புகின்றார்கள். அரசியல்வாதிகளின் தலையீடுகள் வழி முஸ்லிம் நாடுகளில், சமுதாயத்தை இஸ்லாத்தின் வார்ப்பில் வளர்த்தெடுக்க வேண்டும்.

அங்கு அதாவது, முஸ்லிம் நாடுகளில், நடக்கும் ஆட்சிகளை முழுமையான இஸ்லாமிய ஆட்சியாக மாற்றிட வேண்டும் என முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அதனை தொடர்ந்து உலகெங்குமுள்ள சமுதாய அமைப்புகளையும், நாம் இஸ்லாத்தின் வார்ப்பில் கொண்டுவந்திட வேண்டும். உலகத்தின் ஆட்சியையும் அசைவையும் இஸ்லாத்தின் பிடியின்கீழ் கொண்டு வந்திட வேண்டும், என முயற்சி செய்கின்றார்கள் இஸ்லாமிய வாதிகள்.

"காரணம், இஸ்லாம் வாழ்வின் எல்லாத்துறைகளுக்கும் வழிகாட்டி என அவர்கள் நம்புகிறார்கள்." இப்படிச் சொல்லி இருப்பது கிரகாம்புல்லர். – 74.

இஸ்லாமிஸ்ட் என்ற இஸ்லாமியவாதிகள், இந்தச் செயல்திட்டங்களுள் ஒன்றாக அரசியல் கட்சிகளை உலகெங்கும் தொடங்கி இருக்கின்றார்கள். தேர்தல்களிலும் போட்டியிட்டு வருகின்றார்கள். ஆனால், இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்த்து வரும் நாம் (இஸ்லாமோ போஃப்ஸ்) இஸ்லாமிஸ்ட் என்ற பதத்தை பயன்படுத்திடும் போது, முதல் சிலுவைப் போரின் போது, நாம் என்னென்னவற்றைச் சொன்னோமோ, அவற்றையே மீண்டும் மீண்டும் சொல்லி வருகின்றோம்.

அத்தோடு அவர்களின் இதுபோன்ற இப்போதைய திட்டங்களையும் செயல்பாடுகளையும் சேர்த்தே பிரச்சாரம் செய்கின்றோம். இப்போது இஸ்லாமிஸ்ட் என்ற சொல்லில் உலகை ஆட்கொள்ள வருபவர்கள் அதற்காக

*ஜான் பெஃபர் கூறுகின்றார் :*

*"முஸ்லிம்கள் சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாகச் செயல்படுபவர்கள் என்று நாங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்தோம்.*

*காரணம், முஸ்லிம்களிடம் தொடர்ந்து பழகுகின்ற சிலர் அவர்கள் நல்லவர்கள் எனப் பேசிட தலைப்பட்டார்கள். அதனால் நாங்கள் முஸ்லிம்கள் நல்லவர்களைப்போல் செயல்படுவார்கள். தருணம் வருகின்றபோது அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி விடுவார்கள்.*

*ஆகவே அந்த நல்லவர்கள் புத்திசாலித்தனமாகக் காத்திருப்பவர்கள்." எனக் கூறி மக்களை எங்கள் பக்கமே வைத்திருந்தோம். இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் வெறுப்பாகப் பார்ப்பதைத் தவிர வேறு எந்த நல்ல எண்ணமும் அவர்கள் மனதில் புகுந்திடாமல் பார்த்துக் கொண்டே வருகின்றோம்.*

*முஸ்லிம்கள் சிலபல நேரங்களில், மதம் சார்ந்த விவாதங்களை நடத்துவார்கள். இந்த விவாதங்களில் அவர்களிடம் வெளிப்படைத் தன்மை இருப்பதைபோல் தோன்றும். ஆனால் இரகசியமாக அவர்கள் தங்களுக்குள் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருப்பார்கள். ஆட்சியதிகாரத்தை பிடிக்க!*

*இஸ்லாமிசம் என்ற சொல்லின் பொருளைப் பாருங்கள், அத்தோடு கிரகாம் புல்லர் என்பவர் அதற்குத் தரும் விளக்கத்தையும் பாருங்கள்.*

கொலை பாதகங்களைச் செய்து வருபவர்கள் என்று பொருள்படும். – இப்படி எந்தத் திசையிலும் அவர்களைச் செயல்பட்டுவிடாமல் தடுத்து வருகின்றோம்.

இஸ்லாம் என்ற ஆபத்தை எதிர்கொள்வதற்கு இதுவே சிறந்த வழி நாம், நினைக்கின்றோம்.

நமது இந்தப் பிரச்சாரத்திற்குப் பக்கத் துணையாக நாம் சில முஸ்லிம் அரசியல்வாதிகளையும் இணைத்துக் கொண்டோம். இந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் இஸ்லாத்தை மையமாகக் கொண்டு செயல்படும் இந்தப் புதிய அரசியல் கட்சிகளை அழிக்க வேண்டும் என விரும்புகின்றார்கள். ஆதலால் அவர்களையும் நமது அணியில் இணைத்துக் கொண்டோம். அவர்களில் ஒருவர்தான் செய்யீத் சாதிக் என்பவர். இவர் இந்த இஸ்லாமிஸ்ட்களைப் பற்றி இப்படிச் சொன்னார் :

மிதமான இஸ்லாமிஸ்ட்டுகள் யார் என்றால் அவர்கள், முறையற்ற நடவடிக்கைகளின் வழி உடனேயே ஆட்சியைப் பிடிக்க முடியாதவர்கள். 75

மேலே சொன்ன சொற்களால் இஸ்லாமிஸ்ட்டுகளினால், மிகவும் செயல் திட்டங்களை தெளிவாகச் சுட்டிக்காட்டிவிட்டார்.

வாசகர்கள் கவனிக்க :

இஸ்லாத்தின் மீது வெறுப்பை வளர்ப்பவர்கள் அதன்மூலம் முஸ்லிம்களை இன்றைய உலகின் வில்லன்களாக காட்டுபவர்கள். ஒரு பெரும் திரிபுவாதத்தை மேலே கோடிட்டுக் காட்டியுள்ளார்கள்.

இன்றைய முஸ்லிம்களில் சிலர் ஜனநாயக ரீதியான அரசியல் கட்சிகளைத் தொடங்கி இருப்பதன் நோக்கம் ஆட்சியைப் பிடிக்கவும், அதன்மூலம் இஸ்லாத்தை நிலைநாட்டுவதும் தான். ஆனால் உண்மை அதுவல்ல, உண்மை என்னவெனில் இப்படி அரசியல் கட்சியைத் தொடங்கி இருப்பவர்கள், இந்தியா போன்ற நாடுகளில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறுவதற்கு தான், நானும் எம்.எல்.ஏ., நானும் எம்.பி. எனச் சொல்லிக் கொள்வார்கள். பணத்தை சம்பாதித்துக் கொள்வார்கள். அவர்கள் போடும் இலாப நஷ்டக் கணக்குகளில் இஸ்லாத்தின் எதிரியோடு கைகோர்த்துக் கொண்டால், இலாபம் எனக் கருதினால் இஸ்லாத்தின் எதிரிகளோடு கைகோர்த்துக் கொள்வார்கள்.

சில சில்லரை பதவிகளுக்காகவும், சில்லறைகளுக்காகவும் இதனை தயங்காமல் செய்வார்கள். அல்லாமல் இவர்களுக்கு, மேலே, ஜான் பெஃபர், கிரகாம் புல்லர், ஆகியோர் சொல்வதைப் போல், பெரிய நோக்கங்கள் – இஸ்லாமே இலட்சியம் அல்லது என்றெல்லாம் இல்லை.

இன்னும் சொல்வதானால் இவர்கள் ஜனநாயகந்தான் இப்போதைய வழி. வேறு உபாயங்களே இல்லை என முழுமையாக நம்புகின்றார்கள். இஸ்லாம் சொல்லும் அரசியல் நெறிகள் காலாவதியாகிவிட்டன எனக் கருதுகின்றார்கள். (நவூதுபில்லாஹ்) இதனால் இவர்கள் இதர அரசியல்வாதிகளிடமிருந்தும், அரசியல் கட்சிகளிடமிருந்தும் ஆதரவுகளைப் பெறுகின்றார்கள்.

சிலபல வேளைகளில் பெரிய கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கு இவர்கள் தங்களுக்கென எந்தக் கொள்கையும், சாதாரண கோரிக்கை இல்லாத நிராயுதபாணிகளாகக்கூட ஆகிவிடுகின்றார்கள். இறுதியில் பணம், பதவி பேசுகிறது.

ஆனால், இந்தியாவிற்கு வெளியே பல அனுபவங்கள் உண்டு. “இகாமத்துத்தீன்”, ஷஹாதத்தேஹக் : இஸ்லாத்தை நிலைநாட்டுங்கள், சத்தியத்திற்கு – உண்மைக்கு – வாய்மைக்குச் சான்று பகருங்கள் நீதியை நிலை நாட்டுங்கள் என்ற முழக்கங்களோடு இஸ்லாத்தை நிலை நாட்டிட பல இயக்கங்கள், உலகெங்கும் செயல்பட்டு வருகின்றன.

இந்த இயக்கத்தவர்கள், ‘தஃக்வா’ இறையச்சம் மிக்கவர்கள். தியாகத்தின் தடாகங்கள். இவர்கள் ஏற்றுக் கொண்ட கொள்கைகளால் மக்களால் பெருமதிப்போடு ஏற்றுக் கொள்ளப் பட்டவர்கள். எகிப்தில் இவர்கள் இஃ்ஹானுல் முஸ்லிமூன் இயக்கம்.

அல்ஜீரியாவில் – இஸ்லாமிக் டிரண்ட் இயக்கம் – Islamic Trend Movement துனிசியாவில் இஸ்லாமிக் சால்வேசன் முன்னணி – Islamic Salvation Front எனவாக விரிகின்றன.

இவர்களின் கொள்கை பலம், சேவை பலம் இவற்றால் கவரப்பட்ட மக்கள் பெரிய அளவில் இவர்களுக்கு ஆதரவு தந்தார்கள்.

இந்த ஆதரவைப் பார்த்த இவர்கள் நம்மை அதாவது இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்தவர்களை—தீவிரவாதிகள் என இஸ்லாமோ போஃப்ஸ் (Islamiophoes) பிரச்சாரம் செய்து விடுகின்றார்கள். நாம் இப்போது ஜனநாயக வழியை எடுத்தால் கூட வென்று விடலாம் என முடிவு எடுத்தார்கள். இப்படி முடிவு செய்ததில் எகிப்தின் அல் இஹ்வான் அல்முஸ்லிமூன் இயக்கமும் உண்டு. மக்களும், இவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்பவே பணியாற்றினார்கள். இவர்கள் தேர்தலில் முதலில் சுயேட்சையாக நின்று வென்றார்கள். அதனால் ஆட்சியில் முழு அதிகாரத்துடன் இருந்திட இயலவில்லை.

அடுத்து எகிப்தின் "வெல்ஃபயர்" கட்சி என்ற பெயரோடு நின்றார்கள் வென்றார்கள். ஆனால் ஒரு வருடத்தில் ஆட்சியைக் கவிழ்த்தார்கள். இராணுவ தளபதி ஒருவரை ஆட்சியில் அமர்த்தினார்கள். நம் நாட்டு வாக்கு எந்திர மோசடியைப்போல் அங்கேயும் சில தகிடுத் தத்தங்களைச் செய்து, அந்த இராணுவ அதிகாரியே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளராகக் காட்டினார்கள்.

ஜனநாயகத்தை தேர்தல் முறையை எப்படியெல்லாம் தங்கள் வசதிக்கேற்ப வளைக்கலாம், தேவையானால் ஒடிக்கலாம் என்பதையெல்லாம் காட்டினார்கள், அமெரிக்கர்களும் அவர்களுக்குப் பக்கபலமாக வந்த இஸ்லாத்தின் எதிரிகளான ஐரோப்பியர்களும்.

ஆட்சியில் அமர்த்தப்பட்ட இராணுவ அதிகாரி "சும்மா" இருக்கவில்லை. நம் நாட்டில் நடப்பதைபோல் நீதிமன்றத்தையும் தன் கைகளில் போட்டுக் கொண்டார்.

இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சார்ந்தவர்களைத் தூக்கில் போட்டார். அவர்களின் குடும்பங்களை சீரழித்தார். அவர்களிலும் சீறிப் பாய்ந்தவர்களை சிறைபிடித்தார். சித்திரவதைச் செய்தார். பின்னர் சிறைகளிலிருந்து பிணமாக அனுப்பினர். சிலரின் ஜனாசாவைத்தான் அவர்களின் குடும்பங்களிடம் ஒப்படைத்தார். பலரை சிறையிலேயே புதைத்தார். அல்லது அடக்கம் செய்தார் (அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொள்ள துஆச் செய்வோம்)

ஜனநாயகம், இஸ்லாமிய இயக்கத்தவரை ஆட்சியாளர்களாகத் தேர்ந்தெடுத்தபோது – ஜனாசாக்களாத்தான் ஆக்கியது.

அன்பார்ந்த வாசகர்களே!

அல்ஜீரியாவிலும் துனீசியாவிலும், இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டவர்கள் ஜனநாயகப் பாதையை தேர்ந்தெடுத்தபோது சந்தித்ததும், சாதித்ததும் என்ன என்பதை, இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் பார்ப்போம்!

குறிப்பு : ஆனால், இஸ்லாத்தைப் பற்றியும் முஸ்லிம்களைப் பற்றியும் அவதூறுகளைப் பரப்புவோர் இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்ப்பவர்கள் "இஸ்லாமோ போஃப்ஸ்" – சொல்வதைப்போல் நாம் ஜனநாயகத்தின் பாதையை வஞ்சகப்பாதையாக ஆக்கிக் கொள்ளவில்லை. நமது கணிப்பின்படி அந்தப் பாதை நமக்கு ஒவ்வாதது. அல்லாஹ்வுக்கே பிடிக்காதது. அங்கேயும் இவர்கள், இஸ்லாமோ போஃப்ஸ் – இஸ்லாத்தின் எதிரிகள கிஞ்சிற்றும் நேர்மையாக நடந்திடவில்லை என்பதே எகிப்து அல்ஜீரியா, துனீசியா ஆகியவற்றின் வரலாறு புகட்டும் பாடம்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்....


– ஆங்கிலம் : ஜான் பெஃபர்

– தமிழ் வடிவம் : மு. குலாம் முகமது



- எஸ்.எம். முஷ்ரிப்

பாகம்-13




# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

ஜுலை மாதஇதழின் தொடர்ச்சி...

இவ்வாறாக தீவிரவாத வழக்குகள் விசாரணை தொடர்பான தகவல்களுக்கு மத்திய உளவுத்துறையையே முழுமையாக சார்ந்திருந்தது மாநில தீவிரவாத விசாரணை முகமைகள். மத்திய உளவுத்துறை தொடர்ச்சியாக தவறான தகவல்களை தந்து கொண்டிருந்தது.

## பொய் சாட்சியங்களை உருவாக்குவது

மத்திய உளவுத்துறை, தவறான வழிகாட்டுதல்களைவழங்கியதோடு நிற்கவில்லை. மாநில வட்டார புலனாய்வுக் குழுக்களை சாட்சியங்களையும், தடயங்களையும், திரிக்கவும், திசை திருப்பவும், கட்டாயப்படுத்தியது. மத்திய உளவுத்துறை தங்கள் பக்கம் உறுதியாக நிற்கின்றது என்பதை அறிந்த மாநில புலனாய்வுக் குழுக்கள் சாட்சியங்களையும், தடயங்களையும், மத்திய உளவுத்துறையின் விருப்பத்திற்கிணங்க மாற்றினார்கள், திரித்தார்கள்.

இப்படி சாட்சியங்களையும், தடயங்களையும் திசை திருப்பி, பாமர மக்களையும், சில பல நேரங்களில் நீதிமன்றங்களையும் நம்பிட வைத்தார்கள். இதற்காக அவர்கள் மேற்கொண்ட வழிமுறைகளை இப்படிப் பட்டியலிடலாம்.

## அ) சட்டத்திற்குப் புறம்பாக காவலில் வைப்பது, பொய் வழக்குகளைப் புனைந்து கைது செய்வது, பின்னர் சித்திரவதைச் செய்து தீவிரவாத வழக்குகளில் வாக்குமூலம் வாங்குவது

எல்லா குண்டு வெடிப்பு வழக்குகளிலும் காவல்துறையினர் கடைப்பிடித்த வழிமுறை என்னவெனில், முதலில் சில முஸ்லிம்களை அடையாளப்படுத்திக் கொள்வது, குறிப்பாக படித்த முஸ்லிம்களை அடையாளப்படுத்திக் கொள்வது, இப்படி அடையாளப்படுத்தி வழக்கில் சேர்ப்பது என முடிவு செய்து கொள்வது. பின்னர் அவர்களைக் கைது செய்து, சட்டத்திற்குப் புறம்பாகக் காவலில் பல நாட்கள் வைப்பது, இப்படித்தான் உத்திரப் பிரதேச நீதிமன்ற தொடர் குண்டு வெடிப்புகளில் செய்தார்கள். அதையேதான் ஹைதராபாத், மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்புகளிலும் செய்தார்கள்.

அதேபோல் சில படித்த முஸ்லிம் இளைஞர்களை அடையாளப்படுத்திக் கொண்டு அவர்களைப் பொய்யான இட்டுக்கட்டப்பட்ட வழக்குகளைக் காட்டி கைது செய்வது, பின்னர் சித்திரவதைச் செய்து வாக்குமூலங்

களை வாங்கிக் கொண்டு குண்டு வெடிப்பு வழக்குகளில் இணைப்பது. இதுதான் மாலேகான் குண்டு வெடிப்பு 2006 வழக்கில் செய்தார்கள். இதுதான் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு 2007 இலும் நடந்தது. இதேதான் ஜெர்மன் பேக்கரி குண்டு வெடிப்பு 2010 இலும் இன்னும் சில குண்டு வெடிப்புகளிலும், நடந்தது. அதன்பின்னர் இதரசாட்சியங்களைத் தயார் செய்வார்கள். இவற்றைக் கொண்டு அவர்களை முஸ்லிம் இளைஞர்களை அடித்துத் துவைத்து வாங்கிய ஒப்பு மூலங்களை உண்மைப்படுத்துவார்கள்.

## (ஆ) தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்குப் பயணம் செய்தார்கள் – தீவிரவாத பயிற்சிக்காக என்பது புலனாய்வு செய்யும் அதிகாரிகளின் வழக்கமான கற்பனை கதைகள்

இதில் மத்திய உளவுத்துறையின் கற்பனைக்கு அளவே இல்லை. அடிக்கடி பாகிஸ்தானுக்கு முஸ்லிம் இளைஞர்கள் தீவிரவாதப் பயிற்சிகளுக்காகப் பயணம் செய்தார்கள் என கதை கட்டி விடுவார்கள்.

*1)* அவர்கள் கைது செய்த முஸ்லிம் இளைஞர்களிடம், பாஸ்போர்ட் (எ) இந்தியக் கடவுச்சீட்டு இருந்ததால், பாஸ்போர்ட்–ஐ பயன்படுத்தி பாகிஸ்தான் சென்று வந்தார்கள் எனக் கதை கட்டுவார்கள். அத்தோடு பயிற்சி காலம் முடிந்தவுடன் பாஸ்போர்ட்–ஐ கிழித் தெறிந்துவிட்டு இரகசிய வழிகளின் வழி வந்து விட்டதாகக் கூறுவார்கள். இதில் சாதுர்யமாக வாகா எல்லையைக் கடந்ததாகக் கூறுவார்கள். அல்லது துபாய் சென்று அங்கிருந்து நேப்பாளம் சென்று அங்கிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவிவிட்டார்கள் எனக் கூறுவார்கள். இந்தக் கற்பனையைத்தான் 2006 மாலேகான் குண்டு வெடிப்பில் கட்டவிழ்த்துவிட்டார்கள். மும்பை புறநகர் ரெயில் குண்டு வெடிப்பு 2006–இல் இப்படித்தான் கதைக் கட்டினார்கள்.

*2)* அவர் ஒரு பாஸ்போர்ட் உடன் ஹஜ்ஜுக்கு அல்லது உம்ராவுக்கு தெஹ்ரானுக்கு ஜியாரத்துக்குப் போய் வந்திருந்தால், இதற்கான ஆவணங்கள் இருந்தால் உளவுத் துறையின் கற்பனை இப்படிப் பறக்கும். முதலில் ஜித்தாவுக்கும், பின்னர் தெஹ்ரானுக்கும் உண்மையான இந்திய பாஸ்போர்ட்டில் தான் சென்றார். பின்னர் திருட்டுத்தனமாக பாகிஸ்தானுக்குச் சென்றார். அங்கே வயிறு நிறைய தீவிரவாதப் பயிற்சியை எடுத்தார். இந்திய பாஸ்போர்ட்–ஐ தடந்தெரியாமலாக்கினார். பின்னர் இந்தியாவுக்குள் போலி பாகிஸ்தான் பாஸ்போர்ட்டில் வந்தார். அதுவும் நேப்பாள் வழியாகத்தான் வந்தார். இந்தக் கதையைத்தான் மும்பை புறநகர் ரெயில் குண்டு வெடிப்பில் கட்டிவிட்டார்கள்.

*3)* அவரிடத்தில் இந்திய பாஸ்போர்ட் இல்லை என்பதால் அவர் திருட்டுத்தனமாக வங்காளதேஷ்க்குள் நுழைந்தார். அங்கிருந்து அவர் பாகிஸ்தானுக்குள் நுழைந்தார். அங்கு தீவிரவாத பயிற்சிகள் அனைத்தையும் முடித்தார். பின்னர் அங்கிருந்து பாகிஸ்தான் பாஸ்போர்ட் ஒன்றைப் பயன்படுத்தி நேப்பாள் வந்தார். பின்னர், நேப்பாளிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்தார். இப்படித்தான் IB என்ற மத்தியப் புலனாய்வுத் துறை கதைக் கட்டும். மும்பைப் புறநகர் ரெயில் குண்டு வெடிப்பு 2006, டெல்லி குண்டு வெடிப்பு 2008 ஆகிய வற்றில் இதுதான் கதை.

சுருக்கமாகச் சொன்னால் 'காவல்துறையும், 'IB' என்ற மத்திய உளவுத் துறையும், யாரையும் (கற்பனையில்) பாகிஸ்தானுக்கு அனுப்பிவிடுவார்கள். அவர்களுக்குத் தீவிரவாதப் பயிற்சிகளை வழங்கி விடுவார்கள்.

## இ) எதிர் தாக்குதல் என்ற பெயரில் படுகொலைகள். இவற்றின் வழி புலன் (விசாரணையில்) விடுபட்ட பகுதிகளை இணைத்து விடுவார்கள்

மேலே நாம் குறிப்பிட்ட கற்பனைகளுக்குப் பிறகும் புலன் விசாரணையில் சில விடுபட்ட பகுதிகள் இருந்தால் அப்பாவி முஸ்லிம் இளைஞர்களைக் கொன்று குவித்துவிட்டு அவர்கள் மீது தீவிரவாத முத்திரையைக் குத்தி விடுவார்கள்.

இப்படிக் கொலை செய்வதற்கு முன்னால் காவல்துறையினர் ஒரு டைரியை அவர்களின் கைகளில் தந்து, அவர்களின் கை களாலேயே அந்த டைரியில், தங்களுக்கு வேண்டியவற்றை எழுதச் சொல்லி விடுவார்கள். இப்படி எழுதுபவை, அவர்கள் புலனாய்வில் இருக்கும் ஓட்டைகளை அடைப்பதாக இருக்கும். இதில் காவல்துறையினர் இன்னும் யார் யாரெல்லாம், அந்த வழக்கில் இணைத்துக் கொலை செய்திட விரும்புகின்றார்களோ அவர்களின் பெயர் களையும் இணைத்து எழுதச்சொல்லி விடுவார்கள். அதேபோல் அவர்களுக்கு வழிகாட்டியவர்களாகவும் சிலரை இணைத்து விடுவார்கள்.



இன்னும் தேவைப்பட்டால் யார்? யார் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தார்கள், எந்தெந்த இடங்களில் பயிற்சி எடுத்தார்கள் என்பவையும் இதில் இடம் பெற்றுவிடும். அதேபோல் அவர்களிடம் ஓர் பெரிய எதிர் காலத் திட்டமிருந்தாகவும் எழுதச் சொல்லி விடுவார்கள். இவையெல்லாம் புலனாய்வுச் செய்வோரின் கற்பனைகள், ஆனால் எழுதுவது மட்டும் அந்த அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள். பின்னர் அந்த அப்பாவிகளைக் கொலை செய்து விடுவார்கள்.

தேவைப்பட்டால் தங்கள் வழக்கில் இணைக்க விரும்பும் சிலருடன் தொலைபேசி யில் பேசவும் வைத்துவிடுவார்கள். அவர்கள் போலி எதிர்தாக்குதல் என்றபெயரில் கொலை செய்யப்பட்டவுடன் இவற்றையெல்லாம் மிகப்பெரிய கண்டுபிடிப்புகளாகக் காட்டி ஊடகங்களில் மீதமுள்ள கற்பனையைத் தாண்டவமாட விடுவார்கள்.

கொலை செய்தபின் அந்த பிணத்தின் மேலும் தேவையானவற்றைப் போட்டு கட்டுக் கதைகளைக் கட்டவிழ்த்துவிடுவார்கள். இவை காவல்துறையினர், புலனாய்வுத் துறையினர் நிரந்தரமாகக் கடைபிடிக்கும் ஓர் வழிமுறை யாகும்.

'IB' என்ற மத்திய உளவுத்துறையின் வழிகாட்டுதல்களின் கீழ், இந்தப் படுகொலை பாதையை காவல்துறையினர் அநேக பொய் வழக்குகளில் பின்பற்றி இருக்கின்றார்கள். மும்பை ரெயில் குண்டு வெடிப்பு 2006, சன்கத் மோச்சா குண்டு வெடிப்பு 2007, ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பு 2008, அஹமதா பாத் – சூரத் குண்டு வெடிப்பு 2008, டெல்லி குண்டு வெடிப்பு வழக்கு – 2008, பெங்களூர் தொடர் குண்டு வெடிப்புகள் – 2009, இதில் நான்கு பேர்கள் ஒரே நேரத்தில் (போலி) என்கவுண்டர் என்ற பெயரில் சுட்டுக் கொல் லப்பட்டார்கள். இந்தியாவில் இப்படி நடந்த வற்றில் சிலவற்றைத்தான் மேலே பட்டிய லிட்டிருக்கின்றோம்.

## முஸ்லிம்களை வேண்டுமென்றே குற்றவாளிகளாகக் காட்டிய வழக்குகள்

'IB' என்ற மத்திய உளவுத்துறையின் வழி காட்டுதல்களின் கீழ், அவர்களின் எடுபிடி களான – தீவிரவாத தடுப்புப் படை சிறப்பு புலனாய்வு படை (SIF) சிறப்புப் பிரிவு போன் றவை எண்ணற்ற அப்பாவி முஸ்லிம் இளை ஞர்களை குண்டுவெடிப்பு வழக்குகளில் இணைத்தனர். இந்த வழக்குகளைப் பட்டியல் போட்டால் தாழாது. அவற்றில் முக்கியமான வற்றை இங்கே தருகின்றோம்.

1) அக்ஷர்தம், கோயில் (குஜராத்) குண்டு வெடிப்பு – 2002

2) மும்பை (முலந்த் – வைல் பார்லி மத்திய மும்பை) குண்டு வெடிப்பு – 2003

3) சிறப்பு காவல்துறை அலுவலகம் முன் (ஹைதராபாத்) நடந்த தற்கொலை தாக்குதல் – 2005

4) கால்பூர் (அஹமதாபாத், குஜராத்) குண்டு வெடிப்பு – 2006

5) மும்பை ரெயில்வண்டி குண்டு வெடிப்பு – 2006

6) மாலேகான் (மஹாராஷ்டிரா) குண்டு வெடிப்பு – 2006

7) சங்கத்மோச்சான்: வாரனாசி: உ.பி. குண்டு வெடிப்பு – 2006

8) ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருட்கள் (மகாராஷ்ட்ரா, அவ்ரங்காபத்) பிடிபட்ட வழக்கு 2006.

9) சம்சவ்தா எக்ஸ்பிரஸ் ரெயில் குண்டு வெடிப்பு (ஹரியானா) 2007

10) மக்கா மஸ்ஜிது; (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு வழக்கு – 2007

11) அஜ்மீர் ஷெரீஃப் (இராஜஸ்தான்) குண்டு வெடிப்பு – 2007

12) உத்திரப்பிரதேச நீதிமன்ற தொடர் குண்டு வெடிப்பு – 2007

13) லும்பினி பூங்கா குண்டு வெடிப்பு (ஹைதராபாத்) 2007

14) மாலேகான் (மகாராஷ்டிரா) குண்டு வெடிப்பு – 2008

15) அஹமதாபாத் (குஜராத்) குண்டு வெடிப்பு – 2008

16) சூரத் (குஜராத்) குண்டு வைத்த வழக்கு – 2008

17) டெல்லி குண்டு வெடிப்பு – 2008

18) பாட்லா ஹவுஸ் என்கவுண்டர் – 2008

19) சதித் திட்டம் தீட்டுதல், மின்னஞ்சல் அனுப்புதல் (மும்பை) 2008

20) பெங்களூர் (கர்நாடகா) நீதிமன்ற குண்டு வெடிப்பு 2008

21) பெங்களூர் (கர்நாடகா) தொடர் குண்டு வெடிப்பு – 2008

22) கோகுல் சேட் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு 2008

23) ஜெய்ப்பூர்(இராஜஸ்தான்) தொடர் குண்டு வெடிப்பு – 2008

24) ஜெர்மன் பேக்கரி (பூனா, மஹாராஷ்டிரா) குண்டு வெடிப்பு – 2010

25) சின்னசாமி விளையாட்டு அரங்கம், பெங்களூர் (கர்நாடகா) குண்டு வெடிப்பு – 2010

26) ஜவாரி பஸார் மும்பை குண்டு வெடிப்பு 2011

27) ஜன்காலி மஹாராஜ் ரோடு (பூனா) தொடர் குண்டு வெடிப்பு – 2012

28) தில்சுக் நகர் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு – 2013


இன்னும் பல....

29) புத்த கயா (பீகார்) குண்டு வெடிப்பு 2013.

இதேபோல் இன்னும் பல...

**இவற்றுள் மாலேகான் (மகாராஷ்டிரா) குண்டு வெடிப்பு 2006, (வரிசை எண்.–6) சம்சவ்தா எக்ஸ்பிரஸ் (ஹரியானா) 2007, குண்டு வெடிப்பு (வரிசை எண்.9) அஜ்மீர் ஷெரீஃப் (இராஜஸ்தான்) குண்டு வெடிப்பு வழக்கு 2007. (வரிசை எண்.–11) ஆகியவற்றைப் பொறுத்த வரை இரண்டாவது புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு, கைது செய்யப்பட்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் விடுதலை செய்யப்பட்டு, ஆர். எஸ்.எஸ்., அபிநவ் பாரத், இன்னுமுள்ள பிராமிணிஸ்ட் கும்பல்களைச் சார்ந்தோர் கைது செய்யப்பட்டனர்.**

– இன்ஷா அல்லாஹ் தொடரும்.



# கிருஸ்தவத்தில் பெண்களின் நிலை..!

வைகறை வெளிச்சம்

புனித ஜான் கிரைசோஸ்டம் St. Joh Chrysostum : என்பவர் பெண்களை, தேவையான தீமை. மக்கள் பேரழிவு எனத் தெரிந்திடாமல் மக்கள் அவர்களை விரும்புவார்கள். மரணத்தை மடியில் சுமக்கும் காவலர்கள். பெண்கள் அழகாக வடிவமைக்கப்பட்ட நோய் என வருணித்துள்ளார்.

புனித கிரிகோரி என்பவர் (இவர் நாசியாரிசம் என்ற இடத்தைச் சார்ந்தவர்) அவர் கூறுகின்றார் :

''காண்டாமிருகம், தந்திரங்கள் நிறைந்த நச்சுப் பாம்பு, இவையெல்லாம் ஒன்றாய் இணைந்த ஜென்மம்தான் பெண்கள்.''

அலெஸ்ஸாண்டிரிய்யாவைச் சார்ந்த புனித கிளிமெண்ட் இப்படிக் கூறுகின்றார் :

''மனிதர்களில் ஆண்கள் அறிவும், ஆற்றலும் மிக்கவர்கள். ஆனால், பெண்கள் எதுவுமில்லாதவர்கள். அவர்கள் எத்தனை கீழான இயல்பை உடையவர்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே வெட்கமாக இருக்கின்றது.''

கிருஸ்தவத்தை வளர்த்தவர்கள் தொடக்க நாள்களில் தேவாலயங்களைக்கட்டி எழுப்பியவர்கள் (Builders of Christian Church) என அழைப்பது வழக்கம். அத்தகையவர்கள் தாம், நாம் மேலே குறிப்பிட்டவர்கள். இவர்கள் தங்களுக்குள் போட்டிப் போட்டுக்கொண்டு பெண்களை இழித்தும், இடித்தும் கூறுகின்றார்கள்.

பெண்ணை ஷைத்தானின் உறுப்பு என்றும், பிரதிநிதி என்றும் கூறுகின்றார்கள். ஷைத்தானின் கைகளையே உருவாக்கிய அடிப்படையே அவள் தான் என்றார்கள். அவளது குரல், படமெடுத்துக் கொத்த வரும் பாம்பின் குரலை ஒத்தது. அத்தனை விஷயங்களையும் ஒன்றாய்க் கொண்ட தேள், அவள் எப்போதும் கொத்தவும் குதறவும் தயாராக இருப்பாள். அவள், ஷைத்தான் நம் ஆத்மாக்களை கைப்பற்றிட பயன்படுத்திடும் பேராயுதம்.

பெண்கள் : 'ஷைத்தானின் வாயில் "Gate of the Devil" அசுத்தம்'

பொய் – பிரம்மை இவற்றின் மகள்.

நரகத்தின், காவற்படைகள்.

அமைதி – சாந்தம், ஆகியவற்றின் எதிரி.

வனவிலங்குகளில் மிகவும் ஆபத்தான

வனவிலங்குகளைவிட ஆபத்தானவர்கள்.

இவையெல்லாம் புனித பெரனால்டு (St. Bernard) புனித அந்தோணி (St. Anthony), புனித போன்வென்சூர் (St. Bonventure), புனித சைப்பிரியன் (St. Cyprian), புனித ஜேரோமி (St. Jerome), புனித ஜான் டெமாஸ்னி (St. John Dayas'cene) ஆகியோரின் கருத்துக்களாகும்.

பழைமைவாத கிரேக்க கிருஸ்தவர்கள் பெண்களுக்கு ஆன்மா என்றொன்றில்லை என்ற நம்பிக்கையில் மிகவும் அழுத்தமாக இருந்தார்கள்.

மேக்கொன் (Macon) என்ற கிருஸ்தவ திருச் சபையில் ஒரு பிஷப், பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்களல்ல என்று கோபாவேசத்தில் குறிப்பிட்டார். (ஆதாரம் : Westernmark, Page-663)

பெண்களை 'அசுத்தம்' என்ற பெயரைக் கொண்டே அழைக்கின்றார்கள். அவர்கள் அசுத்தமானவர்கள் என்பதால் தேவாலயங்களில் அவர்களின் திருமணங்களுக்குக்கூட இடம் தந்திடவில்லை. இந்தத் திருமணங்கள் தாம், மனித இனத்தின் இருப்பிற்கும் பெருக்கத்திற்கும் வகை செய்யும் புனித நிறுவனம்.

புனித கிரிகோரி என்ற பாதிரியார் கூறுகின்றார் :

திருமணம் செய்து கொள்ளாமலிருப்பவர்கள் தாம் ஆசீர்வதிக்கப் பெற்றவர்கள். இவர்கள்தாம் தெய்வீக தன்மையை மாறுபடாமல் காப்பாற்று பவர்கள்.

பெண்களை இப்படியெல்லாம் சித்தரித்து அவர்களை அத்தனை விதமான கெடுபிடிகளுக் கும், ஆளாக்கினார்கள். இதனை எதிர்த்துப் பலர் போராடினார்கள். இதில் குறிப்பிடத்தக்கவர் களில் ஒருவர், லெக்கி என்பவராவார். (Willam Edward Haripole Lecky) இவர் எழுதிய 'ஐரோப் பாவின் ஒழுக்க விதிகளின் வரலாறு' பெண்களின் நிலை குறித்து விவரித்தார்.

அவருடைய இந்த நூல், பெண்களுக்கு நடந்த ஒடுக்க முறைகளுக்கு எதிரான கருத்துகள் உருவாகிட வழி வகுத்தது. மத்திய காலகட்டத் தில் ஐரோப்பாவில் கிருஸ்தவ உலகில் பெண்கள் நடத்தப்பட்ட விதத்தை வைத்துக்கொண்டு மத் தியக் காலகட்ட ஐரோப்பாவை ஐரோப்பாவின் இருண்டகாலம் "DarkAges" என அழைத்தார்கள்.

''லெக்கி'' தன்னுடைய ''ஐரோப்பாவின் ஒழுக்க விதிகளின் வரலாறு'' என்ற நூலில் இப்படிக் கூறுகின்றார் :

"ஐரோப்பாவின் மத்தியக் காலகட்ட எழுத் தாளர்கள் எல்லோரும் அங்கே இருந்த கன்னி யாஸ்திரிகள் இல்லங்களைப் பற்றி நிரம்பவே எழுதினார்கள். அவையெல்லாம் கூடா ஒழுக்கத் தின் விடுதிகளைப்போல் காட்சி தந்தன. அங்கே கருவிலேயே சிசுக்களை கொலை செய்யும் நிலை தாராளமாகச் நிலவியது. தாண்டவமாடிய சிசுக்கொலைகள், கிருஸ்தவ விடுதிகளில் பொறுப்பாளர்களாக இருந்தவர்களை, பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்திட வேண்டிய நிலைக் கத் தள்ளியது. இந்தக் கட்டுப்பாடுகளை, தினம், தினம், பிரகடனப்படுத்திட வேண்டிய நிலைக்கு ஆளானார்கள் விடுதிகளின் காப்பாளர்கள். ஒரு கட்டத்தில் பாதிரிகள், தங்கள் தாய்மார்களோ டும், சகோதரிகளுடனும் தங்கிடக்கூடாது என ஆண்டுகளுக்கு விதிகளைப் பிரகடனப்படுத் திடும் அளவுக் குச் சென்றது."

வரலாற்று ஆய்வாளர் லெக்கி அவர்கள் மத்திய காலகட்டத்தில் பெண்கள் எப்படி நடத் தப்பட்டார்கள் என்பதை வரையிட்டுக் காட்டி னார். வரிசைப்படுத்தினார் என்பது உண்மை. ஆனால், பெண்கள் அப்படி நடத்தப்படுவதற்குக் காரணமாக அமைந்த தத்துவங்களையும், சித்தாந் தங்களையும், அவர்கள் கண்டுகொள்ளவு மில்லை, கடிந்து பேசிடவுமில்லை.

பிரம்மச்சர்யத்தையும், துறவறத்தையும் அளவுக்கதிகமாக வலியுறுத்தினால் லெக்கி விளக்கிய விபச்சாரமும், இன்னெரன்ன காமக் களியாட்டங்களும் அந்தரங்கங்களில் அளவின்றி நடக்கும்.

பின்னர் இதன் பின்விளைவு என்ன ஆயிற்று. திருமணங்களைதுறவிகளுக்கும், புனிதர்கள்எனப் போற்றப்பெற்றவர்களுக்கும் அனுமதித்திட வேண் டிய காட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

காலப் போக்கில் நிலைமை இன்னும் மேச மானது. ஆகவே வைப்பாட்டிகளை வைத்துக் கொள்ளவும் அனுமதிக்க வேண்டியதாயிற்று.

இதனை ஜோசப் மிக்காபி என்ற ஆய்வாளர் கிருஸ்தவத்தின் சமூக பட்டோலைகள் (Social Record of Christianity) என்ற நூலில் இப்படிக்

கூறுகின்றார் :

“அழிவின் விளிம்பில் கிறிஸ்தவம்’ நின்ற போது, அதனைக் காப்பாற்றிட வைப்பாட்டி களை வைத்துக் கொள்ளலாம் என அறிவித்தது. காரணம் அப்போது மட்டுமே குடும்ப அமைப்பு களைக் கொண்டவர்களைக் காப்பாற்றிட முடியும்.

இங்கே ஒரு வினா எழுகின்றது. நீங்கள் கன்னியாஸ்திரி மடங்களை தொடங்கியதால் விளைந்த பயன் என்ன? கன்னியாஸ்திரி மடங்கள் பெண்களை கிறிஸ்தவம் சொல்லும் தத்துவங் களிலிருந்து காப்பாற்றி பாதுகாக்கும் மடங்களா? ஏனெனில் உங்கள் கொள்கைகளின் படி பெண்கள் தீமையின் பிறப்பிடம், அழிவின் அகண்ட வாயில் – ஆதலால் தீண்டத் தகாதவர்கள். ஆனால், அந் தரத்தில் அவளுடைய மோகமும், சுகமும் வேண்டும். இதற்கும் அந்த மடங்கள் பயன்பட் டனவா? அடிப்படை கொள்கையில் தீண்டத்தகா தவர்கள், நடைமுறையில் தீராத சுகம் தருபவர் கள் என்ற முரண்பாட்டை எங்கிருந்து கற்றீர்கள்.?

யதார்த்த வாழ்க்கையில், திருமணங்களை அனுமதிப்பதும், பெண்களை ஆண்களுக்கு நிகராக மதிப்பதுமே பயன்படும்.

உண்மையில் கன்னியாஸ்திரிகளும், கன்னி யாஸ்திரி மடங்களும் (இன்று) மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றார்கள். மதிக்கப்படு கின்றன. ஆனால், இந்த கண்ணியத்தைப் பெறுவதற்கு அவர்கள் ஒருபெரும் தியாகத்தைச் செய்திட வேண்டியேயிருந்தது.

1) அவர்கள் தங்கள் பெண்மையை துறந்திட வேண்டியதிருந்தது.

2) குடும்ப வாழ்வின் குதூகலத்தை தாரை வார்த்திட வேண்டியதாயிற்று.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

(Source : – நஸ்கத் அல்சா, The Position of Women in Islam, Page 15-16)

தமிழ் வடிவம் – மு. குலாம் முஹம்மத்,
இன்ஷா அல்லாஹ் தொடரும்.

# அரசுக்கு தேவைப்படும் போது மட்டும் தீவிரவாதிகள் தோன்றுவார்கள்

## முன்னாள் IPS அதிகாரி

முன்னாள் IPS அதிகாரியாக இருந்த அஸ்தானா என்ற கேரளத்தை சேர்ந்த அதிகாரி, இரண்டு அல்குவைதா தீவிரவாதிகள் உத்திரபிரதேசத்தில் தேர்தல் நடக்கும் சூழலில் கைது செய்யப்பட்டது குறித்து தனது கருத்தை டிவிட்டரில் தெரிவித்திருந்தார். இது பெரும் பரப்பரப்பை உருவாக்கியிருக்கிறது.



அஸ்தானா IPS

‘அல்குவைதா, ISIS, PLO என உலகில் இருந்து தீவிரவாத இயக்கங்கள் முழுமையாக அழிக்கப்பட்டாலும் அவர்களது பிரிவுகள் மட்டும் இந்தியாவில் தொடர்ச்சியாக காவல்துறையால் கண்டுபிடிக் கப்படுகிறார்கள். அவர்கள் இவர்களுக்கு தேவைப்படும் போது மக்கள் முன்னாள் நிறுத்தப்படுகிறார்கள். இப்படி நீங்கள் சொல்லும் ஒரே பொய் உங்களுக்கு சலிப்பை தரவில்லையா?.. ஏதாவது புதுகதையை சொல்லுங்கள்!’ என்று டிவிட்டரில் எழுதியிருக்கிறார்

இந்தியாவில் முஸ்லிம்கள் தொடர்ச்சியாக தீவிரவாத வழக்கின் கீழ் கைது செய்யப்படுவதும் அதன் பிறகு பல வருடங்களுக்கு பிறகு விடுவிக்கப்படுவதும் தொடர்கதை ஆகியிருக்கிறது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 5 வருடத்திற்கு பிறகும், 9 வருடத்திற்கு பிறகும், 12 வருடத்திற்கு பிறகும் அப்பாவிகள் என்று மூவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

– அபூ சித்திக்.



# ஐரோப்பாவில் குளித்தால் தெய்வக் குற்றம்

ஐரோப்பியர்கள் கடும் நாற்றம் மிகுந்தவர்கள். எந்தளவுக்கு என்றால் ரஷ்ய மன்னர் சீஸரின் தூதர்கள் பிரெஞ்சு மன்னர் *14* ஆவது லூயியை இவ்வாறு வர்ணித்தார்களாம் 'மிருகத்தின் மீது வீசக்கூடிய நாற்றத்தை விட படுமோசமான துர்வாடை உடையவராக இருந்தார்'.

அவரது துர் வடையை தாங்க முடியாமல் அவரது பணிப் பெண்களில் ஒருத்தி நறுமணம் நிறைந்த ஒரு தொட்டியை ஏற்படுத்தி அதற்குள் மூழ்கியே இருந்து இருக்கின்றாள் .

பிரபல (சுற்றுலா பயணி) அஹமது இப்னு ஃபல்ழான் கூறினார்:

'நிச்சயமாக ஐரோப்பியர்கள் உலகத்தில் வாழும் மோசமான படைப்புகள். சிறுநீர் போனாலும் மலம் கழித்தாலும் தங்களை சுத்தம் செய்து கொள்ளமாட்டார்கள். மன்னர் பீட்டர் அரண்மனை சுவற்றில் மக்களுக்கு முன்பே சிறுநீர் கழிப்பார்'.

ஸ்பெயினில் முஸ்லிம்களை கொன்று குவித்த அரசி முதலாம் எஸபெல்லா அவளது வாழ்கையிலேயே இரு முறைதான் குளித்து இருக்கின்றாள். ஸ்பெயினில் உள்ள அனைத்து குளியலறையையும் அவளால் இடிக்கப்பட்டு இருக்கிறது.

மன்னர் இரண்டாம் ஃபிலிப் தனது நாட்டில் குளியலறையை பயன்படுத்துவதை மொத்தமாக தடைச் செய்தார். அவரது மகள் இளவரசி இரண்டாம் எஸபெல்லா தனது உள்ளாடையை கழற்றவே மாட்டேன் என்று சத்தியம் செய்து இருக்கிறாள். எதுவரையென்றால் அவர்களது ஆளுகைக்குள் உள்ள நகரங்கள் முற்றுகையிடப் படும் வரை.

அந்த முற்றுகையானது மூன்று வருடம் தொடர்ந்தது. பின்பு அவளது நாற்றத்தை அவளால் தாங்க இயலாமலேயே இறந்து போனாள். இதுபோன்ற சுகாதாரமற்ற சூழலே அவர்களுக்குள் பெரும் பெரும் உயிர்க்கொல்லி நோய்கள் பரவ காரணமாயின.

பிரபல பிரான்ஸ் எழுத்தாளர் டிராப்பர் கூறுகிறார்:

நாங்கள் ஐரோப்பியர்கள். எங்களது பொது வாழ்வு நலமான வாழ்வாக மாறியதற்கு நாங்கள் இன்றும் முஸ்லிம்களுக்கு கடன் பட்டுள்ளோம்.

உடலை எவ்வாறு சுத்தமாக வைத்துக் கொள்வது என்பதை அவர்கள் தான் எங்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள். முஸ்லிம்கள் ஐரோப்பியர்களான எங்களுக்கு நேரெதிர். நாங்கள் அணிந்துள்ள ஆடை முழுமையாக கறைப் படிந்து துர்நாற்றம் வீச ஆரம்பித்தற்கு பிறகு தான் வேறு ஆடையை மாற்றுவோம். ஆனால் அவர்களோ துணியை துவைத்து தூய்மைப்படுத்தி இன்னும் வைரம்வைடூரியகற்களால்அதனைஅழகுபடுத்தி பிறகு அணிவார்கள்.

ஆடைகளை துவைத்து அணிவதையே அவர்களிடமிருந்து தான் நாங்கள் கற்றுக் கொண்டோம். ஸ்பெயினில்*300*க்கும் அதிகமான குளியலறை இருந்த நிலையில் ஐரோப்பாவில் குளிப்பதே தெய்வக் குற்றமாக இருந்தது.

அஹ்மத் இப்னு ஃபல்ழான் இன்னும் ஒரு ஆச்சரியமான சம்பவத்தை பதிவு செய்கிறார். Bathroomக்கு பாத் ரூம் என்ற பெயர் வந்ததற்கு காரணமே ஓர் இந்திய வாழ் முஸ்லிம்தான். முஹம்மத் பாத் அல்ஹிந்தி என்பது அவர் பெயர். இவர் தான் முதன் முதலில் ஐரோப்பியர்களுக்கு குளியலறையை அறிமுகப்படுத்தி சுத்தமாக இருப்பதன் அவசியத்தையும் கற்றுக் கொடுத்தாராம்.

*இதற்காக இவரை சங்கைப்படுத்துவதற்காக இவரது பெயரான பாத் என்பதிலிருந்து தான் Bathroom என்ற பெயரை வைத்தார்களாம்.

–பிரபல எழுத்தாளர் ஷாந்தோர் மோரோய் நாட்குறிப்பிலிருந்து

– தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

# பெண்களை வதைக்கும் மனச்சோர்வு



டாக்டர் **பூர்ண சந்திரிகா**
மனநல மருத்துவர், இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) அரசு மனநல காப்பகம்

முதுமையில் வாட்டும் மனநோய்கள் பலவும் இப்போது 50 வயதிலேயே ஆரம்பமாகி விடுகின்றன. முக்கியமாக மனச்சோர்வு, மனப் பதற்றம், மனக்குழப்பம் மற்றும் மறதி நோய் போன்றவை அதிகமாகி வருகின்றன. இவற்றில் மனச்சோர்வுதான், பெண்களை அதிகம் பாதிக்கும் பிரச்னையாக இருக்கிறது.

இன்றைய வாழ்க்கைமுறை பெண்களுக்கு மிகுந்த மனச்சோர்வு தருவதாக இருக்கிறது. தனிக் குடித்தன வாழ்க்கை முறையில் பெண் களுக்கு சுமைகள் அதிகமாகிவிட்டன. இல்லத் தரசியாக இருக்கும் பெண்களுக்கு கணவரும் குழந்தைகளும் கிளம்பிப்போன பிறகு முழுக்க தனிமை வாட்டுகிறது. வேலைக்குப் போகும் பெண்களுக்கு இரு மடங்கு வேலை பெரும் சுமை தருகிறது. இதெல்லாம் மனச்சோர்வை வரவழைக்கின்றன.

பெரும்பாலான பெண்கள் தங்கள் வாழ்நாளில் பெரும்பகுதி நேரத்தில் தங்களைப் பற்றி யோசிப்பதில்லை. குடும்பம், பிள்ளைகள் என்று மற்றவர்களுக்காகவே வாழ்வார்கள்.

ஆனால், பிள்ளைகள் வளர்ந்து குடும்ப உறுப்பினர்களுடன் பேசி முடிவெடுக்கும் நிலைக்கு வரும்போது, 'அம்மாவுக்கு என்ன தெரியும்' என்று அவரைக் கலந்தாலோசிப்பது இல்லை. இதனால் பெண்கள், மனச்சோர்வுக்கு ஆளாகின்றனர். ஒருகட்டத்தில் பிள்ளைகளுக்குக் குடும்பம் என்று ஆகி பிரிந்து சென்ற பின்பு, தனிமை உணர்வு ஆக்கிரமிக்கிறது. பறவைக் குஞ்சுகள் பறந்து சென்ற பிறகு இருக்கும் வெற்று கூடுபோல மனம் ஆகிறது. இதனால் அவர்கள் மனச்சோர்வு அடைகிறார்கள்.

தனியாக இருப்பவர்கள், திருமணம் செய்து கொள்ளதாவர்கள், கணவனை இழந்தவர்கள், குடும்பத்தினர் அரவணைப்பு இல்லாமல் இருப்பவர்கள் ஆகியோருக்கு இந்த பாதிப்பு வரக்கூடும். மிக நெருங்கியவர்களின் மரணமும் மனச்சோர்வுக்குக் காரணமாக அமைகிறது.

பிறரைச் சார்ந்தே இருக்கும் சுபாவம் கொண்ட பெண்கள், திடீரென்று ஒருநாள் தனித்து விடப்பட்டால் மனச்சோர்வுக்கு ஆளாகின்றனர். அவர்களுக்கு உள்ள வேறுசில நோய்களினாலும், அதற்காக எடுத்துக்கொள்ளும் மாத்திரைகளாலும் மனச்சோர்வு ஏற்படலாம்.

மற்ற நோய்களைப் போல இல்லாமல், மனச் சோர்வின் அறிகுறிகள் பலவகையாக இருக்கும். எதையும் முழு கவனம் செலுத்தி செய்ய முடியா தது. ஞாபக மறதி, தொடர்ந்து சோகமாக இருப்பது, 'நான் எதற்குமே லாயக்கு இல்லை' என்பது போன்ற தகுதியற்ற உணர்வு. நம்பிக்கை யின்மை, 'எல்லாம் கெட்டது' என்று நினைக்கும் மனப்பான்மை, பொழுது போக்கில் நாட்ட மில்லாமல் போவது, தூக்கமின்மையால் அதிகாலையில் எழுந்து விடுவது, பசி குறைதல், எடை குறைதல், அதிக களைப்பு, தற்கொலை பற்றிய எண்ணம், தற்கொலைக்கு முயற்சி செய்வது, மனப்பதற்றம், கவனமின்மை,

எதிலும் முடிவு எடுக்க முடியாத நிலை மற்றும் சிகிச்சைக்குப் பயனளிக்காத உடல் உபாதைகள். (உதாரணம் : தலைவலி, வயிற்றுக் கோளாறு, உடல் வலி).

இந்தியாவில் தற்கொலை செய்து கொள் வோரில் ஐந்தில் ஒருவர், 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர். இதற்கு மனச்சோர்வு மற்றும் அழுத்தம் தரக்கூடிய வாழ்க்கை நிகழ்வுகள் என்று பல காரணங்கள் கூறப்படுகின்றன. நகர்ப் புறங்களைவிட கிராமங்களில்தான் அதிகம் பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். குடும்பத் தில் யாராவது தற்கொலை செய்து கொள்வது, முன்னரே தற்கொலைக்கு முயன்றது, தற்கொலை பற்றி அதிகம் பேசுவது போன்ற இயல்புகள் கொண்டவர்களே அதிகம் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

எதிர்காலத்தில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆகவே முதியவர்களின் தற்கொலை களும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. அதுமட்டு மின்றி, முதியோர்கள் பொது மருத்துவர்களைத் தான் முதலில் ஆலோசனைக்காக அணுகு வார்கள். எனவே, முதியோர்கள் தங்களுடைய மனவேதனையைக் கூறும்போது, அவர்களின் தற்கொலை எண்ணங்களை அறிய பொது மருத்துவர்களுக்கு மேலும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

'மனச்சோர்வுக்காக சிகிச்சைக்குச் சென்றால் நம்மை மன நோயாளியாக நினைப்பார்கள்' என பயந்து கொண்டு நிறைய பேர் சிகிச்சைக்குச் செல்வதில்லை. இன்னும் பலருக்கு, தங்களுக்கு மனச்சோர்வு நோய் இருக்கிறது என்பதே தெரிவதில்லை. பெரும்பாலும் உறவினர்களே இவர்களை மருத்துவரிடம் அழைத்து வருகிறார் கள். இந்த நோயைக் கண்டறிய முதலில் உடலை முழுமையாகப் பரிசோதனை செய்ய வேண்டும். உடல் சார்ந்த நோய்கள் இருந்தால்,. அவற்றுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும்.

மனச்சோர்வை நிக்க தற்போது பல மருந் துகள் வந்துள்ளன. இவற்றைத் தொடர்ந்து சாப் பிட்டால் நல்ல பயன் கிடைக்கும். மருந்து பயனளிக்காத நோயாளிக்கு மின் சிகிச்சை மூலம் தீர்வு தர முடியும். எளிதான இந்த சிகிக்சையில் தீய விளைவுகள் ஏதுமில்லை. உடனேயே பலன் கிடைக்கும்.

பேச்சுப் பயிற்சி சிகிச்சை மற்றும் உளவியல் நிபுணர்களின் ஆலோசனை, மனச்சோர்வுக்கு நல்ல பயன் அளிக்கும். இத்துடன் அவர்கள் வாழ்க்கை முறையிலும் சில மாற்றங்களைத் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும்.

உதாரணம் : தினசரி சிறிது தூரம் நடப்பது, யோகா பயிற்சி செய்வது, நண்பர்களிடம் பேசுவது, மனச்சோர்வு இருந்தாலும் பிடித்தமான ஒரு செயலைத் தொடர்ந்து செய்வது மற்றும் செல்லப் பிராணிகள் வளர்ப்பது போன்றவை.

சிந்தனைகளை மாற்றி அமைக்கும் சிகிச்சை (Cognitive behavior therapy) யும் பலன்தரும். சிலர் 'வாழ்க்கையே முடிந்து போய்விட்டது. நமக்கு என்று யாருமே இல்லை' என்ற எண்ணத் தில் இருப்பார்கள். இந்த சிந்தனையை மாற்றி, 'உங்கள் மீது அக்கறை காட்டும் பலர் இருக்கின் றனர்' என்று புரிய வைக்க இந்த சிகிச்சை உதவும்.

ஆரம்ப அறிகுறிகளை உணர்ந்ததுமே சிகிச் சைக்குச் சென்றால், இது எளிதாக குணப்படுத் தக்கூடிய பிரச்னைதான்.

## வயதை தம்பாதீர்கள்

யாரிடமாவது வயதைக் கேட்டால் ஏதாவது ஒரு நம்பரைச் சொல்வார்கள். அதுமட்டுமே வயது அல்ல! எண்களால் அறியப்படும் வயது. உடல் ரீதியான வயது, மன ரீதியான வயது என எல்லோருக்கும் மூன்று வகை வயது உண்டு. எண்களால் அறியப்படும் வயதை, பிறந்த தேதி தீர்மானிக்கிறது. உடல் ரீதியான வயதை ஆரோக் கியம் தீர்மானிக்கிறது. மன ரீதியான வயதை ஒருவர் தன்னை எப்படி உணர்கிறார் என்பது தீர்மானிக்கிறது. பிறந்த தேதியை வைத்துக் கணக்கிடும் வயதை நம்மால் மாற்ற முடியாது.

**ஆனால், ஆரோக்கியமான உணவு, உடற் பயிற்சிகள், உடல் உழைப்பு என இருந்தால், உடலை முதுமை தாக்காது. எதையும் இயல்பாக எடுத்துக் கொள்ளும் மனமும், எப்போதும் உற்சாகமாக இருக்கும் குணமும் மனதை இளமையாக வைத்திருக்கும்.**

– நன்றி முதுமை எனும் பூங்காற்று

# பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ...
# இதே மாதம் இதே நாட்களில் ...

அன்று மிரட்சி..! இன்று மகிழ்ச்சி..!!

*22.07.2006* அன்று NDTV என்ற ஆங்கில செய்தி தொலைக்காட்சியும் எல்லா தமிழ் செய்தி தொலைக்காட்சிகளும் பரபரப்பாக ஒரு செய்தியை வெளியிட்டன.

கோவையில் ஏழு இடங்களில் குண்டு வைக்க சதி. MNPயினர் ஐந்துபேர் கைது. என்பதே அந்த செய்தி.

MNP என்ற மனித நீதிப் பாசறை இதுபோன்ற ஈனத்தனமான செயல்களுக்காக உருவாக்கப்பட வில்லை. முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதி களை நிறுத்தி நீதியை நிலைநாட்ட உருவாக்கப் பட்ட அமைப்பு.

கோவையில் நடந்தது என்னவென்றால் .....

கோவை சிறைவாசிகளை காணச்சென்ற அவர்களின் குடும்பப் பெண்களிடம் சோதனை என்ற பெயரில் அத்துமீறி நடந்துள்ளார் ரத்தின சபாபதி என்ற உளவுத்துறை அதிகாரி.

இதனால் தாங்கவொண்ணா மன வேதனைக்கு ஆளான சிறைவாசிகளின் குடும்பப் பெண்கள் கோவை மாவட்ட MNPயினரிடம் புகார் கூறினர்.

அதன் மாநிலத்தலைவர் மு. குலாம் முஹம்மது மனித உரிமை ஆணையத்தில் புகார் அளித்தார்.

புகாரை ஏற்று ரத்தின சபாபதிக்கு தாக்கீது கள் அனுப்பியது ஆணையம். இதனால் கோப மடைந்த அவர் MNPஐ பழிவாங்கத் துடித்தார்.

கோவையின் பரபரப்பான ஏழு முக்கிய இடங்களில் குண்டுகள் வெடிக்க அவரே ஏற்பாடு செய்தார். பழியை MNP மீது போட்டார். பத்திரிக்கைகளுக்கு செய்தி தந்து பரபரப்பை கூட்டினார் .

மெல்லாத வாய்க்கு அவல் கிடைத்து போல் பொல்லாத மீடியாக்களுக்கு இது கிடைத்தது.

'MNPக்கு தடை?' 'சென்னையிலுள்ள ஐந்து முக்கிய தலைவர்கள் விரைவில் கைது. தனிப் படை விரைந்தது'. என்றெல்லாம் பீதியைக் கிளப்பின. இந்தக்கெடுபிடியிலிருந்து மீள மூன்று முயற்சிகள் நடந்தன.

ஒன்று; கோவை ஐக்கிய ஜமாஅத் காவல் துறை ஆணையரை சந்தித்தது. '1998 குண்டு வெடிப்புக்கு பின் அரும்பாடு பட்டு நாங்கள் கட்டி எழுப்பிய சமூக ஒற்றுமையை காவல்துறை யே சிதைக்கலாமா?'என்று துணிந்து கேட்டது.

இரண்டு; வைகை சட்ட நிறுவனம் தன் 'உண்மை கண்டறியும் குழு'மூலம் உண்மையை கண்டுபிடித்து பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தியது.

மூன்று; MNPயின் தலைவர் குலாம் முஹம்மது சென்னையில் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடத்தி ரத்தின சபாபதியை தோலுரித் தார்.

முத்தாய்ப்பாக அப்போதைய தமிழக முதல் வர் கலைஞர் அவர்களை சந்தித்து உண்மையை விளக்கிட முயன்றோம். TKS இளங்கோவன் உதவினார்.

MNP யின் தலைவர் குலாம் முஹம்மது, செயல் தலைவர் உமர் கத்தாப், நான் (இல்யாஸ் ரியாஜி) முதலிய பொறுப்பாளர்கள் முதல்வரை சந்தித்து உண்மையை சொன்னோம்.

முதல்வர் கலைஞர் ஒரு நடுநிலையான விசாரணையை நடத்தி கோவையில் குண்டு வைக்க முயற்சித்த உளவுத்துறை அதிகாரி ரத்தின சபாபதியை பணிமாற்றமும் இடமாற்றமும் செய்து நீதியை நிலை நாட்டினார்.

இதை பொறுக்க முடியாமல் 'திமுக MNP யிடம் வளைந்து விட்டது' என்று செய்தி வெளி யிட்டு கலைஞரை சீண்டியது Indian express பத்திரிக்கை. அதன் சூழ்ச்சி வலையில் அவர் விழவில்லை. நீதி வென்றது. சூழ்ச்சி தோற்றது.

'உளவுத்துறையின் சதியிலிருந்து எப்படி மீளப்போகிறார்கள் இவர்கள் 'என்று அன்று மிரட்சியடைந்த நம் நலம் விரும்பிகள் பலர் இன்று மகிழ்ச்சியுடன் அதை நினைவு கூர்ந்து சிலாகிக்கின்றனர்.

எல்லாப்புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே..!
ஆட்சிகள் மாறிவிட்டன.
காலங்கள் கடந்துவிட்டன.
காட்சிகள் மட்டும் மாறவேயில்லை.

இப்போது நடக்கும் NIAவின் அநீதிகளையும் அவதூறுகளையும் அல்லாஹ்வின் உதவியால் வீழ்த்திக் காட்டுவோம். இன்ஷாஅல்லாஹ்.

– இல்யாஸ் ரியாஜி

# உனது கோட்டைத் தூண்களின் கிரீடக்கற்களை

# முஸ்லிம்களின் மேசையாக்குவேன்

துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரத்தின் மையப்பகுதியில் சுல்தான் முஹம்மது அல் ஃபாத்திஹ் அவர்களின் பெயரால் அமைந்துள்ள மஸ்ஜிதுல் ஃபாதிஹிர்கு அருகில் உள்ள தோட்டத்தை கடந்து நான் செல்லும் போதெல்லாம் அதில் மக்கள் ஆங்காங்கே உடைந்த கற்களின் மீது அமர்ந்திருப்பது என்னை எப்பொழுதும் ஆச்சரியப்படுத்திக் கொண்டேயிருந்தது.

ஏனென்றால், அந்த கற்கள் பழமை வாய்ந்த கற்களாக பல ஓவியங்களை, உருவங்களை தன்னுள் கொண்டதாக காட்சியளித்தது.

எனவே இதனை குறித்து ஆராய முற்பட்டப் போது தான் விளங்கியது, அந்த காலத்தில் அது மாதிரியான கற்களை பிரம்மாண்டமான மாளிகையின் தூண்களுக்கு அழகுச் சேர்க்க கிரீடமாக, போதிகையாக பயன்படுத்துவார்களாம்.

அது சரி ஆனால் என்னுடைய கேள்வி அந்த கற்கள் மக்கள் அமர்வதற்கு அங்குமிங்குமாக இந்த தோட்டத்தில் ஏன் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது? என்பது தான்.

ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்னால் கான்ஸ்டான்டி நோபிள் எனப்படும் *கிஸ்தின்தீனியாவின் மன்னருக்கும் மாமன்னர் முஹம்மது அல்ஃ பாதிஹிற்கும் மத்தியில் நடந்த கடிதங்களை படித்தபோது அதற்கான விடையைப் பெற்றுக் கொண்டேன்.

கிஸ்தின்தீனிய்யாவை சுல்தான் முஹம்மது அல் ஃபாதிஹ் அவர்களின் ராணுவம் சுற்றி வளைத்து முற்றுகையிட்டப்போது, ஆணவப் போதையில் பைஸாந்திய பேரரசின் மன்னன் முஸ்லிம்களே உங்களை நெருப்பு கங்குகளின் மீது அமரவைப்பேன்!!!! என்று கூறினான்.

அதற்கு மன்னர் முஹம்மது அல்ஃபாதிஹ்

ஆனால் நானோ உனது கோட்டையை தகர்த்து அதன் தூண்களின் கிரீடக்கற்களை முஸ்லிம்களுக்கு மேசையாக்குவேன் என்று துணிவோடு பதிலளித்தார்.

பேரன்பாளன் அல்லாஹ்வின் பேரருளால் பைஸாந்திய சாம்ராஜ்யத்தை சுல்தான் முஹம்மது அல் ஃபாதிஹ் கைப்பற்றினார். அதன் பிரம்மாண்டமான கோட்டையை தாங்கி நின்ற தூண்களின் கிரீடக்கற்களை (போதிகையை) முஸ்லிம்கள் ஓய்வுக்காக அமரும் மேசைகளாக ஆக்கினார்.

அவை தான் இன்று இன்ஸ்தான்புல் நகரில் இருக்கைகளாக ஆங்காங்கே வீற்றிருக்கின்றன.

இது வரலாற்றின் அடையாளம் அல்ல இன்றைக்கு நாம் இழந்து தவித்துக் கொண்டிருக்கும் நமது கண்ணியத்தின் அடையாளம்.

– அரபி மூலம் சுஹா கத்ர்
– தமிழில்: மௌலவி
நியாசுதீன் புகாரி நத்வி





# கஷ்மீர் முதல் அனைத்து முனைகளிலும் தோற்ற மோடி..?

2016 நவம்பர்–8 அன்று“பண மதிப்பு நீக்கம்” ஒன்றை அறிவித்தார் மோடி. நீண்ட நாட்களுக்குப் பின் பலன்தரும் என்றார். அப்போதே நாம் “வைகறை வெளிச்சத்தில்” தெளிவாகக் குறிப்பிட்டோம். நீண்ட நாட்களுக்குப் பின் மக்கள் செத்து மடிவார்கள் என்று. இதைத்தான் 1930களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது, உலகப் பொருளாதார நிபுணர்களின் தலைவர் என அறியப்பட்ட John Keynes ஜான் கீன்ஸ் சொன்னார் :

மக்கள் அணி, அணியாக செத்து மடிந்தார்கள். அதுவேதான் இப்போதும் நடந்தது. வங்கிகளின் வாசற்படிகளிலும், ஏன் வங்கிகளுக்கு உள்ளேயே செத்து மடிந்தார்கள். வங்கிகளில் வரிசையில் நின்று செலுத்திய சொந்தப் பணத்தை எடுப்பதற்கு செத்த கதை மோடியின் ஆட்சிக்கு மட்டுமே சொந்தம்.

காலப்போக்கில் தொழில்கள் நசுங்கி ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் தற்கொலை செய்து கொண்டவர்களும் ஏராளம். காணாமல் போன குடும்பங்கள் ஏராளம்... ஏராளம்... அத்தனையையும் மூடி மறைத்துவிட்டார்கள்.

அதேபோல்தான் "GST" என்ற பொருள்கள் மற்றும் சேவை வரி. அதனால் வீழ்ந்தவர்கள் ஏராளம். அவர்கள் அனைவரும் அவர்களைப் பற்றிய செய்திகளும் கொரோனா மரண அலையில் மறைந்து போயின. பண மதிப்பு நீக்கத் தொடக்கத்தில், தீவிரவாத ஒழிப்பு, கறுப்புப் பண ஒழிப்ப என்றெல்லாம் பீற்றினார்கள். ஆனால். எதுவும் நடக்கவில்லை.

அடுத்து இவர்கள் தங்கள் எதிரிகளாக கருதும் முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்க தீட்டிவந்த பல ஆயிரம் திட்டங்களுள் ஒன்றாய் CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இன்றளவும் அசாம் மாநிலத்தில் கூட அவர்களால் யார் குடிமக்கள், யார் குடிமக்கள் அல்ல என்பதை முடிவு செய்ய இயலவில்லை. அதனால் NRC என்ற தேசிய குடிமக்கள் பதிவேட்டை அவர்களால் இறுதி செய்திட இயலவில்லை.

சிலபல முஸ்லிம்களை தடுப்புக்காவல் முகாம்களில் அடைத்து மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் இன்று வெளியே வந்துவிட்டனர். சிலபலர் தங்கள் கிட்னியை இழந்தார்கள். தடுப்புக்காவல் முகாம்களில் நடந்த அநியாயத்தில் பாசிசத்தைப் பாதையாகக் கொண்ட இவர்கள், 40 லட்சம் முஸ்லிம்களை அசாமில்






அந்நியர்களாக அறிவிக்க முனைப்புகளை மேற் கொண்டார்கள். இறுதியில் 12 இலட்சம் இந்துக்களும், 6 லட்சம் முஸ்லிம்களுமே பிரச் னைகளுக்குள்ளானார்கள். பின்னர் அசாமில் வாழ்ந்து கொண்டிருக்கும், இந்துக்களே இவர் களுக்கெதிராகக் கிளர்ந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்களைக் கைது செய்து, தடை செய் யப்பட்ட செயல்களின் தடை சட்டத்தில் (UAPA) சிறையில் அடைத்தார்கள்.

அவர்களில் பலர், சிறையிலிருந்து வெளியே வந்துவிட்டார்கள். நாடெங்கும் கிளர்ந்த விமர்சனங்களால் நீதிமன்றங்கள் மெல்ல, மெல்ல இவர்களின் பிடியிலிருந்து விடுபடுகின் றன. அதனால் செய்வதறியாது திணறுகின்றார்கள்.

அண்மையில் அசாம், பொதுப்பணிக்குழு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக் கோடு அசாமில் தேசிய குடிமக்கள் பதிவேடு முயற்சிகள் அனைத்தும் உடைந்து, நொறுங்கி ஓர் முடிவுக்கு வரும். காரணம் இதே பொதுப்பணிக் குழுதான் தொடக்கத்தில், அசாமில் தேசிய குடியுரிமை பதிவு ஒன்று வேண்டும் என வழக் குத் தொடுத்தது. இப்போது அதில் நடந்ததெல் லாம் ஊழலும், ஊதாரித்தனமும் முறையற்ற செயல்களும்தான் என்கின்றது.

இப்போது, தேசிய குடிமக்கள் பதிவேடு ஒன்று தயாரிப்போம் என அடம் பிடித்ததும் கோடிக்கணக்கான ரூபாயை அள்ளிக் கொட்டி யதும் வீண் விரயம் என்றாகிவிட்டது.

இத்தனைக்கும் அசாமில் நடக்கும் குடிமக்கள் பதிவேடு உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் நடைபெற்றது.

இதில், இந்த வீண் வீராப்பு. விளையாட்டில் நமது பணமும் பொருளும் நேரமும் வீணானது என்றில்லை. சர்வதேச அளவில் இந்தியாவின் கண்ணியம் தரையைத் தொட்டது.

உச்ச நீதிமன்றத்தில் இந்த CAAவுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் சர்வதேச மனித உரிமை அமைப்பின் சார்பிலும் ஓர் மனு அல்லது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியன் நாடுகள் கண்டித்தன. இருந்தாலும், இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் கீழே வீழ்ந்தாலும், மீசையில் மண் ஒட்டவில்லை என்ற அளவில் 2022ல் CAA–ஐ செயல்படுத்துவோம் என முண்டாசுத் தட்டுகின்றார்கள், மண்ணைக் கவ்விட.!

இந்த மொத்த விவகாரத்திலும்,
ஒரு விவகாரம் மக்களுக்கு தெளிவாயிற்று. அது இவர்களின் சூதும், சூழ்ச்சியும், பெரும்பாலான குடிமக்களுக்கு புரிந்துவிட்டது.
இந்தி பிரதேசப் பாமரர்களைத் தவிர

அடுத்து கஷ்மீரில் இவர்களின் பாசிச
வெறியைக் காட்டினார்.
அங்கே என்னவாயிற்று..?

இன்ஷாஅல்லாஹ் அடுத்த இதழில்...

- MGM




# கேரள கம்யூனிஸ்ட் கட்சி கோரத்தை வெளிக் கொண்டுவந்த மாலிக்

மாலிக் என்ற திரைப்படம் மஹேஷ் நாராயணன் தயாரிப்பில் ஃபஹத் ஃபாசில் நடித்து அமேசான் பிரைமில் வெளியாகியிருக்கிறது. இந்த படம் கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள பீமா பள்ளியில் 2009ம் ஆண்டு கம்யூனிஸ்ட் அரசின் கீழ் நடத்தப்பட்ட முஸ்லிம்கள் மீதான போலீஸின் கொடூர வன்முறையை மையமாக வைத்து எடுக்கப்பட்டது. முழுமையான உண்மை கதையாக இல்லாமல் கற்பனைக்காட்சிகள் கலந்து விறுவிறுப்பாக அனைத்து தரப்பு மக்களுக்கு பிடிக்கும் விதமாக ஒரு கேங்க்ஸ்டர் படமாக வெளி வந்திருக்கிறது.

முதலில் மாலிக் படத்தை பார்ப்பதற்கு முன்னால் உண்மையில் 2009ல் நடந்த சம்பவத்தை பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் படத்தை முழுமையாக புரிந்து கொள்ள முடியும்.

திருவனந்தபுரத்தின் கடற்கரை ஓரத்தில் அமைந்திருக்கிறது பீமாபள்ளி. பள்ளிவாசலும் தர்காவும் இணைந்த பள்ளி. இங்கே பீமா தேவி என்பவரின் அடக்கஸ்தலம் இருக்கிறது.

கேரளாவில் உயர்சாதி இந்துக்களால் அப்போது தாழ்த்தப்பட்ட சமூகமாக இருந்த நாடார் வகுப்பினர் கடுமையான சாதி வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனை நாடார் மக்களுக்கு மருத்துவ சேவை செய்து வந்த மாஹின் அபுபக்கர் எதிர்த்தார். இதன் காரணமாகவே அப்போதைய அரசன் மகேந்திர வர்மனால் கொல்லப்பட்டார். தன் மகன் அபூபக்கரின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்த தாயார் பீமா தேவி இறந்து விட அவருக்கு உண்டாக்கப்பட்ட அடக்கஸ்தலம் தான் பீமா பள்ளி.

உயர்சாதி இந்துக்களின் வன்முறைக்கு தீர்வாக இஸ்லாத்தையும், கிறிஸ்துவத்தையும் ஏற்றுக்கொண்ட நாடார் மக்கள் தான் பீமா பள்ளியை சேர்ந்தவர்கள்.

பீமா பள்ளியை சுற்றியிருந்தவர்கள் தொடக்கத்திலிருந்தே வெளிநாட்டு தொடர்புடன் இருந்ததால் வெளிநாட்டு பொருட்கள் அதிகமாக கிடைக்கும் இடமாகவும் இருந்தது. அதைப் போல இங்கு சினிமா சிடிக்கள் பிரபலம்.

பீமா பள்ளியை சுற்றி 25000க்கும் அதிகமான முஸ்லிம்கள் இருக்கிறார்கள். பீமா பள்ளியில் இருந்து 1 கி.மீக்கும் குறைவான தூரத்தில் கிறிஸ்துவர்கள் வசிக்கும் செரியத்துரா என்ற பகுதியும் இருக்கிறது.

பீமா பள்ளியில் உள்ள மஹல்லா ஜமாத் மிகவும் பிரசித்தி பெற்றது. பீமா பள்ளி பகுதிக்குள் நடக்கும் பிரச்சனைகள் அனைத்தும் மஹல்லா ஜமாத் தலையீட்டிலேயே சுமூகமாக தீர்த்து வைக்கப்படும்.

இவையெல்லாம் தொடர்ச்சியாக காவல் துறைக்கு வெறுப்பை கொண்டு வருவதாக இருந்திருக்கிறது.

பொதுவாகவே காவல்துறை மீனவ பகுதிகளை குற்றவாளிக்கூடாரமாக தான் நடத்தும். அதிலும் முஸ்லிம்கள் இருக்கும் பகுதி என்பதால் பொய் வழக்குகளில் கைது செய்வது என்று தொடர் தொந்தரவுகள் இருந்திருக்கிறது. இதில் அதிகம் பாதிக்கப்பட்டது அங்கிருக்கும் தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்தவர்கள்.

இப்படி பீமாபள்ளி பகுதியை தொடர்ச்சியாக மோசமான பகுதி என்று காவலர்களின்

திணிப்பில் மீடியாக்களின் மூலம் முஸ்லிம் களுக்கெதிரான வெறுப்பு பிரச்சாரம் செய்யப் பட்டிருந்தது.

இந்த நிலையில் திடீரென்று ஒரு நாள் 17மே, 2009ல் காவல்துறை படையுடன் வந்து துப்பாக்கி சூடு நடத்தி 6 முஸ்லிம்களை கொன்று குவித்தது. மதக்கலவரத்தைதடுக்கஎடுத்தமுயற்சி இதுவென ஊடகங்களிடம் சொன்னார்கள். பின்னாட்களில் PUCL, NCHRO போன்ற மனித உரிமை அமைப்புகள் மூலம் முஸ்லிம்கள் அல்லாத தமிழ்நாட்டை சேர்ந்த எழுத்தாளர் மார்க்ஸையும் கொண்ட ஒரு குழு உண்மை கண்டறியும் அறிக்கையை தாக்கல் செய்தது. நீதிபதி ராமகிருஷ்ணன் தலைமையில் உருவான குழுவும் தங்கள் அறிக்கையை தாக்கல் செய்தார்கள்.

அதில், மிகத் தெளிவாக காவல்துறை திட்ட மிட்டு நிகழ்த்திய அரசு பயங்கரவாதம்தான் இந்த துப்பாக்கி சூடு தாக்குதல் என்று சொன்னர்கள்.

இச்சம்பவம் நடக்கும் ஒரு வாரத்திற்கு முன் கொம்பு சிம்பு என்ற ரவுடி முஸ்லிம்கள் கடையில் பிரச்சனை செய்கிறான். இதன் விளைவால் ஒரு கடை நாசமாகிறது. உடனே முஸ்லிம்கள் போராட்டங்களில் இறங்குகிறார்கள். கொம்பு சிம்புவை கைது செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள்.

ஆனால் கைது செய்யப்படவில்லை. அதற்கு மாறாக கொம்பு சிம்பு பொதுவெளியில் முஸ்லிம் களுக்கு எதிராக கிறிஸ்துவர்களை தூண்டி விடக் கூடிய பிரச்சாரத்தை செய்கிறான். அப்போதும் கைது செய்யப்படவில்லை.

16ம் தேதி இரவு தாலுகா ஆபிசர், RDO, MLA சுந்தர பிள்ளை, கலெக்டர் சஞ்சீவ் கௌசர் ஆகியோர் பள்ளிவாசல் நிர்வாகிகளை சந்தித்து கொம்பு சிம்புவை கைது செய்கிறோம் என்று உறுதி கொடுக்கிறார்கள்.

ஆனால், அடுத்த நாள் காலை 11 மணிக்கு படைகளுடன் வந்திறங்கிய காவல்துறை திட்ட மிட்டவாறு எந்த முன்னறிவுப்பும் இல்லாமல் துப்பாக்கிசூடு நடத்துகிறது.

முதல் குண்டில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த 10வது படிக்கும் 16 வயது பிரோஸ் என்ற முஸ்லிம் இளைஞன் கொல்லப்படுகிறான். குண்டுகள் தீரும் வரை காவலர்கள் சுட்டனர். இதில் 6 பேர் கொல்லப்பட்டனர். 52 பேருக்கு குண்டு காயம் ஏற்பட்டது.

காவலர்கள் 16 வயது இளைஞனின் சடலத்தை மிருகத்தை போல் இழுத்து செல்கிற வீடியோ இன்றும் இணையத்தில் இருக்கிறது.

இதனை காவலர்கள் மீடியாக்களுக்கு சொல் லும் போது மதக்கலவரத்தை தடுக்க இதனை செய்ததாகவும், அங்கிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும், காவலர்களுக்கு காயம் ஏற்பட்டு திருப்பி தாக்கியதாகவும் குறிப்பிட்டது.

கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் முக்கிய பத்திரி கையாக இருக்கும் மாத்ருபூமி, மனொரமா உட்பட பத்திரிக்கைகள் முழுக்க போலீஸின் கற்பனைக்கதைகளை எழுதி முஸ்லிம்களை குற்ற வாளியாக்கினார்கள்.

மனோரமா பத்திரிகை பீமா பள்ளியில் இருந்து முஸ்லிம்கள் ராக்கெட் லாஞ்சர்களை பயன்படுத்தியதாக செய்தி வெளியிட்டது.

அப்போதைய மாநில அரசாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியும், மீடியாவும் மொத்தமாக முஸ்லிம்களுக்கு எதிராக எழுதினார்கள். பிற்கா லத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பீமா பள்ளியில் நிகழ்ந்தது மிகப்பெரிய தவறு என்று ஒத்துக் கொண்டாலும் கொலை செய்தவர்களை தண்டிக்கவில்லை.

காவல்துறை போலியான சாட்சியங்களை உருவாக்கியதை குறிப்பிட்ட மாத்யமம் பத்திரி கையின் செய்தியாளர், போலீசார் பிளாஸ்டிக் கவரில் சுற்றி இது வெடிகுண்டு என்று சொல்லி ஒரு பொட்டலத்தை பீமா பள்ளி பகுதியிலிருந்து கைப்பற்றி எடுக்கும்போது மக்கள் சுற்றி வளைத்து கேள்வி எழுப்பி விசாரித்த பின் பிளாஸ்டிக் காகி தங்களுக்குள் பேப்பர்கள் சுத்தி வைக்கப்பட்டது தெரிய வந்தது என்கிறார்.

இதேபோல் காவலர்கள் முஸ்லிம்கள் மேல் இருந்த தங்கள் வெறியை தீர்த்துக்கொள்ள கிறிஸ்துவர்களை உபயோகப்படுத்தினார்கள் என்றும், இதில் எந்த மதக் குழப்பும் அங்கு உருவாகவில்லை என்றும் உண்மை கண்டறியும் குழு தெளிவாக குறிப்பிட்டது.

காவல்துறையின் மீது தாக்குதல் நடந்ததாக கூறியதும் சுத்த பொய், காவல்துறையினரின் சட்டைப்பட்டனுக்கு கூட எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று உண்மை கண்டறியும்

குழு குறிப்பிட்டது.

நீதிபதி ராமகிருஷ்ணணின் தலைமையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கை இந்த சம்பவம் திட்டமிட்ட வன்முறை என்று சொல்லிய பிறகும் இதனை அப்போதைய கம்யூனிஸ்ட் அரசும், அதன்பிறகு வந்த காங்கிரஸ் அரசும், தற்போது மீண்டும் ஆட்சிக்கு வந்த கம்யூனிஸ்ட் அரசும் கண்டுகொள்ளவில்லை.

தொடக்கத்தில் இந்த துப்பாக்கி சூட்டில் ஈடுபட்ட காவலர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்கள். பிறகு அவர்களுக்கு பதவி உயர்வுடன் பணி வழங்கப்பட்டது.

2009ல் நடந்த சம்பவம் இது. தொழிற் நுட்பங்கள் அனைத்தும் முன்னேறிய சூழலிலும் கூட முஸ்லிம்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த படுகொலை கேரளாவின் வரலாற்றிலி ருந்தே மறைக்கப்பட்டு இருந்தது. இன்று மாலிக் திரைப்படத்தின் வாயிலாக இதை மீண்டும் பேசுகிறோம்.

பீமா பள்ளியில் நடந்த கலவரம் பரவலாக கோவை கலவரத்தை நமக்கு நியாபகமூட்டும். காவல்துறையும், இந்துத்துவ சக்திகளும் இணைந்து முஸ்லிம்களுக்கெதிராக கலவரத்தில் ஈடுபட்டு 19 முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள். கோவை கலவரத்தின் நேரடி சாட்சியாக இருந்த அப்துல் நாசர் எம்.எல்.ஏ விடம் நாம் எடுத்த நேர்காணலை பாருங்கள்.

கோவை பயங்கரவாதமோ, பீமா பள்ளி பயங் கரவாதமோ முஸ்லிம்களுக்கு பாதுகாப்பானது என்று சொல்லக்கூடிய கம்யூனிஸ்ட் ஆட்சியிலும், திமுக ஆட்சியிலும் தான் நடத்தப்பட்டது. ஒட்டு மொத்த மீடியாவும் முஸ்லிம்களுக்கு எதிராக நின்றது. தொடர்ச்சியாக உண்மைக்குரலை பதிவு செய்தது முஸ்லிம்கள் நடத்திய மாத்யமம் மற்றும் தேஜஸ் செய்திகள் மட்டும் தான்.

சரி, மாலிக் படத்திற்கு வருவோம்.

படத்தின் திரையமைப்பு பற்றி முழுமையாக தெரிந்துகொள்ள ர. முகமது இல்யாஸ் என்ற இதழியல் துறை ஆசிரியர் எழுதிய கட்டுரையை அரண்செய் பக்கத்தில் படிக்கவும். நமக்கு சினிமா அறிவு அவ்வளவு கிடையாது.

பீமா பள்ளிக்கு பதிலாக ரமதான் பள்ளி என்று படத்தில் காட்டியிருக்கிறார்கள். இந்த பகுதியை ஆக்கிரமிக்க நினைக்கும் அரசாங்கத்திடமிருந்து காப்பாற்றும் கேங்க்ஸ்டரக பஹத் பாசில் சுலை மான் அலி இக்கா என்ற கேரக்டரில் அற்புதமாக நடித்திருக்கிறார்.



பீமா பள்ளி

இந்த படத்தில் முஸ்லிம்களின் குடும்ப வாழ்வியலை சொல்லும் போது மற்ற படங்கள் போல் முஸ்லிம்களை இறுக்கமாக காட்ட வில்லை. பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுவார்கள், புர்காவுடன் தான் வீட்டுக்குள் இருப்பார்கள். முஸ்லிம் ஆண்கள் பெண்களை மதிக்கமாட் டார்கள் என்று தொடர்ச்சியாக காட்டப்பட்ட டெம்ப்ளேட்டுக்கு மாற்றாக ஒரு எளிய வாழ்வி யலை காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குனர். அதுக்கே பெரிய பாரட்டுக்கள்.

படத்தில் பெரிய குறையென்று எதையும் சொல்ல முடியாது. ஆனால், சமரசத்திற்காக இயக்குனர் உண்மைச்சம்பவங்களில் சிலவற்றை மாற்றி அமைத்துள்ளார்.

உதாரணத்திற்கு இதில் கலெக்டர் கதாபாத் திரமும், எம்.எல்.ஏ கதாபாத்திரமும் முஸ்லிம் களாக காட்டப்பட்டிருப்பார்கள். ஆனால், உண்மையில் இச்சம்பவம் நடக்கும்போது கலெக் டராக இருந்தது சஞ்சீவ் கௌளர், எம்.எல்.ஏவாக இருந்தது சுந்தர பிள்ளை. இதுமட்டும் கொஞ்சம் முஸ்லிம்களையும் குற்றவாளியாக காண்பித்தால் தான் படம் சுறுசுறுப்பாக இருக்கும் என்ற பொது உளவியல் காரணத்திற்காக திணிக்கப்பட்டது போல் இருந்தது.

உண்மையில் இப்படியொரு முயற்சியை இயக்குனர் எடுத்தன் காரணமாகவே இன்று பீமா பள்ளியில் இப்படியொரு கொடூரம் நடத்தப்பட்டது பற்றி நாம் இன்று பேசுகிறோம்.

இதுபோல் தமிழகத்திலும் கோவை பயங் கரவாதம் உட்பட பல சம்பவங்கள் இருக்கிறது. அதனையும் திரை வடிவத்தில் காட்சிப்படுத்த இயக்குனர்கள் முன்வரவேண்டும்.

– அபூ சித்திக்.

அன்பார்ந்த வாசகர்களே! இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள் என்ற தலைப்பில் கடந்து 2018 ஜுலை மாதம் முதல் வைகறை வெளிச்சம் மாத இதழில் வெளிவந்த இந்த தொடருக்கு தாங்கள் வழங்கிய ஆதரவுகளுக்கு நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம். இதுவரை வெளிந்த 24 தொடர்களில் 15 நபர்களின் அனுபவங்களை புத்தகமாக தொகுத்து, 'இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம்' எனும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளோம்.

நூலை பெற்றுக்கொள்ள விரும்புவோர், வேர்கள் பதிப்பகத்தின் - 8148129887 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பெற்று கொள்ளலாம்.

இனி இந்த தொடர் 'இஸ்லாம் நாங்கள் தேர்ந் தெடுத்த மார்க்கம்' என்ற தலைப்பில் வெளிவரும். வழக்கம் போல் வாசகர்கள் தங்களது ஆதரவுகளை வழங்கிடுமாறு அன்போடு கேட்டு கொள்கிறோம்.

### தேவி (எ) ஆயிஷா

*என்னுடைய பெயர் ஆயிஷா! என்னுடைய பழைய பெயர் தேவி. நான் இந்து மதத்தை சார்ந்தவள்! என்னுடைய தந்தை ஒரு கோவிலின் தலைமை நிர்வாகி! அவருடைய நிர்வாகத்தில் தான் கோவிலே இருக்கும். திருவிழா போன்ற கோவிலின் விஷேஷங்கள் அனைத்தும் என் தந்தையின் தலைமையில் தான் நடக்கும்.*

*என்னுடைய சிறு வயதிலிருந்தே என் தந்தை சிவன், விஷ்னு, முருகன் என இந்து மதத்தின் கடவுள்கள் பற்றியும், அதன் கொள்கைகள் பற்றியும் சொல்லித்தான் வளர்த்தார். ஆதலால் இந்து மதத்தின் கடவுள்கள் பற்றியும், அதன் வணக்க வழிபாடுகள் குறித்தும் எனக்கு ஓரளவிற்கு தெரியும்.*

*இந்து மதத்தின் பண்டிகை காலங்களில், விழாக்காலங்களில், பூமிதிப்பது (நெருப்பு மிதிப்பது), அலகு குத்துதல் போன்ற ஒரு மனிதன் தன்னைத்தானே வறுத்திக் கொள்ளும் வழி பாடுகளையெல்லாம் நேரில் பார்த்துள்ளேன்.*

*அப்போதெல்லாம், 'என்னப்பா இது! கடவுளுக்காக இப்படியெல்லாம் கொடூரமாக வருத்திக்கொண்டு வழிபட வேண்டுமா?' என்று என் தந்தையிடம் கேட்பேன்.*

*அதற்கவர், 'ஆம்! இப்படியெல்லாம் செய்து நாம் கடவுளை மகிழ்விக்க வேண்டும்.' என்று கூறுவார்.*

*ஆனாலும் என் தந்தையின் பதிலில் எனக்கு உடன்பாடில்லாமல் இருந்தது. பின்னர் பள்ளியில் என்னுடைய தோழிகளிடத்தில் இது குறித்து பேசக்கூடிய ஒரு தருணம் கிட்டியது.*

*அப்போது என்னுடைய கிருஸ்தவ தோழி ஒருவர், 'இதெல்லாம் தவறு. இப்படியெல்லாம் செய்து தான் கடவுளை மகிழ்விக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நமக்காக இயேசப்பா எல்லா பாவங்களையும் ஏற்றுக் கொண்டார். அவர் தான் உண்மையான கடவுள்' என்று கூறினாள்.*

### கிருஸ்தவத்தில் நான்

*நான் அவள் கூறியதை கொஞ்சம் உன்னிப் பாக கவனிக்க ஆரம்பித்தேன். அதன்மீது ஆர்வம்*




தேவி (எ) ஆயிஷா

வந்து பின்னர் கிருஸ்தவத்தை பற்றி அறிந்து கொள்ள விரும்பினேன்.

என் விருப்பத்தை அவளிடம் தெரிவித்து, அவளிமிருந்து ஒரு பைபிளை வாங்கி படிக்க ஆரம்பித்தேன்.

பைபிளை முதன் முதலில் படிக்கும் போது, அதில் சொல்லப்பட்ட தகவல்கள் அனைத்தும் முழுக்க முழுக்க உண்மை என்றே தோன்றியது. அது ஒருவிதமான நம்பிக்கையை கிருஸ்தவத்தின் மீதும், இயேசு கிருஸ்துவின் மீதும் ஏற்படுத்தியது.

அதன் பின் நான் கிருஸ்தவ மதத்தை நேசிக்க ஆரம்பித்தேன். தேவாலயத்திற்கு செல்ல ஆசையாக இருந்தது. ஞானஸ்தானம் எடுத்து கிருஸ்தவ மதத்தை தழுவிடவும் ஆவலாக இருந்தது.

## எனக்கு நேர்வழிகாட்டிய விவேகானந்தர்

என் விருப்பத்தை என் தந்தையிடம் தெரிவித்தேன். 'எனக்கு கிருஸ்தவ மதம் பிடித்துள்ளது. இயேசு கிருஸ்து அவர்கள் நமக்காக பாவங்களை ஏற்றுக்கொண்டு சிலுவையில் அறையப்பட்டார். அவர்தான் உண்மையான கடவுள். நான் ஞானஸ்தானம் எடுத்து கிருஸ்தவ மதத்தை ஏற்றுக் கொள்ளவா?' என்று கேட்டேன்.

அதற்கு என் தந்தை, 'நதிகள் நிறைய இருந்தாலும், அது போய் சேரக்கூடிய இடமோ கடலாகத்தான் இருக்கிறது' என்ற சுவாமி விவேகானந்தருடைய கருத்து ஒன்றை கூறி என்னை சிந்திக்க வைத்தார்.(பார்க்க அடிக்குறிப்பு–01)

என் தந்தை கூறிய அந்த ஒரு கருத்து என்னை பல்வேறு கோணங்களில் சிந்திக்க வைத்தது. 'இந்த உலகத்தில் எத்தனை மதங்கள் இருந்தாலும் அவற்றை பின்பற்றக் கூடிய மனிதர்கள் போய் சேரக்கூடிய இடமோ இறைவன் என்ற ஒற்றை கடலில் தான். எனவே இறைவன் ஒருவனாகத்தான் இருப்பான். ஒவ்வொரு மதத்திற்கும் ஓர் இறைவன் என்பது மடத்தனம் என்பதை உணர்ந்தேன்.

## அந்த ஒரு இறைவன் எங்கே?

அப்படி சரியான ஓரிறைக் கொள்கையை போதிக்கும் மதம் எதுவாக இருக்கும் என்று சிந்திக்க ஆரம்பித்தேன். அப்போது எனக்கு தெரிந்த ஒரு முஸ்லிம் பெண் ஒருவர் எனக்கு இஸ்லாத்தின் இறைத்தன்மை பற்றியும், அதன் ஓரிறைக் கொள்கை பற்றியும் சொன்னாள்.

அவள் கூறிய தகவல்கள் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. உடனே இஸ்லாத்தை பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தேன். எனக்கு தெரிந்த ஒரு முஸ்லிம் குடும்பத்திடம் இஸ்லாம் பற்றி கேட்க ஆரம்பித்தேன். நானே முன்வந்து அவர்கள் வீட்டிற்கு சென்று இஸ்லாம் குறித்து கேட்க தொடங்கினேன்.

எப்படி ஒரு நாளைக்கு ஐந்து வேளை தொழுகிறீர்கள்? நோன்பு வைக்கும் போது எச்சில் கூட முழுங்க கூடாதாமே! எப்படி இதெல்லாம் உங்களால் முடிகிறது. இதெல்லாம் உங்களுக்கு கடினமாக இல்லையா என்று கேட்டேன்.

அதற்கு அவர்கள், இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகள் குறித்தும், அதன் நோக்கங்கள் குறித்தும் அழகாக விளக்கி சொன்னார்கள். மேலும் அவைகள் குறித்து நிறைய புத்தகங்களை கொடுத்து அவற்றையெல்லாம் படிக்க சொன்னார்கள்!

பின்னர் இஸ்லாம் குறித்த தேடலில் நிறைய புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தேன். அதன் மூலம் இஸ்லாம் குறித்தும், அதன் இறையியல் குறித்தும் நன்கு தெரிந்து கொண்டேன்.

## என்னை மாற்றிய இஸ்லாம்

சாதாரனமான ஒரு இந்து குடும்பத்தில் பிறந்த நான், நல்லா படிக்கனும், சம்பாரிக்கனும், கல்யாணம், குழந்தைகள் என செட்டில் ஆக வேண்டும் என்றிருந்த வாழ்க்கையின் ஓட்டத்தை இஸ்லாம் புரட்டி போட்டது.

அண்டை வீட்டாரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

அநாதைகளை அரவணைக்க வேண்டும்.

உறவினர்கள் மத்தியில் நல்ல முறையில் முறையில் அரவணைப்போடு இருக்க வேண்டும்.

போன்ற ஒழுக்கமான அமைதியான வாழ்க்கையை நோக்கி நகர ஆரம்பித்தேன்.

இதுபோன்ற ஒரு அழகான வாழ்க்கை முறையை இஸ்லாத்தில் மட்டும் தான் நான் பார்த்தேன். இந்து மதத்தினுடைய எந்த கொள்கையிலும் இப்படி ஒரு அழகான வாழ்வியல் முறையை

நான் காணவில்லை.

## முஸ்லிம்களும் அவர்களது சேவைகளின் பின்னணியும்

இந்து மதத்திலோ மற்ற மதங்களில் உள்ள வர்களோ கூட நிறைய பேர் சேவை மனப் பான்மை உடையவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் எல்லாம் தன்னுடைய பொரு ளாதாரத்தில் தன்னிறைவை அடைந்த நிலையில் அந்த சேவையை செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் முஸ்லிம்கள் மட்டும் தான் தன்னுடைய பொருளாதாரம் எவ்வளவு குறைவாக இருந்தா லும், அது தனக்கே போதுமானதாக இல்லாமல் இருந்தாலும் அதிலிருந்தும் ஒரு பகுதியை தர்மத் திற்காக ஒதுக்குகிறார்கள். இதை நான் முஸ்லிம் களிடத்தில் மட்டும் தான் பார்த்தேன்.

மேலும் அதை அவர்கள் ஒரு வழிபாடாக நினைத்து இறைவனுக்காக இதை செய்கின்றேன் என்று செய்கிறார்கள். இது எவ்வளவு அழகான செயல்.

இஸ்லாத்தினுடைய இது போன்ற கொள் கைகள் என்னை வெகுவாக கவர்ந்தது. நான் இஸ்லாத்தை மனதளவில் ஏற்றுக்கொண்டேன். அப்போது நான் 12ம் வகுப்பு படித்து கொண்டி ருந்தேன். மைனர் தான். மேஜர் கூட இல்லை. அதனால் பகிரங்கமாக 'நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்' என்று சொல்ல முடியாத ஒரு சூழ்நிலை. சொன்னால் நிறைய பிரச்சினை வரும். அதனால் சொல்லவில்லை.

ஹிஜாப் அணிய, தொழுக, நோன்பு வைக்க வெல்லாம் ஆசையாக இருக்கும். ஆனால் என்னுடைய சூழ்நிலை காரணமாக அதையெல் லாம் பகிரங்கமாக செய்யமுடியவில்லை.

## சோதனைகளும் – பொருமையும்

என் பெற்றோர்கள் என்னுடைய செயல்களை உன்னிப்பாக கவனித்து என்னுள் ஏற்பட்ட மாற் றத்தை கண்டுபிடித்து விட்டார்கள். நேரடியாக என்னிடம் இது குறித்து கேட்டார்கள்.

அப்போது நான் என் தந்தையிடம் பொறு மையாக எடுத்து கூறினேன், 'அப்பா நாம் சிலைகளை கடவுளாக வணங்கி கொண்டிருந் தோம். அந்த சிலைகளை நாம் தான் உருவாக்கு கிறோம். அதை தூக்கியெறிந்தால், தன்னை த்தானே காப்பாற்றி கொள்ள அந்த சிலையால் முடியாது. அதுவெல்லாம் கடவுள் கிடையாது. கடவுள் ஒருவர் தான். அந்த ஒரு கடவுளுக்குதான் நாம் கட்டுப்படவேண்டும். அந்த கடவுளை தான் இஸ்லாம் சொல்கிறது. அதனால் தான் நான் இஸ்லாம் மார்க்கத்தை தேர்ந்தெடுத்தேன்' என்று கூறினேன்.

அப்போது என் தந்தை என்னிடம் அவரது வயதிற்கேற்ற அனுபவத்தோட விவாதிக்க ஆரம் பித்தார். நான் அவர் கேட்ட அனைத்திற்கும் பொருமையாக பதில் அளித்தேன்.

தன்னுடைய மகள் இவ்வளவு பொருமை யாகவும், அறிவு ரீதியாகவும் பேசுகிறாளே என்று அவர் ஆச்சரியப்பட்டார். பின் நான் வீட்டி லேயே யாருக்கும் தெரியாமல் தொழ ஆரம்பித் தேன். நோன்பு கூட வைக்க ஆரம்பித்தேன். இதையெல்லாம் கவனித்த என் பெற்றோர்கள் பயத்தில் எனக்கு திருமணம் செய்து வைக்க முடிவெடுத்து விட்டார்கள்.

அது எனக்கு மிகப்பெரிய சோதனையாக இருந்தது. திருமணம் செய்து கொடுத்து விட்டாள் நான் மாறிவிடுவேன் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் நான் விடவேயில்லை. மிகவும் சிரமப்பட்டு என் பெற்றோர்கள் எடுத்த அந்த முடிவிற்கு எதிராக, நான் ஒரு மத்ரஸாவில் சென்று சேர்ந்து விட்டேன்.

## தற்போதைய பெண்களுக்கு தேவை ஹிஜாப்

இஸ்லாத்தில் நான் வியந்து பார்த்த ஒரு விடயம் என்றால் அது ஹிஜாப் தான். இஸ்லாத்தை அறிந்து கொள்வதற்கு முன் ஹிஜாப் என்றாலே எனக்கு ஒரு விதமான அசௌகரியமான உடை என்றே தோன்றும். எப்படி அடிக்கிற வெயிலில் இப்படி ஒரு ஆடையை போட்டு கொள்கிறார் கள். இது ரொம்ப கஷ்டமான விஷயமாக இருக்கிறதே என்று தோன்றும்.

ஆனால் நான் மத்ரஸாவில் இணைந்ததும், அங்கு ஹிஜாப் கட்டாயம் என்ற நிலை இருந்தது. அந்த மத்ரஸாவில் அல்லாஹ்வின் வசனங் களுக்கான விளக்கங்களை கற்றுக்கொள்ளும் போது தான் எனக்கு ஹிஜாபின் முக்கியத்துவம் புரிந்தது.

நாம் வாழக்கூடிய இந்த நாகரிக உலகத்தில் ஹிஜாப் என்பது ஒரு பெண்ணிற்கு எவ்வளவு முக்கியம் என்பதை என்னால் உணர முடிந்தது. ஒரு பெண் தன்னுடைய அலங்காரத்தை யாரிடத்தில் வெளிப்படுத்த வேண்டும், வெளிப்படுத்த கூடாது என்பதை ஹிஜாப் எனும் ஆடையின் மூலம் தீர்மானிக்கிறாள்.

இன்றைக்கு எத்தனையோ பெண்களுக்கு பொது இடங்களிலேயே பல்வேறு குற்றங்கள் இழைக்கப்படுகிறது. இப்படியான பிரச்சினைகளுக்கெல்லாம் முற்று புள்ளி வைத்து, பெண்களுக்கான ஒரு பாதுகாப்புணர்வை ஹிஜாப் வழங்குகிறது. இதை இப்போதுள்ள பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## என் தந்தையை மாற்றிய இஸ்லாத்தின் அந்த அழகிய வழிமுறை

மத்ரஸாவில் முழுமையாக இஸ்லாமிய கல்வியை முடித்த நான் திருமணம் செய்ய முடிவெடுத்தேன். அதற்காக என்னை பெண் கேட்டு வந்த ஒரு முஸ்லிம் குடும்பம் என் தந்தையோடு பேசினார்கள். அப்போது அவர்கள், ‘உங்கள் மகளுக்கு நீங்கள் ஒரு பைசா வரதட்சணை கொடுக்க வேண்டாம். உங்கள் மகள் கேட்கும் மஹர் கொடையை நாங்கள் கொடுத்து திருமணம் முடித்து கொள்கிறோம்‘ என்று கூறினார்கள்.

இது என் தந்தைக்கு அதிர்ச்சியாக இருந்தது. ‘பொதுவாக பெண்ணை கட்டி கொடுக்கும் போது சீறு, சனத்தோட வரதட்சணைகளை பெண் வீட்டார் கொடுப்பது தானே காலம் காலமாக இருக்கும் வழிமுறை? நீங்கள் என் மகளுக்கு அவள் கேட்பதை தருகிறோம் என்று சொல்கிறீர்களே! இது என்ன வழிமுறை?‘ என்று கேட்டார்.

அதற்கவர்கள் இஸ்லாத்தில் திருமண ஒப்பந்தத்தில் பெண்களுக்கான மஹர் கொடை பற்றியும், திருமண விஷயத்தில் இஸ்லாம் கூறும் ஒழுக்கங்கள் பற்றியும் எடுத்து கூறினார்கள். அது என் தந்தையின் உள்ளத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

அதன் பின் நான் என் தந்தைக்கு மீண்டும் இஸ்லாத்தை நோக்கி அழைப்பு விடுத்தேன். இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கை குறித்தும், இஸ்லாத்தின் வாழ்வியல் முறைகள் குறித்தும் எடுத்து கூறினேன். இந்த முறை என் தந்தை என்னிடம் விவாதம் செய்யவில்லை. இஸ்லாம் குறித்த அவரது அனைத்து சந்தேகங்களையும் கேட்டு தெரிந்து கொண்டார்.

மேலும் இப்போது என்னோடு சேர்ந்து என் தந்தை தொழுகையில் கூட ஈடுபடுகிறார். அவரது உள்ளம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்டது. ஆம்! அவர் இஸ்லாத்தை ஏற்று கொண்டு விட்டார். அல்ஹம்துலில்லாஹ்.

இன்னும் என் தாயார், சகோதரர்கள், குடும்பத்தார்கள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள பிரார்த்தியுங்கள்! அஸ்ஸலாம்.

Source : https://youtu.be/mjmAcJUZBeo

– அஷ்ரப் அலீ

### அடிக்குறிப்பு- 1


தேவி (எ) ஆயிஷா எனும் இந்த சகோதரியின் அனுபவங்களில் அவரது வாழ்க்கையின் முக்கிய திருப்பு முனையாக இருந்தது, ‘அவரது தந்தை அவருக்கு கற்றுக்கொடுத்த சுவாமி விவேகானந்தரின் ஒரு கருத்துதான்‘. அந்த கருத்துதான் அவரை ஓரிறைக் கொள்கையை நோக்கி சிந்திக்க வைத்துள்ளது. அதனால் தான் தேவியாக இருந்த சகோதரி தற்போது ஆயிஷாவாக மாறியுள்ளார்.

உண்மையில் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை இன்றைய இளைய சமுதாயம் படிக்க வேண்டும். அவரை பற்றின உண்மை வரலாறுகளை அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு நாட்டை பிளவுபடுத்தி, கலவரங்களையும், கும்பல் வன்முறைகளையும் செய்து கொண்டிருக்கும் பாசிச பயங்கரவாத இயக்கங்கள் தங்களது பாசிச இயக்கங்களுக்கு இளைஞர்களை இழுக்க சுவாமி விவேகானந்தரை தவறாக காட்டிக்கொண்டுள்ளனர்.

விவேகானந்தர் பல்வேறு மதங்களை ஆய்வு செய்து அதில் உள்ள நல்ல கருத்துகளை ஒருங்கிணைத்து சமூக நல்லிணக்கத்தை உருவாக்கிய ஓர் ஆன்மீகவாதி. அத்தகையவர் மீது பொய்யான ஒரு வரலாற்று சாயம் பூசி அவரையும் ஓர் இந்துத்துவ பாசிஸ்டாக காட்டி கொண்டிருக்கும் பாசிச சக்திகளின் பொய் வரலாறுகளை சமூகத்தின் மத்தியில் அடையாளம் காட்ட வேண்டும்.

– இன்ஷா அல்லாஹ்!

# ஒரு நிமிடம்




உங்களுக்கு நேரமிருக்காது. வாடிய வயிற்றுக்கு ஏதாவது சம்பாதிக்க வேண்டும். பரபரப்பான வாழ்க்கை இதில் நீ எழுதியதை நாங்கள் ஏன் படிக்க வேண்டும்?

அதிலும் 500 பக்கமா? விடு எங்களை. இது உங்களுடைய நியாயமான வாதம் தான். ஒரு நிமிடம் தந்து இதை மட்டும் பாருங்கள் / படியுங்கள். அப்புறம்...

மும்பையில் ஓர் ரெயிலில் ஜூலை 11, 2006ஆம் ஆண்டு குண்டு வெடித்தது. நான் வாத்தியார் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். திடுதிப்பென என்னை கைது செய்து சென்றார்கள்.

பாவம், தவறாக நம்மைக் கைது செய்கின்றார்கள். காவல் நிலையம் சென்று நம்மை விசாரித்த உடன் 'தவறாக அழைத்து வந்து விட்டோம் மன்னித்து விடு' எனக் கூறி விட்டு விடுவார்கள், என்ற எண்ணத்தில், அவர்களுடன் சென்றேன்.

காவல்துறையினர் அப்படி நடந்து கொள்ளவில்லை.

சித்திரவதை செய்தார்கள் அது சொல்லி மாளாது எத்தனை வகை வதைகள். பட, பட வென சில வெற்று காகிதங்களில் கையெழுத்து வாங்கினார்கள்.

இந்த வதைகளிலிருந்து விடுபட்டால் போதும் என நீட்டிய காகிதங்களில் காட்டிய இடங்களிலெல்லாம் கையெழுத்துப் போட்டேன். நீதிமன்றத்தில், கொண்டு நிறுத்தினார்கள்.

நீதிமன்றத்தில் எதை எதையோ கேட்டார்கள். அனைத்திற்கும் ஆமாம் சாமி கூட போட இயலவில்லை, ஒர் மயான அமைதியைத் தான் காத்தோம்.

ஒருவழியாக சிறையில் அடைத்தார்கள். அங்கே ஒரு சிறைவாசி வந்தார். எங்களிடம், ரெயிலில் குண்டு வைத்தீர்களா? என்றார்.

இல்லை, என்றோம். அப்படியானால் ஏன், ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டீர்கள்? என்றார்.

போட மறுக்கலாம் என்பது தெரியாது என்றோம். ஆனால், சித்திரவதையிலிருந்து எப்படி விடுதலை பெறுவது?

சித்திரவதை செய்து தான் கையெழுத்து வாங்கினார்கள் என நீதிபதியிடம் சொன்னீர்களா? எனச் சாடினார்.

அப்படிச்சொல்லலாமா? என்றோம். சொல்லலாம் அது நீங்கள் அப்பாவிகள் என்பதை நிரூபிக்க உதவி இருக்கும், என்றார்.

'என்னைப் போன்று, இல்லை எங்களைப் போன்று ஏதும் தெரியாமல்; யாரும் ஆட்பட்டிடக் கூடாது. சில அடிப்படையான சட்டங்களை, உரிமைகளை எல்லோரும் தெரிந்திட வேண்டும், என்பதற்காகவே இதை, என் அனுபவத்தோடு உங்களுக்குத் தருகின்றேன், இந்த நூலில். நான் இப்போது சட்டத்தில் முனைவர் பட்டம் பெற படித்துக் கொண்டிருக்கின்றேன்

– வாகித் ஷேஹ்

நிச்சயமாக இந்த நூல் போரடிக்காது.

பாடங்கள் பல புகட்டும். ஆங்கில புத்தகம் தேவைக்கு: 8148129887



# இங்கிலாந்தில் உருவாகும் மாற்றம்

லண்டன் மேயர் ... முஸ்லிம்

பர்மிங்காம் மேயர் ... முஸ்லிம்

லீட்ஸ் மேயர் ... முஸ்லிம்

பிளாக்பர்ன் மேயர் ... முஸ்லிம்

ஷெஃபீல்ட் மேயர் ... முஸ்லிம்

ஆக்ஸ்போர்டு மேயர் ... முஸ்லிம்

லூட்டன் மேயர் ... முஸ்லிம்

ஓல்ட்ஹாம் மேயர் ... முஸ்லிம்

ரோச்ச்டேல் மேயர் ..... முஸ்லிம்.

இப்போது அனைத்து இங்கிலாந்து பள்ளிகளும் ஹலால் இறைச்சியை மட்டுமே வழங்குகின்றன !

*66 மில்லியன் மக்கள்தொகையில் வெறும் 4 மில்லியன் முஸ்லிம்களால் இவை அனைத்தும் அடையப்பட்டுள்ளன ! ! !*

இது ஒரு கண் திறப்பு .

இங்கே ஹம்ஸா யாகசாய் இஸ்லாத்தைப் பற்றிய மேற்கோள்கள், சில மேற்கத்திய தத்துவ ஞானிகளால் :

### 1. லியோ டால்ஸ்டாய் (1828–1910)

'இஸ்லாம் ஒரு நாள் உலகை ஆளும், ஏனென்றால் அதில் அறிவும் ஞானமும் கலந்திருக்கும்'.

### 2. ஹெர்பர்ட் வெல்ஸ் (1846–1946)

'இஸ்லாத்தின் செயல்திறன் மீண்டும் வரும் வரை, எத்தனை தலைமுறையினர் அட்டூழியங்களை அனுபவிப்பார்கள், வாழ்க்கை துண்டிக்கப்படும் ?

பின்னர் ஒரு நாள் உலகம் முழுவதும் அதில் ஈர்க்கப்படும், அந்த நாளில் அமைதி இருக்கும், அந்த நாளில் உலகம் மீண்டும் குடியேறும் .

### 3. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (1846–1946)

'யூதர்கள் செய்ய முடியாத தங்கள் சொந்த உளவுத்துறை மற்றும் விழிப்புணர்வு மூலம் முஸ்லிம்கள் அதைச் செய்தார்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். இஸ்லாத்தில் அது அமைதிக்கு வழிவகுக்கும் சக்தி'.

### 4. ஹஸ்டன் ஸ்மித் (1919)

'இப்போது நம்மீது இருக்கும் மற்றும் உலகில் நம்மை விட சிறந்த நம்பிக்கை இஸ்லாம். அதற்காக நம் இதயங்களையும் மனதையும் திறந்தால், அது நமக்கு நல்லது'.

### 5. மைக்கேல் நோஸ்ட்ராடாமஸ் (1503–1566)

'ஐரோப்பாவில் இஸ்லாம் ஆளும் மதமாக இருக்கும், மேலும் ஐரோப்பாவின் புகழ்பெற்ற நகரம் இஸ்லாமிய அரசு தலைநகராக மாறும்.'

### 6. பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் (1872–1970)

'நான் இஸ்லாத்தைப் படித்தேன், அது உலகம் மற்றும் அனைத்து மனித இனத்தின் மதமாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன்.

இஸ்லாம் ஐரோப்பா முழுவதும் பரவுகிறது மற்றும் ஐரோப்பாவில் இஸ்லாத்தின் பெரிய சிந்தனையாளர்கள் வெளிப்படுவார்கள்.

இஸ்லாம் உண்மையான தூண்டுதலாக இருக்கும் ஒரு நாள் வரும் உலகம். '.

### 7. கோஸ்டா லோபன் (1841–1931)

'இஸ்லாம் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பற்றி மட்டுமே பேசுகிறது.

சீர்திருத்தத்தின் நம்பிக்கையைப் பாராட்ட கிறிஸ்தவர்களை அழைக்கவும்.'

### 8. பெர்னார்ட் ஷா (1856–1950)

'முழு உலகமும் ஒரு நாள் இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொள்ளும்,

அது உண்மையான பெயரைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாவிட்டால், அது ஒரு உருவகத்தின் பெயரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்கு ஒரு நாள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும், இஸ்லாம் படித்தவர்களின் மதமாக இருக்கும் உலகம். '

### 9. ஜோஹன் கீத் (1749–1832)

'நாம் அனைவரும் விரைவில் அல்லது பின்னர் இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இது தான் உண்மையான மதம்.

நான் ஒரு முஸ்லீம் என்று அழைக்கப்பட்டால், நான் மோசமாக உணர மாட்டேன்,

இதை நான் சரியான விஷயமாக ஏற்றுக் கொள்கிறேன்.'

*அல்ஹம்துலில்லாஹ் !!*



# மஸ்ஜிதே 'ஸான்கி யதிம்'

துருக்கி நாட்டின் ஃபாதிஹ் நகரத்தில் 'ஸான்கி யதிம்' என்றப் பெயர் தாங்கிய மஸ்ஜித் ஒன்று உள்ளது.

அதென்னப் பெயர் ஸான்கி யதிம்? துருக்கி மொழியில் ஸான்கி யதிம் என்றால் 'நான் சாப்பிட்டதாக நினைத்துக் கொண்டேன்' என்று அர்த்தம்.

இதெப்படி ஒரு மஸ்ஜிதின் பெயராக மாறியது?

ஃபாதிஹ் நகரத்தில் ஹைருத்தீன் அஃபன்தி என்ற நபர் வாழ்ந்து வந்தார்.

இந்த நபர் கடைவீதிக்கு செல்லும் போதெல் லாம் கடைவீதியில் விற்கும் பழவகைகள், இனிப்பு வகைகள், மாமிசம் ஆகியவற்றைப் பார்த்து வாங்க வேண்டும் என்ற எண்ணம் எழும் போது இவர் தனக்குத்தானே 'ஸான்கி யதிம்' (நான் சாப் பிட்டதாக நினைத்துக் கொண்டேன்) என்றுக் கூறிக் கொள்வார். அவைகளுக்கான விலையை (பணத்தை) உண்டியலில் சேமித்து வைத்துக் கொள்வார்.

இவ்வாறான விசித்திரமான பழக்கத்தைப் பலவருடங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார். அதனால் மிகப்பெரியத் தொகை உண்டியலில் சேர்ந்தது.


இந்த தொகையினால் தான் வாழும் பகுதியில் ஒரு மாபெரும் மஸ்ஜிதையே கட்டிவிட்டார்.

அந்த ஊர் மக்களோ இந்த சாதாரண மனிதர் இவ்வளவு பெரிய மஸ்ஜிதைக் கட்டக் கூடியளவிற்கான பணத்தை எங்கிருந்துப் பெற்றுக் கொண்டார் என்று ஆச்சரியப்பட்டனர். இதன் பின்னணியை அறிந்த கொண்ட அம்மக்கள் 'ஸான்கி யதிம்' என்ற பெயரையே அவர் கட்டிய பள்ளிவாசலுக்கு பெயராகச்சூட்டி விட்டனர்.

இந்த அற்புதமான மஸ்ஜித் முதலாம் உலகப் போரில் சேதமடைந்தது. பிறகு 1995ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது.

– ஆதாரம்: அவ்ர் கான் முஹம்மதலீ எழுதிய ' ரவாயிஉம் மினத் தாரீஹில் உஸ்மானீ.

– தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி, நத்வி



தலையங்கம்

# விலங்குகள் பற்றி இஸ்லாம்

இஸ்லாம் எல்லா துறைகளிலும் வழிகாட்டக்கூடிய மார்க்கமாகும். மனிதன் பிற மனிதர்களோடு மட்டும் அல்ல, பிற உயிர் இனங்களோடும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் விலங்குகள் படைக்கப்பட்ட நோக்கத்தையும், அதன் சிறப்புகள், செயல்பாடுகள் பற்றியும் இஸ்லாம் கூறுகிறது.

குர்ஆனில் பல இடங்களில் ஆடு, மாடு, ஒட்டகம், தேனீ, சிலந்தி, எறும்பு, யானை, மீன், பறவைகள் என பல உயிரினங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. இறைவனின் படைப்பான விலங்குகளை மனிதன் அறிந்துகொண்டு அதன்மூலம் இறைவனின் வல்லமையை புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக.

''மேலும் எல்லா உயிரினங்களையும் அல்லாஹ் நீரிலிருந்து படைத்துள்ளான். அவற்றில் தன் வயிற்றின் மீது நடப்பவையும் உண்டு. அவற்றில் நான்கு (கால்)களைக் கொண்டு நடப்பவையும் உண்டு. தான் நாடியதை அல்லாஹ் படைக்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கின்றான்.” (அந்நூர் – 45)

இஸ்லாத்தில் ஒருவன் விலங்குகளோடு நடந்துகொள்ளும் முறை அவனது சுவர்கத்தையும் நரகத்தையும் தீர்மானிக்கின்றது.

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள் :

“ஒரு பூனையை அது சாகும் வரை (பட்டினிப்போட்டு) கட்டி வைத்த காரணத்தால் பெண் ஒருத்தி (நரகத்தில்) வேதனை செய்யப்பட்டாள். அதை அடைத்து வைத்தபோது அவள் அதற்கு தீனியும் போடவில்லை. அதற்கு (குடிக்கத்) தண்ணீரும் கொடுக்கவில்லை. அவள் அதை பூமியின் புழு பூச்சிகளைத் தின்ன (அவிழ்த்து) விடவுமில்லை.” (புகாரீ)

''படைப்பினங்கள் மீது கருணை காட்டாதவன் (படைத்தவனால்) கருணை காட்டப்பட மாட்டார்கள்.” (புகாரீ)

அபூஹுரைரா (ரழி) அறிவித்தார்கள்

“ஒருவர் (ஒரு பாதையில்) நடந்து சென்று கொண்டிருந்தபோது, அவருக்குகடுமையான தாகம் ஏற்பட்டது. உடனே அவர் (அங்கிருந்து) ஒரு கிணற்றில் இறங்கி அதிலிருந்து (தண்ணீரை அள்ளிக்) குடித்தார். பிறகு (கிணற்றிலிருந்து) அவர் வெளியே வந்தபோது, நாய் ஒன்று தாகத்தால் தவித்தது. நாக்கைத் தொங்கவிட்டபடி ஈர மண்ணை நக்கிக் கொண்டிருந்தைக் கண்டார். அவர் (தம் மனத்திற்குள்) எனக்கு ஏற்பட்டதைப் போன்ற அதே (கடுமையான தாகம்) இந்த நாய்க்கும் ஏற்பட்டிருக்கிறது போலும் என்று எண்ணிக்கொண்டான். உடனே (மீண்டும் கிணற்றில் இறங்கித் தண்ணிரைத்) தன்னுடைய காலுறையில் நிரப்பிக்கொண்டு அதை வாயால் கவ்விக்கொண்டு மேலே ஏறி வந்து அந்த நாய்க்கும் புகட்டினார். அல்லாஹ் அவரின் இந்த நற்செயலை ஏற்று (அவரின் பாவங்களை) மன்னித்தான்'' என்று முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்.


இதை செவியுற்ற நபித்தோழர்கள், இறைத்தூதர் அவர்களே கால்நடைகள் (மற்ற பிராணிகளுக்கு உதவும்) விஷயத்திலும் எங்களுக்குப் பலன் கிடைக்குமா? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் (ஆம்) உயிருடைய பிராணி ஒவ்வொரு விஷயத்திலும் (அதற்கு உதவும் பட்சத்தில் மறுமையில்) அதற்கான பிரதிபலன் கிடைக்கும் என்று கூறினார்கள் (புகாரீ)

*“இஸ்லாத்தில் உளூ செய்வதற்கு சிறிது நீர் கிடைத்து, ஒரு விலங்கிற்கு நீர் கிடைக்காத போது, அந்நீரை விலங்கிற்கு புகட்டி தயமம் செய்ய வேண்டும் என்கிறது.”*

ஒருமுறை இரு கழுதைக் குட்டியையும் ஒரு பெண் கழுதைகளிடமிருந்து பிரித்த ஒருவரை பார்த்து நபி (ஸல்) அவர்கள் அவரைக் கண்டித்து அவற்றை தாயுடன் சேர்த்தார்கள். மிருகங்களை அளவுக்கு மீறி கடினமாக வேலை வாங்குவதை நபிகளார் தடுத்தார்கள். அதன் உடம்பில் சூடு போடுவது, அவைகளை ஊசி கொண்டு குத்துவது, வேகமாக விரட்டுவது, வேடிக்கை விளையாட்டுக்காக துன்புறுத்துவது போன்ற இரக்கமற்ற செயல்களை தடை செய்தார்கள்.

**விலங்குகள் மனிதனுக்காக படைக்கப் பட்டது என்றாலும், அதன் தேவைகளை சரிவர மனிதன் பூர்த்தி செய்ய வேண்டும். விலங்குகளிடம் மனிதன் எவ்வாறு நடக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது இஸ்லாம். அதனை உணவிற்காக அறுக்கும் போது பல வழிமுறைகளை கற்றுத் தருகின்றது. சித்ரவதை செய்யாது அறுத்தல், அறுக்கும் ஆயுதம் கூர்மையாக இருத்தல், விட்டு விட்டு அறுக்காது நிறுத்தாமல் அறுத்தல், அறுக்கும் முன் நீர் புகட்டுதல், விலங்குகளுக்கு எதிரில் கத்தியை தீட்டாது இருத்தல், ஏனைய விலங்குகளுக்கு முன் அறுக்காது இருத்தல் என பல சிறந்த வழிமுறைகளை கற்றுத்தருகின்றன.**


## இப்போது விற்பனையில்....





# அவர்கள் தயாராகி விட்டார்கள்..!

ஆமாம், உருமாறிய கொரோனா (டெல்டா வேரியண்ட் பிளஸ்) தயாராகிவிட்டதாம், மனித இனத்தின் மேல் இன்னொரு தாக்குதலைத் தொடுக்க!

**நாமும் தயாராவோம் அந்தக் கொரோனாவை வீழ்த்திக் காட்ட!**

தொற்றிவிட்டால் மரணத்தோடு போராட வேண்டும்.

தினமும் அதீதமான வேதனை, மன உளைச்சல், விரக்தி தொற்றியவருக்கு மட்டுமல்ல, சுற்றி இருக்கும் அனைவருக்கும்.

## அத்தனையையும் தவிடுபொடியாக்கிட ஒரு பேராயுதம்

முகக் கவசம் – சாதாரண மனிதர்களின் உயிர்க் கவசம். அணிந்தால் எந்தக் கொரோனாவும் கிட்டே வராது.

செலவு அதிகமில்லை. சாவுமில்லை. சுலப வைத்தியம். கட்டாயம் அணிவோம்.

### மகோன்னத சேவை

சென்றுபோன கொரோனா காலங்களில் முஸ்லிம் சமுதாயத்தின் அனைத்து அங்கங்களும் மக்கள் சேவையில் சிகரங்களை எட்டிப் பிடித்தன. ஜாதி, மதம், இனம், நிலம், மொழி என்ற எல்லா எல்லைகளையும் கடந்து, மருத்துவ மனைகள் முதல் மயானங்கள் வரை மகோன்னத சேவைகளைச் செய்தார்கள்.

அனைவருக்கும், அன்னமிடுதல் அவர்களின் அன்றாட சேவையாக இருந்தது.


அல்லாஹ்விடம் அளப்பரிய கூலிகளைப் பெற்றார்கள். இனியும் பெறுவார்கள்.

இன்னொரு முறை தயாராக இருப்போம்.

அல்லாஹ்வின் துணையோடு கொரோனாவை வெல்வோம்.

இன்ஷா அல்லாஹ்...

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் & நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

1. சிறையில் எனது நாட்கள் -
   ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 — ரூ. 90.00
2. ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹ்ம்மது — ரூ. 100.00
3. சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 — ரூ. 50.00
4. End of Casteism T.M. Mani பக்கம் -134 — ரூ. 50.00
5. அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹ்ம்மது, பக்கம் -48 — ரூ. 10.00
6. டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 — ரூ. 10.00
7. நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு
   - மு. குலாம் முஹம்மத் — ரூ. 60.00
8. மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 — ரூ. 80.00
9. தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 — ரூ. 20.00
10. செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 — ரூ. 40.00
11. கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 — ரூ. 250.00
12. சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 — ரூ. 15.00
13. ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 — ரூ. 40.00
14. சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 — ரூ. 50.00
15. நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 — ரூ. 175.00
16. தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 — ரூ. 110.00
17. தீண்டாமைக்குத் தீர்வு — ரூ. 30.00
18. பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹ்ம்மத் பக்கம்-163 — ரூ. 110.00
19. பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 — ரூ. 90.00
20. இஸ்லாமிய நாகரிகம் -
    முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 — ரூ. 130.00
21. கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 — ரூ. 70.00
22. எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி — ரூ. 50.00
23. சாதி ஒழிந்தது - கன்னடம், — ரூ. 50.00
24. அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் — ரூ. 20.00
25. கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 — ரூ. 30.00
26. முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் -
    செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 — ரூ. 15.00
27. இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 — ரூ. 50.00
28. இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் — ரூ. 40.00
29. இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 — ரூ. 30.00
30. இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? — ரூ. 50.00
31. இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 — ரூ. 60.00
32. இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 — ரூ. 70.00
33. தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் — ரூ. 30.00
34. திருக்குர் ஆன் கூறும் பொறுமை -
    டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி — ரூ. 80.00
35. 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? — ரூ. 220.00
36. ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் — ரூ. 20.00

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்-
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 16 ரூ. 10.00
38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? -
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் - பக்கம் :8 ரூ. 10.00
39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? -
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் - பக்கம் : 36 ரூ. 25.00
40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00
41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00
42. கூரியூர் ஜின்னா ஷஹீத் - மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00
43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00
44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00
45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்-
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00
02. மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள்-
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00
03. குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் -
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00
02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00
03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00
04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00
05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00
06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00
07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00
08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00
09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00
10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது - டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00
02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி - கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.